BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 05 Issue - 104 31 Friday October 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ

- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**

1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052






தமிழில் பேசி
தலைமுடி அலங்கரிக்க
அழையுங்கள் ரவி
07903 726 856

**Faircut 3 Barbers**
Tel: 020 8684 1103
379, Mitcham Road,
Croydon, CR0 3HP.

Opening Hours
Mon-Thurs 10am-7pm
Fri-Sat 10am-8pm
Sundays 10am-5pm

talk
One World One Phone
Friends & Family
0800 008 8450
0807 993 0190

**Unlimited Calls to Sri Lanka**
£10 PER MONTH

Go Online www.globaletalk.com

உங்கள் நாவிற்கு நற்சுவை தரும் தரமான உடனுக்குடன் தயாரித்த உணவு வகைகளையும் குடும்பத்துடன் வந்து சுவைத்து மகிழ நீங்கள் நாட வேண்டிய இடம்



Cuzini
22 The Boulevard, Crawley, West Sussex, RH10 1XP
Phone: 01293 533350
Email: info@mycuzini.com
Website: www.mycuzini.com

**ABBEY TRAINING.NET**

வகுப்புகள்
NCPLH Certificate Course
Life in the UK

**Off Licence / Restaurant**
வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் **Personal Licence & Premises Licence** எடுத்து தருவோம்

NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others

Call: S.Thavanessan (**NESS**)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**RAJA & CO SOLICITORS**

**We provide following Legal Services:**

Conveyancing:
Buying and Selling
**Houses, Flats & Business**

- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

| TOOTING | COLLIERS WOOD |
|---|---|
| 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG Tel: 020 8772 4900 | 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ Tel: 020 8543 4974 |

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

**Ahaa** TakeAway

உண்மையில் இது ஒரு அசல் TakeAway

**100 STRING HOPPERS - £13**
**Sothi+Sambol and Sambar Free**
**FRIDAY SPECIAL**
**SET MEAL**
**Rice and 4 Veg curry only £2.50**

Opening Times:
**10.am to 11 midnight (7 days a week)**

504 Northholt Road, South Harrow
Middlesex HA2 8HA
Opp.to NEETO



Tel: 020 8537 8250

RAJ LAW SOLICITORS
Criminal Defence Service
Community Legal Service

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal
- Serious Crime, Murder/Attempted Murder

We speak Tamil, French and Creole

Experts in Criminal Defence Service (UK)
M: 07947 641 876
T: 020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, **Tooting Broadway**, London SW17 9SH

24 hour police station emergency service




உங்கள் வியாபார நிறுவனத்தை இரகசியமாக இன்ரநெற் மூலமாக ஓடியோ வீடியோ உடன் உங்கள் வீட்டில் இருந்தோ கைத்தொலைபேசியிலிருந்தோ கண்காணிக்கும் வசதிகளை நாம் உடன் செய்து தருகின்றோம்



Security Systems, Digital Video Recorders, TFT Monitors, IP & Infra red Camaras, Anti-Vandel Domie Cameras, Access Control and alarm systems etc, etc

**THIRD EYE CCTV**
call Shankar on 07956 166 847 / 07944 774 763
or email : info@thirdicctv.co.uk
Visit now online shopping
www.thirdicctv.com



Shakthi's
36-37 Mornach Parade, London Rd
Mitcham, CR4 3HA
Tel:020 8648 0319

## ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

உங்கள் இல்லத்தில் நடைபெறும் அனைத்து மங்களகரமான வைபவங்களையும் காலத்தால் அழியாத காவியமாக துல்லியமாக மீண்டும் மீண்டும் பார்க்கத்தோன்றும் வகையில் வீடியோ மற்றும் புகைப்படங்களை எடுத்துக்கொள்ள நம்பிக்கையுடன் நீங்கள் நாடவேண்டிய இடம்

**KAGEE VIDEO VISION**

London, Brimingham, Milton Keynes

0121 777 2952 / 07947 319 631

web :www.kageevision.com Email: karan@kageevision.com

**SRI SOOBANA JEWELLERS**

22ct Gold & Silver

- தங்கம்+செய்கூலி அனைத்தும் £140 மட்டுமே
- எங்களிடம் அனைத்து ரக தங்க நகைகளையும் உறுதியான வேலைப்பாட்டுடன் உங்கள் எண்ணம் போல் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்கள் அனைத்துத் தங்க நகைகளையும் நம்பிக்கை உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

Tel: 020 8900 9009

123 Ealing Road, Wembley, Middlesex, HA0 4BP

Web : www.srisoobana-jewellers.co.uk

**DRIVING THEORY TEST TUITION IN TAMIL**

தமிழ் மொழி மூலமான தியறி ரெஸ்ற் ரியூசன்

ஆங்கிலம் வாசிக்கத்தெரியாது என்ற கவலையை விடுங்கள்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனி Computer இல் வைத்து தமிழில் விளங்கப்படுத்தி பரீட்சை எடுக்கும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்

புதிய HAZARD PERCEPTION TEST மூலமான பயிற்சிகள் வழங்கப்படும்

Computer மூலமான தியறி மாதிரி பரீட்சைகளும் (mock test) வழங்கப்படும்

தொடர்புகளுக்கு Mr S.RAVI (DSA Approved Driving Instructor)

07944 258 169 ( East London )

**UNITED TRAVEL**

web : www.utltd.com E.Mail : reservation@utltd.com

428 Rayners Lane, Pinner, Middlesex, HA5 5DX

ATOL PROTECTED — IATA

| COLOMBO | COCHIN TRIVANANDRUM | INDIA |
|---|---|---|
| 325+TAX<br>225+TAX 405+TAX<br>370+TAX 420+TAX | 325+TAX | CHENNAI 190+TAX<br>BOMBAY 199+TAX<br>DELHI 255+TAX |

Srilankan — Air India — KUWAIT AIRWAYS — Emirates — ETIHAD

CALL US NOW 0208 866 6006

*Please contact us for reservation & enquiries*

**SAM TRAVEL & TOURS**

www.samtravel.co.uk

803 Romford Road, London E12 5AN

Reservations: 020 8478 8911

Visa Service: 020 8553 9400

Email: sales@samtravel.co.uk

SAM TRAVEL & TOURS 35th ANNIVERSARY 1973-2008

★ ★ ★ CELEBRATING OVER 35 YEARS IN TRAVEL ★ ★ ★

AIR INDIA — AIR FRANCE — CATHAY PACIFIC — Philippine Airlines — Alitalia — Biman — UZBEKISTAN airways — EVA AIR

APPOINTED AGENT FOR

Emirates — IBERIA — KLM — Continental Airlines — Jet Airways — PIA — Qatar Airways — Gulf Air

ALL MAJOR AIRLINES

KUWAIT AIRWAYS — Lufthansa — THAI — Air Namibia — ROYAL BRUNEI — malaysia — SOUTH AFRICAN AIRWAYS — BRITISH AIRWAYS

- Dubai - £ 80+Tax
- Totonto - £ 99+Tax
- Colombo - £280+Tax
- Chennai - £ 120+Tax
- Kulampur - £ 240+Tax
- Singapore - £270+Tax
- Trivandrum - £235+Tax

- Specialist for worldwide flights and holidays with any airline, anywhere, anytime with lowest price guaranteed.
- Experienced multilingual staff
- Travel Insurance/Car Hire/Hotels
- Medical Holiday/Religious/Honeymoon Packages
- Umrah and Haj Services & Packages
- Visa Services to India, Schengen, Pakistan, Australia, China and Dubai
- Train Tickets to any parts of India.
- Online Bookings / Late Bookings.
- 'Fully Bonded for your Protection & Peace of Mind.'
- Registered Travel agent for the High Commission of India.

Special offer to any part of India £ 199+Tax

ATOL PROTECTED — IATA

0800 368 5088

*'24 hr call center - 7 days a week'*

Wishing you all a Happy Diwali & prosperous New Year

A MORESAND LTD GROUP OF COMPANIES

# பூவரசு




## சும்மா படபடப்பு மட்டும் போதாது ?

மேற்படி கட்டுரை உள்நோக்கிய விமர்சனமாக அமைந்திருந்த போதிலும், விடுதலைப்போரை பலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

வெற்றுக் 'கோசங்களாலும் அதீத நம்பிக்கையாலும் காரியம் நடக்காது, அனைவரதும் பங்களிப்பும் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளுமே இன்றைய தேவை என்பதை விளக்கியுள்ளார் கட்டுரையாளர் அநபாயன்.

*- சிவசண்முகமூர்த்தி, கிங்ஸ்ரன்*

## சுகம்பெற வேண்டுகிறோம்

ஒரு பேப்பரில் 'கடந்தது நடந்தது' பகுதியை எழுதி எம்மையெல்லாம் களிப்புறச் செய்த பாலச்சந்திரன் அண்ணா சுகவீனமுற்றுள்ளார் என்பதை அறிந்து கவலையடைந்தேன்.

தனக்கே உரித்தான பாணியிலான எழுத்துக்களின் மூலமும் நடிப்பின் மூலமும் எம் மனதில் இடம்பிடித்து விட்ட அந்தக் கலைஞர் வெகு விரைவில் சுகம்பெற பல்லாயிரம் தமிழ் உறவுகளுடன் இணைந்து நானும் பிரார்த்திக்கிறேன்.

*- சுகந்தி, ஸ்காபுறோ*

## பாமரன் அண்ணாவிற்கு ..

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் போராளி இயக்கங்களுக்கு ஆதரவாக செயற்பட்ட அனுபவங்களை சுவைபட எழுதி வருகிறீர்கள். மிக்க நன்றி.

இன்று மீளவும் தமிழகம் எழுச்சி பெற்று வருகிறது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். தமிழக மக்களிற்கு எங்களது போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளக்கும் வண்ணம் உங்கள் எழுத்துக்கள் அமைய வேண்டும் என விரும்புகிறோம். செய்வீர்கள்தானே அண்ணா?

*- நம்பி, கிறிக்கில்வூட்*

## சாப்பாடு தாங்கோ

நிலானி அக்காக்கு ரொம்ப நன்றியுங்கோ. உந்த கோழிப்புக்கையை வடமராட்சிக்குப் போயிருக்கும் போது எங்கயோ ஒரு நாள் சாப்பிட்டது. நல்ல ருசியா இருந்துச்சு உதை எப்படி செய்யுற என்று உந்த இணையம் எல்லாம் தேடினன் கிடைக்கவில்லை. நான் தேடிய குறிப்பை தந்த ஒரு பேப்பர் ருக்கு நன்றியுங்கோ.

அதோட உந்த மரவள்ளிக் கிழங்கு வடை அம்மா ஊருல இருக்கும் போது ஒரே செய்து தாறவா அதுவும் எனக்கு நல்ல விருப்பம். செய்முறைக்கு நன்றி. இப்படி நல்ல சாப்பாடா தாங்கோ. நாங்களும் செய்து பார்ப்பமில்ல

*- ராணி, ஸ்காபரோ*

## புட்டு புட்டு வைக்கிறார் சாத்திரி

பயோடேற்றா பகுதியும், அதற்கு வரையப்படும் படங்களும் அபாரம். ஒரு கொலத்திற்குள் உண்மைகளை புட்டு புட்டு வைக்கிறார் சாத்திரி. இதுகள் திருந்திற ரகம் இல்லா விட்டாலும், ஒரு பேப்பர் வாசிக்கிறவைக்காவது இதுகளின்ர வண்டவாளங்கள் விளங்கட்டும்.

*- மதிதரன், பாசல்*

## தனிப்பட்ட தாக்குதல் வேண்டாம்

சாத்திரியின் புதிய பகுதியான பயோடேற்றா தொடர்பான எனது கருத்தை முன்வைப்பதற்கே இந்த மடல்.

ஒருவரின் சமூகம் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதில் தவறில்லை. அவை எள்ளல் தொனிக்கும் விதமாக இது போன்ற பயோடேற்றாக்களாகவும் தருவதில் தவறில்லை.

ஆனால் அதற்குள் அவரது தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான விபரங்களைச் சேர்க்காமல் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். இதனைச் சாத்திரி அவர்கள் கருத்தில் கொள்வார் என்று நம்புகிறோம்.

*- கஜன், லெஸ்ரர்*

## புகுத்த வேண்டாமே

ஆகா! போன பூராயத்துக்குத் தான் அணிகள் அறிவோம் நல்ல ஒரு பகுதி என்று எழுதினனான். அதுதான் நாவூறு பட்டுட்டுது போல...

சபேசன் அணிகளைப் பற்றி அழகாகக் கூறிக் கொண்டு போட்டு தேவையில்லாமல் புராணம் ஆரியர் திராவிடர் என்ற பதங்கள் புகுத்தியது போல் உள்ளது.

இலக்கியப் பகுதிக்குள் இந்தத் தேவையில்லாத புகுத்தல்களைத் தவிர்த்து வழமை போல் அழகாக அணிகளைப் பற்றித் தொடர்ந்து கூற வேண்டுகிறேன்.

இலக்கியம் தொடர்பான எமக்கு எழும் சந்தேகங்களை தீர்த்துக் கொள்வதற்காய் ஒரு பகுதியை ஆரம்பித்தால் இன்னும் பிரயோசனமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

*- மாதங்கி, மார்க்கம்*

## வாட வைக்காதீர்

வழுதி அவர்கள் எழுதும் பழங்கள்ளுவை மீண்டும் சுவைத்ததில் மகிழ்ச்சி.

ஐயா ஒரு பேப்பர் காறரே. கள்ளுப் பிரியர்களான எங்களை இடையிடையே வாட வைப்பதைத் தவிர்த்து தொடர்ந்து தாருங்கள். பருகத் தயாராக இருக்கிறோம்.

*- சிவராசா, பிறீமன்*

## நஞ்சே அமுதம்

சிறிலங்காவில் தயாரிக்கப்படும் பிஸ்கற், சொக்கிளேட்டுகளில் மெலமைன் நஞ்சு கலந்திருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

சும்மா சொல்லக்கூடாது, அந்த நச்சுப் பொருளின் சுவையே தனி. இல்லையெண்டா இங்கு வகை வகையான பிஸ்கற்றுகளும் சொக்கிளேற்றுகளும் இருக்கேக்கை எங்கடை கடைக்காரர் அங்கையிருந்து இந்த நஞ்சுகளை இறக்கி விற்க நாங்களும் வாங்கி தின்றிருக்க மாட்டோம்.

*- பொன்மணி, பாக்கிங்*

## வெளிச்சத்துக்கு கொண்டு வாங்கோ

'வலைப்பதிவுகள்-அறிமுகம்' என்று யாழ்பாடி அவர்கள் ஊரோடி என்ற வலைத்தளத்தைப் பற்றி அறிமுகம் செய்து இருக்கிறார். உண்மையில் அருமையான ஒரு வலைப்பதிவு.

இப்படி இலை மறை காயாக இருக்கும் நல்ல பல வலைப்பதிவுகளை இந்தப் பகுதியூடாக வெளிக்கொணர்ந்து எல்லோரும் பயனடைய வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*- கரன், ஒட்டாவா*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகப் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

# சிவாவிற்கு பவா எழுதும்

## லெட்டர்.. மடல்.. கடிதம்.. காயிதம்...

அன்புள்ள சிவாவிற்கு

நான் நல்ல சுகமாய் இருக்கிறேன். நீயும் சுகமாய் இருப்பாய் எண்டு நம்புறன்.

கோடை காலம் தொடங்கினதுமே கலியாண வீடெண்டும் சாமத்திய வீடெண்டும் அரங்கேற்றங்கள் எண்டும் கோயில் திருவிழா எண்டும் வெளிக்கிட்டுத் திரிஞ்சதிலை ஆற அமர இருந்து உனக்குக் கடிதம் எழுத முடியாமல் பொயிட்டுது.

என்னதான் கொண்டாட்டங்கள் எண்டு வெளிக்கிட்டுத் திரிஞ்சாலும் ஊரிலை சனம் படுற கஸ்டங்களை நினைச்சால் ஒண்டிலையும் சந்தோசமாய் ஈடுபட ஏலாமல் கிடக்கு.

எங்கடை சனத்துக்கு ஏதாவது செய்ய வேணும் எண்ட ஆசையிலை இப்ப கனடாவிலை அடிக்கடி நிகழ்வுகள் நடத்திக் காசு சேத்துச் சொந்தங்களுக்கு அனுப்பி வருகினம். அனேகமா எல்லாக் கோயில்களிலையும் இது மாதிரியான விழாக்களை நடத்தி வாற ஆக்களிட்டைக் காசு சேத்து அனுப்பி வைக்கிறதைப் பாக்கச் சந்தோசமா இருந்தாலும் கோயிலுக்கெண்டு சேத்து வைச்சிருக்கிற சொத்துகளிலை கொஞ்சத்தையும் சேத்து அனுப்பி வைச்சால் இன்னும் நல்லா இருக்குமே எண்டு ஆக்கள் பேசிக் கொள்ளிறதும் காதிலை விழத் தான் செய்தது.

சிங்கள கிறிக்கெற் அணி கனடாவுக்கு விளையாட வந்ததைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பாய். சிங்கள அணி விளையாடின 3 நாளும் எங்கடை சனம் சாரி சாரியாப் போய் சிங்கள இனவெறி அரசாங்கத்தின்ரை மனித உரிமை மீறல்களுக்கெதிரா ஆர்ப்பாட்டம் நடத்தினவை. கனடாச் சட்டத்தையும் மதித்து உணர்வு பூர்வமாச் சனம் ஆர்ப்பாட்டத்திலை இறங்கியிருந்தது. ஆயிரக் கணக்கிலை சனம் கூடி எங்கடை பிரச்சினையை வெளிக்கொண்டு வந்ததைப் பாக்கச் சந்தோசமா இருந்தது.

ஆனால் இன்னும் மரத்துப் போய்க் கிடக்கிற தமிழர் எண்டு சொல்லிக் கொண்டு திரியிற கொஞ்ச மர மண்டைகள் போய் சிங்கள அணிக்குச் சப்போர்ட் பண்ணிக் கொண்டு நிண்டதைக் காண வயிறு பத்தியெரிஞ்சது. இதுக்குள்ளை தமிழர் மத்தியில் பிரபல்யமான, தமிழ் ஆக்களின்ரை தயவிலை தொழில் நடத்திக் கொண்டிருக்கிற பிரபல்யமான ஆக்களும் இருந்தவை.

மெல்ல மெல்லக் குளிரும் தொடங்கிட்டுது. இனி ஒண்டுக்கு நாலு உடுப்பைப் போட்டுக் கொண்டு 'விண்வெளியில் கோமாளிகள்' மாதிரித் திரிய வேண்டியது தான். அது சரி இஞ்சையாவது குளிருக்கு ஏற்ற மாதிரி உடுப்பைப் போட்டுக் கொண்டு இருக்கலாம். ஆனால் ஊரிலை எங்கடை சனம் மழைக்குள்ளை ஒதுங்கவும் இடமில்லாமல் அந்தரிக்குது எண்டதை நினைச்சால் தான் கவலையாக் கிடக்கு.

ஊர்க் கதைகளைப் பற்றி எழுதிக் கொண்டிருந்ததிலை எங்கடை கதைகளைப் பற்றி எழுத முடியேல்லை. என்ன செய்யுறது ஊர் நிலமை இப்படி இருக்கேக்கை வேறை என்னத்தைப் பற்றிக் கதைக்கிறது. சரி அடுத்த கடிதத்திலை என்ரை புதினங்களையும் உன்ரை கனடா வாற அலுவல்களைப் பற்றியும் எழுதிறன்.

*- பவா*



**Natural Herbal Medicine**

**GURUJI**
**S.L SAHADEVA RAJA (KANNAN)**

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

நாடி பிடித்துப்பார்த்தல் **இலவசம்**

இந்தியாவில் 8 தலைமுறையாக வைத்தியம் செய்தவர்கள் இப்போது லண்டனிலும் ! சந்தர்ப்பத்தை தவற விடாதீர் !!

ஆஸ்த்மா, தோல்வியாதி, புற்றுநோய், நீரிழிவு, இரத்த அலர்ஜி, மாதவிடாய்ப் பிரச்சினை, குடற்புண், மூலநோய், முடி உதிர்தல், மூட்டு நோ, தலைவலி, பக்கவாதம், நரம்பியல், ஞாபகமறதி, தும்மல், அலர்ஜி, எக்சிமா, பயம் மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியம் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

Come and meet the Group Leader tribalAdivasi Herbal Medical practitioner and get rellef from all kinds of diseases,illness diagnoised only by pulse reading,Giving wonderfull natural herbal treatment,Also Herbal Treatment for mor than 360 kinds diseases with out any side effects Asthma, Allergy, Diabetes, Arthritis (Join Pain), Fear, Memory Loss, Menstrual Problem, Ulcer, Dermatitis, All Type Piles, Kidney Stone, Cancer, Paralysis, Neuropathy, Nerous Weakness, Hair Fall, Ezema, Blood Allergy ,Headaches .

Evershine Dry Cleaner (Upstairs) 123 Mitcham Road, Tooting, London, SW17 9PE Near By Tesco

**MOB: 07918 995 631 & 07529 400 523**

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, OCTOBER 31, 2008, ISSUE 104

## இந்தியக் குமிழி உடைந்தது

கடந்த இருவாரங்களாக தமிழ் நாட்டில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடைபெற்று வந்த அமைதிப் போராட்டங்களும், தமிழக அரசியல் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்களும், இந்திய நடுவண் அரசின் இலங்கைத்தீவு தொடர்பான அணுகு முறையில் மாற்றத்தினை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பை பலரிடம் ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பில் முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்துக்கட்சி கூட்டமும், அக்கூட்டத்தில், விரைந்து நடவடிக்கை எடுக்க நடுவண் அரசுக்கு காலக்கெடு கொடுத்தமையும், அவ்விதம் தமது கோரிக்கைகள் செவிசாய்க்கப்படாவிடில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள் பதவி விலக விருப்பதாக அறிவித்தமையும், மேற்படி எதிர்பார்ப்பை அதிகரித்திருந்தது.

ஆனால் கடந்த வார இறுதியில் சிறிலங்கா தரப்புக்கும் இந்திய நடுவண் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களை தொடர்ந்து, நிலமை விட்ட இடத்திற்கு திரும்பியுள்ளது. கருணாநிதியும் தனது போராட்டங்களை கைவிட்டு கொங்கிரஸ் கட்சியின் தலைமையிலான இந்திய நடுவண் அரசுக்கான தமது ஆதரவு உறுதிப்படுத்தியுள்ளார்.

சிறிலங்கா தரப்பின் வெற்று வாக்குறுதிகளை நம்பி இந்திய ஆட்சியாளர்களும், பழுத்த அரசியல்வாதியான கருணாநிதியும் இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பார்கள் என்பதனை சராசரி அறிவுடைய எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதே சமயம் ஈழத்தமிழர்கள் படும் அவலத்தை, இந்திய ஆட்சி மையமும், கருணாநிதி உள்ளிட்ட சில தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் தமது அரசியல் இலாபத்திற்கு பயன்படுத்துகிறார்களா என்ற ஐயம் ஏற்படுவதும் இயல்பானதுதான்.

1987ல் மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த தமிழ் மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை விமானத்திலிருந்து வீசியெறிந்த 'ஒப்பரேசன் பூமாலை' நடவடிக்கை போலவே, 21 வருடங்களின் பின்னர், இன்னமும் இனவழிப்பினை எதிர்நோக்கியிருக்கும் தமிழருக்கு உணவு அனுப்பி அவர்களை 'காப்பாற்ற' இந்தியா முன்வந்துளது.

சிறிலங்கா இராணுவத்தை பலப்படுத்த ஆயுத தளபாடங்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டு, தமிழ் மக்களுக்கு உணவு வழங்க முன்வந்துள்ளதன் மூலம், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையிட்டு, இந்திய ஆட்சியாளர்களிற்கு எவ்வித கரிசனையும் இல்லை என்பதும், மாறாக இலங்கை தீவின் இனமுரண்பாடு விடயத்தில், சம்பந்தப்பட்ட அனைவரையும் உபயோகித்து தமது பிராந்திய நலனை மேம்படுத்தி வருகின்றனர் எனபதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஒரு வாரம் தாமதித்து வெளியிடுவதற்கு எங்களை மன்னியுங்கோ. ஐரோப்பாவிலையும் கனடாவிலையும் ஒரே நேரத்திலேயே பேப்பரை வெளியிட்டு வந்தோம் அண்மைக் காலமாய் சிறு இடைவெளிவிட்டு தாமதமாய் கனடாவிலை அச்சுக்கு அனுப்ப வேண்டியதாய் போயிடுச்சு. அதற்கு இந்த முறையுடன் முற்றுப்புள்ளி வைக்கலாம் என நினைக்கிறம்.*

*சுணங்கினதும் ஒரு வழிக்கு நல்லதுதான் போன கிழமை இருந்த அரசியல் நில்வரத்தை பார்த்து, அவை இவைக்கு எல்லாம் வாழ்த்துக் கவிதையள் எழுதி அனுப்பினவையள் அதுகளை கிழிச்சு குப்பையிலை போடுங்கோ, அதே ஆக்களை வார்ந்து தள்ளி ஒண்டு எழுதி அனுப்பிறம் பிரசுரியுங்கோ எண்டு சொல்லியிருக்கினம்.*

*பயோடேற்றாவை தொடர்ந்து பிரசுரிக்கிறதா விடுறதா எண்டு கேட்டிருந்தோம். எங்களுக்கு வந்து சேருகிற கருத்துக்களைப் பார்த்தால் அந்த பகுதியை இப்போதைக்கு நிறுத்தேலாது எண்டது மட்டுமல்லை, ஆக்களின்ரை பயோடேற்றா கிடைக்காமல் திண்டாட வேண்டியும் இருக்கும் போல இருக்கு.*

*பேப்பர் முழுக்க அவை அவையின்ரை அனுபவப் பதிவுகளாய் கிடக்குது எண்டு சிலபேர் குறைப்பட்டுக் கொள்ளினம். இது சிற்றிசன் ஜேர்னலிஸ்டுகளின் காலம். தினக்குறிப்பு எழுதியினமோ இல்லையோ வலைப்பதிவுகளை மறக்காமல் செய்யிற காலம், ஆகவே அனுபவப் பதிவுகளை பிரசுரியாதையுங்கோ எண்டு கேட்கிறது நியாயமில்லை. இல்லாட்டாலும், கள்ளமாய் மாங்காய் புடுங்கினது, பக்கத்து வீட்டு விசயனுக்கு காதல் கடிதம் எழுதினது, கந்தையா வாத்தியிட்டை அடிவாங்கினது, மாமாங்கப் பிள்ளையார் கோயிலடியிலை கிழங்கு வாங்கித் திண்டது, வல்லிபுரக் கோயில் தீர்த்த திருவிழாவிலை மள்ளாக்கொட்டையால் கலாவுக்கு எறிஞ்சது எண்டு எத்தினை பசுமையான நினைவுகளை விட்டுட்டு இங்கை வந்திருக்கிறம். அதை மீட்டிப் பார்க்க, ஒரு தளம் கொடுக்க வேண்டாமோ?*

*அடுத்தது பேச்சுத் தமிழிலை எழுதிறியள் அதாலை தமிழைக் கொலை செய்யிறியள் எண்டும் சிலபேர் கருத்துத் தெரிவிச்சிருக்கினம். நல்ல தமிழிலை எழுதிறதுக்கு எங்களுக்கு முடியாமல் இருக்கிறதாலைதான தெரிஞ்ச தமிழிலை எழுதிறம். மற்றும்படி தமிழைக் கொல்லுங்கோ எண்டு மகிந்த ஐயே எங்களுக்கு காசு தாறேல்லை.*

*நாங்கள் நடுநிலமையான ஆக்கள் கருத்துச் சுதந்திரத்திற்காய் உசிரையும் குடுப்பம் எண்டு நடுவிரலை கீறி சத்தியம் செய்யாட்டிலும் !?, சுதந்திரமான கருத்துக்களுக்கு நாங்கள் எப்போதுமே இடமளித்து வருகிறோம். ஆனால் அவை தமிழ்த் தேசியத்திற்கு ஊறுவிளைவிக்காமல் பார்த்துக் கொள்கிறோம். இதில் எவ்வித விட்டுக் கொடுப்பிற்கும் இடமில்லை என்பதனையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.*

*மீண்டும் சந்திப்போம்.*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

# Jihad, India and war in Sri Lanka

**By Kusal Perera**

Tamil Nadu has taken almost every one on its stride, politically. The Delhi government did not anticipate the Sri Lankan Tamil issue would provoke such a ruckus in TN to catch it off guard. Although the DMK and the AIADMK still don't sit together on the SL Tamil issue, the two rival leaders simply can not stop agreeing the SL Tamil conflict across the Palk Straits is of Tamilean concern. Thus it has compelled the Indian government to overtly intervene in stopping the war in favour of a peaceful political solution to appease TN politics.

Can India meet that challenge today ?

The government of SL has the advantage in having an India that's different from the Nehru-Gandhi era. Present India has broken away from the traditional anti-American bloc. Therefore it makes easy alliances with all those who see this new Indian stand as a new threat. Therefore the GoSL worked towards a new foreign alliance primarily with Iran, Pakistan, China and Russia that's comfortable without queries on HR violations allowed with impunity and a war that bleeds the public coffers blue, while the Delhi government was extremely cautious in developing open support to the Rajapaksa regime. It did not openly provide military assistance to this Rajapaksa government to carry on with its war, careful not to upset its TN partners in government. Meanwhile it could not ignore the possibility of Pakistan becoming a major influence with the Sri Lankan military establishment. Pakistan for India is a serious and a sensitive subject.

There is an unacknowledged yet a growing issue of Pakistani support for armed Islamic fundamentalists both in India and in Bangladesh. Almost six years ago in 2002, the Muslim Liberation Tigers of Assam (MULTA) an armed group from the Indian State of Assam was reported affiliated with Rohingya armed Muslim groups in a Bangladeshi Islamic umbrella organisation. Rohingyans have close ties with Al-Qaeda and the Harkat-Ul-Jihad-Al-Islami (Huji) of Pakistan. Huji is reported active in South India from as long ago as 1995. Though complex and complicated, India has its own reservations on how the Pakistani ISI works with Islamic Fundamentalists, ever since it expelled, Brig. Zahir-ul-Islam-Abbasi in 1988. He was ISI Station Chief at the Pakistani High Commission in Delhi. Abbasi was reportedly having direct links with the Huji. Pakistani army's links with different Islamic fundamentalist groups including Huji too have become a serious issue for India.

Pakistani presence in SL is not merely an ego issue for India. It has its long term politico – military reasons that for SL too should be very relevant and serious too. The issue is about intricate Jihadi webs that develop with Pakistani connections. Here's a quote on that. "It was Hamid Bakri (was arrested by the TN police during their investigation into the activities of the Muslim Defence Force), accompanied by one Zakkaria, who had met Abu Hamsa in Saudi Arabia and subsequently gone to Sri Lanka for another meeting, which did not materialise.......It should be evident that for some years now there have been indicators of the clandestine creation of a Jihadi web in Mumbai, South India and possibly in the Eastern Province of Sri Lanka, with the SIMI and the LET (both operating in Pakistan) playing an active role in this matter, either in tandem or separately of each other. It is also evident that much of the inspiration and financial support for this came from Indian and Pakistani Jihadi activists in Saudi Arabia and other Gulf countries.*(Intelibriefs – 'Jihadi Terrorism in South India – External Motivators' / Paper 271 – B. Raman)*

That political necessity was tied to the Indian government's psyche of being anti – LTTE, or more precisely anti – Prabha in all calculations regarding SL. The Indian government thus tried to ride two horses, at the same time and in opposite directions. It wanted the Rajapaksa regime to militarily finish off the LTTE and also devolve power. They therefore tried to tie up covert military and intelligence support to power devolution. The Indian experts perhaps took for granted they could compel the Rajapaksa government to compromise for full implementation of the 13th Amendment to the Constitution with their covert support for the war. This whole project once again is a disaster.

That's perhaps what covert interventions with governments like the Rajapaksa government eventually lead to. No covert assistance would leave any binding on any government, for that matter. None could openly admit giving or receiving such military and intelligence support. Thus it gave this Rajapaksa government the opportunity to bargain with India when necessary and then ignore the Indians too. This was very evident on the way the GoSL treated India with the signing of CEPA during the Indian PM Dr. Singh's visit to Colombo for the SAARC. It is evident also by the way GoSL plays between Pakistan and India now, with a quick visit to Pakistan by its Defence Secretary and only an invitation extended to Indian External Affairs Minister.

But the present Manmohan Singh government can not air drop or send humanitarian aid by boats as Rajiv Gandhi did in 1987 May. It can not intervene openly and in the manner it did with the Indo-SL Accord. It is very doubtful the Indian government could even resort to a "demarche" as in 1987 February. The Rajapaksa government, unlike JRJ's, has truly trapped the Indian government on the diplomatic front by keeping its doors open for dialogue with Indian counterpart(s). That approach helps this Rajapaksa government to kill time for its own agenda.

But TN pressure keeps pulling the Delhi leaders out of their covert support to the GoSL, to instead support a cease fire to save what TN says is a "genocide against SL Tamils". What now ? Can the Delhi experts carry that baggage as well ? What Indian experts on SL did not understand when they compromised covertly for war, is that any crushing of the LTTE militarily has to have a hyped anti – LTTE campaign that rejects devolution and stands for a strong Unitary State. It thus becomes a Sinhala campaign for war and automatically leaves out the Tamils and the Muslims from its ownership of the State.

A government that installs itself on such a Sinhalised premise, when supported even covertly for war could only become politically stubborn. With a politically impotent Opposition, it carries the Sinhala society too with it, for its own advantage. Thus the very Indian logic of pushing Pakistani interests out of the island State and having the LTTE militarily crushed on the way, has caught them on the pincers of TN politics and a shrewd SL government.

*(continued on page 16)*

# தீவிர இராணுவ மயப்படுத்தலை நீக்கும் பெயரில் முன்னெடுக்கப்படும் எத்தனம்

உதயன்

## ஆசிரியர் தலையங்கம்

இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் அதிகாரத்தில் இருந்து வரும் அரசியல் தலைவர்கள் எல்லாம் இனப்பிரச்சினைக்கான தமது தீர்வு என்ற பெயரில் பெரிய,பெரிய தத்துவங்களையும் கயிறுகளையும் அவ்வப்போது அவிழ்த்து விடுவது வழமை.

இலங்கையில் 'தார்மீக சமுதாயம்' ஒன்றை அமைக்கப் போகிறார் என சூளுரைத்தார் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக விளங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனா. கடைசியாக, மோசமான இன வன்முறைகளையும் கலவரங்களையும் சந்தித்து, பேரழிவை எதிர்கொண்டு, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களையும் இழந்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள் போன்ற கொடூரச் சட்டங்களை அனுபவிக்கும் அவலம்தான் அந்தத் தார்மீக சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் நோக்கம் கொண்ட ஆட்சியில் தமிழர்களுக்குக் கிட்டியது.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாஸா இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறையாக மூன்று 'C' திட்டத்தைத் தமது உத்தியாக முன்மொழிந்தார்.consultation (கலந்துரையாடல்), compromise (விட்டுக் கொடுப்புடன் கூடிய இணக்கம்), consensus (கருத்து ஒருமைப்பாடு) என்பனவே அவை என்றார். ஆனால் தாம் முன்னெடுத்த 'கலந்துரையாடல்' என்ற பேச்சுவார்த்தை நடிப்பில் அவர் விட்டுக் கொடுப்புடன் கூடிய நல்லிணக்கத்தையோ, கருத்தொருமைப்பாட்டையோ இலக்காக வெளிப்படுத்தவேயில்லை. அதனால் யுத்தமும், அழிவும், நாசமுமே அவரது ஆட்சியின் பெறுபேறுகளாக ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்தன.

அடுத்துத் தம்மைச் 'சமாதான தேவதை' ஆகக் காட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பின்னர் தனது போர்வெறி முகத்தை - சுயரூபத்தை - காட்டினார். 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற விநோத - விபரீத - கோட்பாட்டை முன்வைத்த அவர், அந்த யுத்தத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு மூன்று 'R' திட்டத்தையும் பிரேரித்தார்.

Relief (நிவாரணம்), Reconstruction (மீள் கட்டமைப்பு), Rehabilitation (புனர்வாழ்வு) என்பனவே அந்த மூன்றுமாகும். ஆனால், தமிழர் தாயகத்தில் இருந்த கட்டமைப்புகளையும் தமது போர்வெறித் தீவிரத்தால் அழித்து நாசம் செய்து, சின்னாபின்னமாக்கித் தமிழர்களின் வாழ்வைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியமை தவிர வேறு எதுவும் அவரது ஆட்சியில் நடக்கவேயில்லை.

**தமிழர்களின் சுதந்திரத்தைப் பறித்து, தமது தாயக மண்ணிலேயே அவர்களை சிறைவைத்து, அவர்களது நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடுகளைப் போடவைத்து, தத்தமது பாரம்பரிய பூமியில் இருந்து வேரோடும், வேரடி மண்ணோடும் அவர்களைப் பலவந்தமாக இடம் பெயரவைத்து, பேரவலக் கொடூரத்துக்குள் அவர்களை சிக்கப் பண்ணியுள்ளது.**

மேலும், தமது பதவிக் காலத்தில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசு சமரசத் தீர்வு காண எடுத்த முயற்சிகளையும், அந்த ஆட்சியை இரண்டு வருடங்களுக்குள் கலைத்துக் குழப்பியடிக்கவும் சந்திரிகா தவறவில்லை.சந்திரிகாவைத் தொடர்ந்து தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது சிங்கள - பௌத்த தீவிரவாத மற்றும் பேரினவாதப் போக்கைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றார்.

எனினும், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய வழி என்று - தமது முன்னைய ஜனாதிபதிகள் கூறியமை போன்று - இவரும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் தந்திரோபாயத் திட்டம் ஒன்றை முன்வைக்கப் பின்நிற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தமது திட்டத்தை நான்கு 'D' அடிப்படையிலானது என்று 'த ஹிண்டு' ஆங்கில நாளிதழின் ஆசிரியர் என்.ராமுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கின்றார்.

Demilitarisation (இராணுவ மய நிலையை நீக்கல்), Democratisation (ஜனநாயகமயப் படுத்தல்), Development (அபிவிருத்தி), Decentralisation (அதிகாரப் பகிர்வு) என்று தமது வழிமுறைத் திட்டத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இதில் புலிகளின் பிடியிலிருந்து தமிழர் பிரதேசத்தை விடுவித்தலை 'இராணுவ மயப்படுத்தலை நீக்கல்' என்ற தனது செயற்பாடாக அர்த்தப்படுத்துகின்றார் அவர்.


ஆனால், வடக்கு - கிழக்கில் 'மனிதாபிமானப் பணி' என்ற விசித்திரமான பெயரோடு இந்த அரசினால் முன்னெடுக்கப்படும் தீவிர யுத்த நடவடிக்கை, தமிழர்களின் சுதந்திரத்தைப் பறித்து, தமது தாயக மண்ணிலேயே அவர்களை சிறைவைத்து, அவர்களது நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடுகளைப் போடவைத்து, தத்தமது பாரம்பரிய பூமியில் இருந்து வேரோடும், வேரடி மண்ணோடும் அவர்களைப் பலவந்தமாக இடம் பெயரவைத்து, பேரவலக் கொடூரத்துக்குள் அவர்களை சிக்கப் பண்ணியுள்ளது.

தமிழர் தாயகத்தைப் பிரதேசங்களாகப் பிரித்து, வலயங்களாக வகுத்து, இராணுவ அரண்களையும் முகாம்களையும் அமைத்து, முட்கம்பி வேலிகளால் விலங்கிட்டு, சோதனைச் சாவடிகளால் நிறைத்து, வெள்ளைவான் கொடூரங்களை அரங்கேற்றி, கடத்தல், கப்பம் பெறல், நீதிக்கு முரணான கொலைகள் போன்றவற்றை இடம்பெற அனுமதித்து, முழுத் தமிழர் தாயகத்தையுமே இராணுவ வெறிப் பிடிக்குள் சிக்கவைக்கும் கைங்கரியத்தை முன்னெடுக்கின்ற மஹிந்தரின் அரசு, அதன் மூலம் தமிழர் தாயகத்தை முழு இராணுவ மயப்படுத்துகின்றது.

இப்படித் தமிழர் தாயகத்தை முழு அளவில் இராணுவ மயப்படுத்திக் கொண்டே, அதனைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்து அங்கு இராணுவ மயநிலை நீக்கலை மேற்கொள்ளப் போகின்றார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பது அர்த்தமற்றது. அது ஏமாற்றும் தந்திரமாகும்.

# Chomsky on US President Candidates





In view of the US presidential election, which takes place on 4th November, we reproduce the views of an American philosopher Noam Chomsky, on the main contenders Barak Obama and John McCain. The interview was conducted by Vincent Navarro for the Progressive Summer University of Catalonia (UPEC) on May 13, 2008.

*- Oru Paper*

Paralleling my argument, Chomsky argues that "Obama's handlers, the campaign managers, have created an image that is essentially a blank slate. In the Obama campaign the words are hope, change, unity – totally vacuous slogans said by a nice person, who looks good and talks nicely – what commentators call 'soaring rhetoric' – and you can write anything you like on that blank slate."

According to Chomsky, "support for Obama is a popular phenomenon," which "reflects the alienation of the population from the institutions. People are grasping at a straw: here's a possibility that maybe somebody will stand up for what they want."

He notes the irony of the comparison with Reagan and Kennedy, which Chomsky says are "media constructions." Reagan "probably didn't even know what the policies were, but he was a creation of the media. He wasn't particularly popular, incidentally, but the media created the image of this wonderful cowboy who would save us, and so on and so forth." The men surrounding Kennedy were the first ruling group to understand the power of television and they created a kind of charisma through good public relations: the image of Camelot, this marvelous place, with wonderful things happening, and a great president. When you look at the actual actions, it's grotesque. Kennedy is the president who invaded South Vietnam and launched a major terrorist war against Cuba, and we could go on and on about it. His administration was responsible for establishment of the Brazilian neo-Nazi dictatorship. The coup took place right after Kennedy's assassination, but the ground was prepared by the Kennedys and led to a horrible plague of repression over Latin America, and on and on. But the image of Camelot is there, and imagery is very important when you are trying to control a dissident population.

Chomsky continues,

[T]he Obama phenomenon, I think, reflects the alienation of the population that you find in the polls: 80% say the country is run by a few big interests. While Obama says we are going to change that, there's no indication of what the change is going to be. In fact, the financial institutions, which are his major contributors, think he's fine, so there's no indication of any change. But if you say "change," people will grasp at it; you say "change" and "hope," and people will grasp at this and say, OK, maybe this is the savior who will bring about what we want, even though there is no evidence for it. ... So I think the Obama phenomenon and people's alienation go hand in hand.

Chomsky reflects on McCain, as well:

McCain is another example of very effective propaganda-creation imagery. I mean, suppose there was a Russian pilot who was bombing civilian targets in Afghanistan and was shot down and tortured by the American-run Islamic fanatic terrorists there. Would we say he's a war hero? Would we say he's an expert in strategic and security issues, because he was a bomber of civilian targets? We wouldn't. But this is the image that's been created of McCain. His heroism and his expertise and strategy are based on the fact that he was bombing people from 30,000 feet and he was shot down. It's not nice that he was tortured, it shouldn't have happened, it was a crime, and so on. But that doesn't make him a war hero or a specialist in foreign policy. That's all a public relations creation.

சற்றும் பிசகாமல்
சங்கதனை
எடுத்தாத
வெற்றியே - நீ
விரைந்து
வந்துவிடு

ஒரு பேப்பர்
ORU PAPER

**ஒரு பேப்பர்**
ORU PAPER

*எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!*

ஆசிரியர் குழு:
லண்டன்
**சேயோன் - அ.இரவி**
**அகிலன் - மயூரன்**

கனடா
**தயா - மணி**

பாரிஸ்
**சிறி**

ஜேர்மனி
**சபேசன் - சாந்தி**

சுவிஸ்
**சயந்தன்**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

மக்கள் தொடர்பு
**பாலா**

விளம்பரம்
**கௌரி - சசி - நிஷா - சுபா**

அச்சு
**குமார் (ஜேர்மனி)**

வடிவமைப்பு
**jasmine studio**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**முருகானந்தன்**

வழங்கல்
**உதயகுமார்-ராஜு-கரன்**

**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277

தொலைநகல் (Fax)
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**Oru Paper**
**45'B' Crusoe Road**
**Mitcham CR4 3L J**
**Surrey**

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# அண்ணன் உள்ளான்; ஏன் அஞ்சுவான்?

'தம்பி உள்ளான் படைக்கு அஞ்சான்' என்றும் 'தம்பி உள்ளான் சண்டைக்கு அஞ்சான்' என்றும் எம் ஊரில் நாம் அடிக்கடி கேட்பதுண்டு. அதன் பொருள் என்ன? தம்பி இருந்தால் ஒரு துணிச்சல். அவ்வளவுதான். இப்பொழுது எமக்குக் கிடைப்பது ஒரு துணிச்சல் என்றல்ல. சஞ்சலப்படுகிற மனதுக்கு ஒரு சாந்தி. எமக்கென்றும், ஏன் என்று கேட்க சொந்தச் சகோதரர்கள் இருக்கின்றனர். உறவுகள் இருக்கின்றனர்.

'தூரத்திலிருந்தெம் துயரை அறிந்ததுமே
ஓரத்தினில் வந்து உதவி புரிந்தார்கள்
வாரப் பாட்டோடு மனிதர்கள்'

என்ற மகாகவியின் பாடலொன்றே இப்போது நெடுகலும் என் நினைவில் வருகிறது. உணர்வும், உணர்ச்சியும் ஒரு சேரப் பொங்க, புளுகத்தில் இருக்கிறோம். நாம் துன்பத்தில் சாதல் கண்டு சொந்தச் சகோதரர்கள் துடிக்கிறார்கள்.

இந்த மாதம் இருபதாம் திகதி தமிழ்நாடு கோவையில் உள்ள தோழர் பாமரன் அவர்களுடன் உரையாடினேன். தமிழ்நாட்டில் உள்ள மக்கள் எழுச்சி பற்றி நிறையச் சொன்னார். 1983ம் ஆண்டளவில் வந்த எழுச்சி போல இப்பொழுதும் பேரெழுச்சி ஒன்று வந்துள்ளது என்றார்.

ஈழத்தமிழர் குறித்து தமிழ் நாட்டுத் தமிழர் பெரும்பாலானோர் உணர்வுபூர்வ அணுகுமுறையைக் கொண்டுள்ளனர்.

கோவைக்கு அருகில் சத்திய மங்கலம் என்னும் சிறிய கிராமத்தில் ஈழத் தமிழர்களுக்கான பட்டினிப் போராட்டம் நடைபெற்றதாகவும், அதில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனரென்றும், அதில் பெரும்பான்மையோர் பெண்கள் என்றும் சொன்னார்.

ஒரு சிறிய கிராமத்திலேயே இவ்வாறு உணர்வு பெருக்கெடுக்கிறது என்றால், தமிழ் நாட்டுத் தமிழரின் உணர்ச்சி வேகத்தை நாம் கணிப்பிடுவது அவ்வளவு கடினமல்ல.

செஞ்சோலை வளாகத்தில் குண்டு பாய்ந்து, பிஞ்சுகள் அறுபதின்மர் படுகொலை செய்யப்பட்ட போதே தமிழ்நாட்டில் கொந்தளிப்பான சூழல் உருவாயிற்று. முன்னாள் அரசியற் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் மறைவின் போது தமிழ்நாடே அழுதது. அவற்றின் தொடர்ச்சிதான் இந்த எழுச்சி.

நான் நம்புகிறேன் இந்த மக்களின் எழுச்சிதான் அரசியற்கட்சிகளையும் ஆட்டம் காண வைக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மனிதச் சங்கிலி போராட்டம் ஒன்றை அறிவிக்க வைத்ததும் அதுதான்.

**சற்று மாறுதலுக்காக**
எழுதுவது: **சேயோன்**

பழநெடுமாறன், வைகோ, சுபவீ, திருமாவளவன், அறிவுமதி, வீரமணி, ராமதாஸ், கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், தியாகு, சீமான், இவர்கள் இயல்பிலேயே தமிழுணர்வாளர்கள், ஈழத்தமிழர் போராட்டம் மீது ஆழ்ந்த அக்கறையும், ஆதரவும் கொண்டவர்கள்.

**மத்திய அரசின் நிர்ப்பந்தத்தில் கலைஞர் வழி தவறிவிட்டார். உணர்வென்று ஓங்கிய குரல் உடனடியாகவே ஓய்ந்துபோனது. ஆயினும் என்ன தமிழ்நாட்டு மக்களின் உணர்வென்னும் வெள்ளம் வடியப் போவதில்லை என்பதே எம் ஆறுதல்.**

இவர்களது தொடர்ந்தேர்ச்சியான போராட்டமே தமிழ்நாட்டு மக்களை இந்தளவு எழுச்சி கொள்ள வைத்தது. இவர்களுக்கு என்றென்றும் ஈழத் தமிழர் நன்றிக்கடன் பட்டிருப்பார்கள். ஒருபோதும் மறக்கவும் மாட்டார்கள். மனசார வாழ்த்துவார்கள். இவர்கள் இல்லாமல் இந்த எழுச்சி இல்லை.

இன்னொரு புறமும் உண்டு. அது சுப்பிரமணிய சுவாமி, சோ, ஜெயலலிதா என்ற பிராமணிய சக்திகள். 'அதுகளை' நாம் புறங்கையால் தள்ளிவிடலாமா? தமிழ்நாட்டு எழுச்சிக்கு முன்னர் 'அதுகள்' செத்த பாம்புகள். இந்த மக்களின் எழுச்சி கண்டு ஜெயலலிதா ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக 'ஏதோ' சொல்லத் தொடங்கினார். ஒரு வரிதானும், சொல்லவும் இந்தப் பார்ப்பனிய சக்திகள் விடவில்லை. அவர்களை நாங்கள் விடுவோம்.

தமிழ்நாட்டுத் தமிழர்களின் எழுச்சி வெள்ளத்தில் கலைஞரும் அடிபட்டுப் போனார். இந்த எழுச்சி அவரை ஆவெசமான நிலைப்பாட்டையும் எடுக்க வைத்தது.

அது மெத்த மகிழ்வென்று நாமிருக்க மத்திய அரசின் நிர்ப்பந்தத்தில் கலைஞர் வழி தவறிவிட்டார். உணர்வென்று ஓங்கிய குரல் உடனடியாகவே ஓய்ந்துபோனது. ஆயினும் என்ன தமிழ்நாட்டு மக்களின் உணர்வென்னும் வெள்ளம் வடியப் போவதில்லை என்பதே எம் ஆறுதல்.

தமிழ்நாட்டுத் தமிழர்களின், தமிழ்நாட்டுத் தலைவர்களின் எழுச்சி கண்டு, சிறிலங்கா சிங்கள அரசு திணறுகின்றதல்லவா? அதுதான் எங்களுக்குத் தேவை. ஈழத்தமிழர்களுக்கு ஏதும் செய்தால் தமிழ்நாட்டுத் தமிழர்கள் பொங்கி எழுவர் என்று சிங்களம் அஞ்சுகிறதல்லவா? அதுதான் நமக்குத் தேவை. தமிழ்நாட்டுப் பொங்கு தமிழரைப் பார்த்து இந்திய மத்திய அரசு, ஒரு கணமாவது குழம்புகிறதல்லவா? அதுதான் நமக்குத் தேவை.

நமது தேவைகள் அப்படி இருக்கையில், நமது பாழ்பட்டுப் போன புத்தியால் ஒன்றையும் குழப்ப வேண்டாம். அவர் அதற்காகத்தான் ஆதரிக்கிறார்; இவர் இதற்காகத்தான் ஆதரிக்கிறார் என்று எங்கள் ஊகங்களை இப்போது அள்ளித் தெளிக்க வேண்டாம். இப்போது இவர் வருகிறாரல்லவா? அதுதான் நமக்குத் தேவை. அவர் ஏன் வருகிறார்? நோக்கம் என்ன என்ற கேள்விகள் கேட்டு வருபவர்களை அடித்துத் துரத்த வேண்டாம்.

தமிழ்நாடு இப்போது எங்களுக்காக ஓங்கிக் குரல் கொடுக்கிறது. எங்கள் நெஞ்சார்ந்த நன்றியையும் மகிழ்வையும் சொல்லுவோம்.

தமிழ்நாட்டின் திசை பார்த்து நாம் கைகளையும் மனசையும் ஒரு சேரக் கூப்புவோம்.

# தன்னம்பிக்கையும் கர்வமும்

தன்னம்பிக்கைக்கும் கர்வத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் நிறைய பேருக்குத் தெரிவதில்லை.

இரண்டுக்கும் இடையே நூலிழை வித்தியாசம் தான் இருப்பது போலத் தோன்றினாலும் அவை தரும் விளைவுகளில் மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இருக்கிறது.

'என்னால் முடியும்' என்று நினைப்பது தன்னம்பிக்கை. 'என்னால் மட்டுமே முடியும்' என்று நினைப்பது கர்வம்.

தன்னம்பிக்கை எல்லா சாதனைகளுக்கும் மூல காரணமாக உள்ளது. கர்வம் எல்லா அழிவுக்கும் காரணமான விஷமாக உள்ளது.

இதை விளக்க உதாரணங்களுக்குப் பஞ்சமில்லை என்றாலும் இந்த இரண்டுமே ஒரே நபரிடத்தில் எப்படி விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதைக் காண வேண்டுமென்றால் ஹிட்லரின் வாழ்க்கையைப் பார்த்தால் போதும்.

அசாதாரணமான அறிவும்,தன்னம்பிக்கையும் கொண்ட ஹிட்லர் நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளும் முன் ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருந்தது. நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமாக இருந்தது. ஆனால் தன்னால் நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை திடமாக அவரிடம் இருந்தது.

1933ல் ஹிட்லர் தன் நாட்டு மக்களிடம் கூறினார். 'எனக்கு நான்கே நான்கு வருடங்களைக் கொடுங்கள்.' சொன்னபடி நாட்டின் தலைவிதியை மாற்றிக் காட்டினார். எழுபது லட்சம் பேர் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருந்த நாட்டில் தொழிற்சாலைகளையும், வாணிப அபிவிருத்தியையும் ஏற்படுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கினார். நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிக நல்ல நிலைக்கு உயர்த்தினார். எல்லாம் அவரது தன்னம்பிக்கை செய்து காட்டியது.

ஆனால் அதே தன்னம்பிக்கை கர்வமாக மாற ஆரம்பித்தவுடன் அழிவும் ஆரம்பித்தது. தன்னை மிஞ்ச ஆளில்லை என்ற எண்ணம் வலுப்பட ஆரம்பித்தவுடன் அவர் எடுத்த முடிவுகள் அவரது நாட்டை மட்டுமல்லாமல் உலகத்திலேயே பேரழிவுகளை ஏற்படுத்தின.

**தன்னை மிஞ்ச ஆளில்லை என்ற எண்ணம் வலுப்பட ஆரம்பித்தவுடன் ஒருவர் எடுக்கும் முடிவுகள் அவருக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும் அழிவைக கொண்டு வருகிறது**

இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட அழிவுகளை இன்னமும் கூட சரியாக கணிக்க முடியவில்லை என்று வரலாற்று வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

ஹிட்லரின் வாழ்வில் மட்டுமல்ல ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் இந்த இரண்டுமே இதே விளைவுகளையே ஏற்படுத்தக் கூடியவை. அதுவே இயற்கையின் நியதி.

எனவே தன்னம்பிக்கையுடன் இருங்கள். அது தான் உங்களை உயர்த்தக் கூடியது. உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கப் போவதும் அந்த தன்னம்பிக்கை தான். ஆனால் அது கர்வம் என்ற விஷமாக மாறி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

தன்னை உயர்வாக நினைக்கும் அதே சமயம் மற்றவர்களைத் தாழ்வாக நினைக்கவும் ஆரம்பித்தால் கர்வம் நுழைய ஆரம்பிக்கிறது என்று அர்த்தம். தன் சாதனைகளைப் பெருமைப்படுத்தியும், மற்றவர் சாதனைகளை சிறுமைப்படுத்தியும் நினைப்பதும் கர்வமே. தன் தவறுகளை தவறுகளே அல்ல என்று சாதிப்பதும் கர்வத்தின் ஒரு குணமே.

மற்றவர்களுடைய சிறு தவறுகளையும் சுட்டிக் காட்டி மகிழ்வதும் கர்வத்தின் தன்மையே. தனக்கு எதிரான எதையும் சகிக்க முடியாததும், மற்றவர் சாதனையை ரசிக்க முடியாததும் கர்வத்தின் செயல்களே.

அடிக்கடி மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது போல, மேலே சொன்ன கர்வத்தின் அடையாள குணங்கள் நம்மிடம் இருக்கிறதா என்று பரிசோதித்துக் கொள்வது நல்லது. அடைந்த உயர்வில் இருந்து சறுக்கி விழாமல் இருக்கவும் மேலும் உயரவும் அது தான் ஒரே வழி.

தன்னம்பிக்கைக்கும் கர்வத்துக்குமிடையே இருப்பது ஒரு சிறிய இடைவெளி தான் என்பதும் உண்மைதான்.

ஆனால் அந்தச் சிறிய இடைவெளி தாண்டப்படும் போது அதனால் எற்படும் விளைவுகள் மிகவும் வேறுபாடானவையாக இருக்கிறது என்பதை நினைவில் கொண்டால் தன்னம்பிக்கை கர்வமாக மாறாமல் இருக்கும்

யானைக்குத் தும்பிக்கையைப் போல ஒரு மனிதனுக்குப் பலத்தைத் தருவது நம்பிக்கை என்பதில் இருகருத்து இருக்க முடியாது. ஆனால் அந்த தன்னம்பிக்கை கர்வமாக மாறுவது என்பது அந்தத் தும்பிக்கையால் யானை சேற்றை அள்ளித் தன் தலையில் போட்டுக் கொள்வதற்கச் சமனானது என்பதை நினைவில் கொண்டு தன்னம்பிக்கை உள்ளவர்களாய் மிளிர்வோம்.

- *என்.கணேசன்*

# கலைஞரின் முடிவு நியாயமா?

இலங்கையில் போர்நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளை இந்திய அரசு செய்யாவிட்டால் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைராஜினமாச் செய்வார்கள் என்று மத்திய அரசுக்கு விதிக்கப்பட்ட கெடு முடிந்து விட்டது.

ஆனால் அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றாத நிலையில், தற்பொழுது திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகும் முடிவை ஒத்திப் போட்டிருக்கிறார்கள் அல்லது கைவிட்டு விட்டார்கள். இது பல ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையை சற்றுக் கவனித்துப் பார்த்தால், திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை ராஜினமாச் செய்வது நல்லது அல்ல என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை ராஜினமா செய்தால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பரப்புரைகளை ஒரு குறிப்பிட்டளவிற்கு அனுமதித்துள்ள கலைஞரின் ஆட்சி இல்லாமல் போவதோடு, கலைஞரையும் இந்தத் தள்ளாத வயதில் சிறையில் தான் நாம் பார்க்க வேண்டி ஏற்படும்.

இதை நாம் சற்று விளக்கமாகப் பார்க்க வேண்டும். முதலில் தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவார்கள் என்று அனைத்துக் கட்சி மாநாட்டில் தீர்மானம் எடுத்தார்கள். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று வருகின்ற பொழுது, திமுக, தமிழ்நாடு காங்கிரஸ், பாமக, இரண்டு கம்யூனிசக் கட்சிகள், மதிமுக என்று அனைத்துக் கட்சிகளிலும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணக்கில் வருவார்கள்.

ஆனால் இரண்டு நாட்களிலேயே காங்கிரஸ் கட்சி மாற்றிப் பேச ஆரம்பித்து விட்டது. டெல்லியைக் கேட்டுத்தான் முடிவு சொல்ல வேண்டும் என்று கூறி விட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அனைத்துக் கட்சி மாநாட்டில் எடுத்த முடிவிற்கு ஏற்றபடி தொடர்ந்தும் இருந்திருக்குமாயின் நிலைமை வேறு மாதிரி போயிருக்கும். உண்மையில் தமிழ்நாடு காங்கிரஸ் கலைஞரின் முதுகில் குத்தி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

காங்கிரஸ் கட்சியை எதிர்த்துக் கொண்டு, கலைஞரால் தமிழ்நாட்டில் தொடர்ந்து ஆட்சி நடத்த முடியாது. திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகி, காங்கிரஸின் மத்திய அரசுக்கு நெருக்கடியை கொடுத்தால், தமிழ்நாட்டில் உள்ள காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களும் கலைஞரின் அரசுக்கு கொடுக்கும் ஆதரவை திரும்பப் பெற்று, கலைஞரின் ஆட்சியைக் கவிழ்ப்பார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியால் கலைஞரின் ஆட்சியைக் கவிழ்க்க முடியாது போனாலும் கூட, மத்திய அரசு மீண்டும் விடுதலைப் புலிகளைச் சாட்டியே கலைஞரின் அரசை கலைத்து விடும்.

இந்திய அரசின் ஆயுட்காலம் இன்னும் ஆறு மாதங்கள்தான். அது கவிழ்ந்தாலும் கூட காங்கிரஸ் கட்சி பெரிதாக கவலைப்படப் போவது இல்லை. ஆனால் தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தல் 2011இல் தான் வருகிறது. இன்னும் மூன்று ஆண்டுகள் கலைஞரின் ஆட்சி தமிழ்நாட்டில் இடம் பெற இருக்கிறது. தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டால், அது கலைஞருக்கு பெரும் இழப்பாக இருக்கும். விரும்பத்தாகத பல விளைவுகளும் ஏற்படும்.

தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டால், மீண்டும் கலைஞரால் ஆட்சிக்கு வரமுடியாதா என்ற கேள்வி சிலருக்கு எழுலாம். அதனுடைய பதில் இன்றைய நிலையில் இல்லை என்பதே.

தமிழ்நாடு மக்கள் ஒரு போதும் ஈழத் தமிழர் விவகாரத்தின் அடிப்படையில் தேர்தலில் வாக்களிப்பது இல்லை. தமிழீழ மக்களுக்கு ஆதரவு கொடுத்தாலும், தமிழ்நாட்டை ஆள்வதற்கு யார் பொருத்தமானவர்கள் என்ற விடயத்திற்கே முன்னுரிமை கொடுப்பார்கள். தமிழீழத்தையும் தமிழ்நாட்டு அரசியலையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ள மாட்டார்கள்.

இப்பொழுது தமிழ்நாட்டு மக்கள் கலைஞரின் தலைமையில் நடக்கும் ஆட்சி பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் திமுக அரசு மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள் என்பதை திமுகவை சேர்ந்தவர்களே ஒத்துக் கொள்கிறார்கள். மக்கள் திமுக அரசு மீது கோபத்தில் இருப்பதற்கு மின்வெட்டும், விலைவாசி உயர்வும் முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் தினமும் பல மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. பல இடங்களில் 12 மணி நேரம் மின்வெட்டு இருப்பதாக சொல்கின்றார்கள். திடீர் திடீரென்று மின்சாரம் இல்லாமல் போகின்றது. எப்பொழுது மீண்டும் மின்சாரம் வரும் என்று தெரியாத நிலை. இதனால் தமிழ்நாட்டு மக்கள் பல விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். இது மக்களை அரசின் மீது கடும் கோபம் கொள்ளச் செய்திருக்கின்றது.

மின்வெட்டுக்கு திமுக அரசு மட்டும் காரணம் அல்ல. இதே நிலை கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் இருக்கின்றது. அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஏற்றபடி மின்உற்பத்தி அதிகரிக்கப்படுவதற்கு முன்னைய மத்திய மாநில அரசுகள் சரியான நடவடிக்கை எடுக்காததே இதற்கு காரணம்.

**அரசியல் அலசல்**

**வி.சபேசன் (ஒரு பேப்பர் - ஜெர்மனி)**

முன்பு இருந்த அதிமுக ஆட்சி மின்சாரத்தை சேமித்து வைத்திருந்திருக்க வேண்டும். அதே போன்று திமுகவும் ஆட்சிக்கு வந்தவுடன் மின்சாரத்தை சேமிக்கத் தொடங்கியிருக்க வேண்டும். யாரும் பெரிதாக அக்கறை செலுத்தியதாக தெரியவில்லை. தவறு அனைவர் மீதும் தான்.

ஆனால் தமிழ்நாட்டில் தற்பொழுது திமுக ஆட்சியில் இருப்பதால், அவர்கள் மீதே மக்களின் கோபம் திரும்புகின்றது.

கலைஞர் இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குவது பற்றியும் இன்றைக்கு எதிர்மறையான விமர்சனங்களே இருக்கின்றன. அனைவரும் தொலைக்காட்சி பார்ப்பதால்தான் மின்சாரம் போதவில்லை என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அத்துடன் இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குவதில் பல குளறுபடிகள் நடப்பதாகவும் குற்றச்சாட்டுகள் வருகின்றன.

விலைவாசி உயர்வும் மக்களைப் பாடாய்ப் படுத்துகிறது. ஒரு ரூபாய்க்கு அரிசி வழங்கியும், காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்து போய் நிற்கின்றது. இவைகள் எல்லாம் திமுக அரசு மீது மக்களை கடும் அதிருப்தி கொள்ளத் செய்திருக்கிறது.

இந்த நிலையில் திமுக அரசு கவிழ்ந்தோ, அல்லது கலைக்கப்பட்டோ தமிழ்நாட்டிற்கு தேர்தல் வந்தால், ஜெயலலிதாவின் அதிமுகவே அதிக இடங்களைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றும் என்கின்ற நிலைமை இருக்கிறது.

ஜெயலலிதா முதல்வரானதும் அவர் செய்கின்ற முதல் வேலையாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்தார் என்ற குற்றச்சாட்டில் கலைஞரை கைது செய்து உள்ளே தள்ளுவதாகவே இருக்கும். அப்படியே திருமாவளவன், பாரதிராஜா, ராமநாராயணன் என்று எல்லோரும் உள்ளுக்குப் போக வேண்டியதுதான். ஈழத் தமிழருக்கு ஆதரவாக ஒரு மூச்சு விடக் கூட முடியாத நிலை தமிழ்நாட்டில் தோன்றும்.

(இப்படி ஒரு நிலை தோன்றினால் அதை எதிர்த்து உறுதியோடு போராடுவதற்கு திமுக போன்ற பெரிய கட்சிகள் தயாராக இல்லை என்பது இதில் ஒரு வேதனையான விடயம். ஈழத் தமிழர்களின் பொருட்டு சிறை செல்வதற்கு வெகு குறைவானவர்களே தயாராக இருப்பார்கள். அதுவும் 'தேசிய பாதுகாப்புச் சட்டம்' பாயும் என்றால், சிறை செல்வதற்கு யார்தான் தயாராக இருப்பார்கள்?)

தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகள் அனைத்தும் அரசியல் கணக்குப் போடுவதில்தான் இன்றைக்கு மும்மரமாக நிற்கின்றன. அது தேவையானதும் கூட. இன்னும் ஆறு மாதத்தில் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசின் மீது மக்கள் மத்தியில் உள்ள அதிருப்தியை எப்படிச் சமாளிப்பது என்று திமுகவும் காங்கிரசும், மக்களின் அதிருப்தியை எப்படி வாக்குகள் ஆக்குவது என்று அதிமுக போன்ற எதிர்க்கட்சிகளும் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு தமிழ்நாட்டின் கட்சிகள் பல வினோதமான நிலைப்பாடுகளை எடுப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். காங்கிரஸ் முதுகில் குத்தியும் கலைஞர் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி தொடரும் என்கிறார். ஜெயலலிதாவின் அறிக்கையால் வைகோ சிறைக்கு செல்ல வேண்டி வந்ததன் பின்பும், அதிமுகவுடன்தான் கூட்டணி என்று மதிமுக சொல்கிறது. அனைத்தும் தேர்தல் படுத்தும் பாடு.

ஜெயலலிதா முதலில் ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து விட்டு, திடீரென்று தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டதற்கும் இதுதான் காரணம்.

கலைஞர் பேசாது இருந்த பொழுது, சிங்கள அரசையும் இந்திய அரசையும் கண்டித்து அறிக்கை விட்டார். கலைஞரும் ஈழத் தமிழர்களுக்கு குரல் கொடுக்கத் தொடங்கியதும், அவருடைய மூளை வேறு கணக்குப் போடத் தொடங்கி விட்டது.

தமிழ்நாட்டு மக்களின் திமுக அரசு மீதான அதிருப்தியால் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க அதிக இடங்களைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. மத்தியில் அமையப் போகின்ற ஆட்சிக்கு அதிமுகவின் தயவு தேவைப்படும் நிலை ஏற்படலாம். அப்பொழுது அதைப் பயன்படுத்திக் கொண்டு கலைஞரின் அரசைக் கலைக்கச் சொல்லி மிரட்டலாம். விடுதலைப் புலிகள் நடமாட்டம் தமிழ்நாட்டில் அதிகரித்து விட்டது என்று மீண்டும் மத்திய அரசை நச்சரிக்கலாம் என்றெல்லாம் கணக்குப் போட்டு விட்டு, தன்னுடைய சுதியை மாற்றிக் கொண்டார்.

திமுக மீது மக்கள் அதிருப்தியில் இருப்பதால்தான் வைகோவும் தொடர்ந்து அதிமுக கூட்டணியில் இருப்பது நல்லது என்று நினைக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா மதிமுகவிற்கு ஒதுக்கும் நான்கு ஐந்து இடங்களில் வெற்றி பெற்று விடலாம் என்று கணக்குப் போடுகிறார்.

கலைஞரும் இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியை பகைத்தால் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகள் எதுவும் கிடைக்காமல் அல்லாட வேண்டியிருக்கும் என்று விட்டுக் கொடுத்துப் போகத் தொடங்கியிருக்கிறார்.

கலைஞர் காங்கிரஸ் கட்சியைப் பகைத்து, அதனால் ஆட்சி கவிழ்ந்து, அவரும் சிறைக்கு செல்வதை யாரும் இன்றைய நிலையில் விரும்ப மாட்டார்கள்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் இருப்பதால்தான் ஓரளவு என்றாலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பரப்புரைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இன்னும் மூன்று ஆண்டுகள் இந்தப் பரப்புரையை தொடர்வதற்கு வாய்ப்பும் இருக்கின்றது. இது மிக முக்கியமானது.

இதுவரை நடந்த போராட்டங்களினால் கலைஞருக்கும் தமிழீழ மக்களிற்கும் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. விலகிச் சென்ற பாட்டாளி மக்கள் கட்சி திமுகவுடன் சற்று நெருங்கி வரத் தொடங்கியிருக்கிறது.

அத்துடன் இரண்டு வாரங்கள் மின்வெட்டுப் பற்றி தமிழ்நாட்டு மக்கள் அதிகம் பேசவில்லை. தமிழீழ மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களின் தார்மீக ஆதரவு கிடைத்திருக்கிறது. சிங்கள அரசையும் சற்று எரிச்சல்படுத்த முடிந்திருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் தார்மீக ஆதரவை மேலும் பெறுவதற்கான பரப்புரைகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியதுதான் தற்போது உள்ள அவசியமான ஒரு செயற்பாடு. இன்று இல்லாவிட்டாலும் நாளை இதனால் பல நன்மைகள் ஏற்படலாம்.

ஆகவே கலைஞரை வெறுமனே திட்டித் தீர்ப்பதை நிறுத்தி விட்டு, உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியை தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

நம்பவைத்து
ஏய்ப்பவரும்
நாணயத்தைத்
தொலைப்பவரும்
நாதியற்றுப்
போவதுதான்
நாநிலத்தின்
விதியன்றோ!

ஒரு பேப்பர்
ORU PAPER

# கதிர்காம யாத்திரை

பாகம் 60

சென்ற முறை கரையோரப் பாதை வழியாகத் தமிழர்கள் தங்கள் பாரம்பரியப் பிரதேசங்களைக் கடந்து கதிர்காம யாத்திரை செய்ததைப் பற்றிக் குறிப்பிட்டேன். புலம் பெயர்ந்து வந்த பிறகும் அந்த நினைவுகள் நெஞ்சில் நிழலாடுகின்றன. அத்தகைய இனிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் இனியொரு தடவை கிடைக்குமா என்று எதிர்பார்க்க முடியவில்லை. இன்றும் கிழக்கு மாகாணத்திலிருந்து உற்சவ காலங்களில் தமிழர்கள் இந்தப் பாதையினூடாகக் கதிர்காமம் செல்கிறார்கள். ஆனால் சிலவேளைகளில் யால வனப் பகுதியில் நடைபெறும் தாக்குதல்களைக் காரணங்காட்டி இப்பிரயாணத்தை அரசாங்கம் தடைசெய்து விடுகின்றது.

பொதுவாக மனிதர்களுக்குக் காடுகளினூடாக இயற்கைக் காட்சிகளை ரசித்தவாறே இரவு நேரங்களில் மர நிழல்களில் படுத்துறங்கி இத்தகைய பிரயாணங்களை மேற்கொள்வதில் ஆர்வம் அதிகம். ஆதியில் காட்டு வாழ்க்கை வாழ்ந்ததினாலோ என்னவோ மனிதன் இத்தகைய சபாரி வாழ்வை விரும்புகிறான். இளமைக் காலத்தில் எனக்கும் என்னோடொத்த நண்பர்களுக்கும் அத்தகைய வாழ்வில் விருப்பமிருந்தது. அதற்காக நாங்கள் ஆபிரிக்காவுக்கா போகமுடியும்? காசுக்கு எங்கே போவது? கிடைத்தது கதிர்காம யாத்திரைதான். அதைப் பயன்படுத்திக் கொண்டோம்.

பக்தர்கள் குழாம் குழாமாகக் கதிர்காமம் போன காலமொன்றிருந்தது. பிற்காலத்தில் குழந்தை குட்டிகளையும் அள்ளிக் கட்டிக் கொண்டு மாட்டுவண்டில்களில் அல்லது உழவு இயந்திரங்களில் உணவுப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு உல்லாசப் பயணஞ்செய்து ஆற்றுப் படுக்கைகளில் ஒரு புறம் யானைக் கூட்டங்களும் மறுபுறம் மனிதர்களுமாய் இரவு நேரங்களில் படுத்துறங்கிச் செல்லும் ஒரு திரில்லான பிரயாணமாகக் கதிர்காமப் பயணம் மாறிவிட்டது. அதனால் எங்களுக்கும் அந்தத் திரில்லை அனுபவிக்க வேண்டுமென்னும் ஆசை பிறந்துவிட்டது.

அதிகாலையில் எழுந்து அரோகரா போட்டபடி மக்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடங்குவார்கள். காலை நேரம் நடைப்பயணத்திற்கு இலகுவாக இருக்கும். மத்தியானம் ஆக ஆகச் சூரியனின் ஆவேசம் நிலத்தை நெருப்பாக்கத் தொடங்கும். பின்னர் எங்காவது மர நிழல்களில் ஒதுங்கி விடவேண்டும்.

## அலசுவாரம்

அலசுபவர் : மட்டைக்கிளப்பான்

காலைச் சாப்பாட்டையும் மத்தியானச் சாப்பாட்டையும் முடித்தபிறகு சற்று ஓய்வெடுத்த பின்னர் பின்னேரம் மூன்று அல்லது நான்கு மணிக்குப் பின்னர் வெயில் குறையத் தொடங்கியதும், மீண்டும் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு பிரயாணம் ஆரம்பிக்கும். கிட்டத்தட்ட பின்னேரம் ஆறு ஏழு மணிவரை அதாவது கானகத்தை இருள் கவ்வும் வரை நடைப்பயணம் தொடரும்.

இரவு நேரங்களில் மக்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு வந்து சேருவார்கள். திட்டுத் திட்டாக மரங்களின் கீழும் மணற்பரப்புகளிலும் மக்கள் தங்கள் தங்கள் உறவினர்களுடன் கூடி உணவு சமைத்து உண்பர். அந்த இரவுப் பொழுது மிகவும் இனியதாகவும் அதேவேளை கொஞ்சம் பயம் கலந்ததாகவும் இருக்கும். எந்த நேரத்திலும் யானைக் கூட்டங்களோ, சிறுத்தைப் புலியோ அல்லது கரடியோ வந்து தாக்கலாமென்ற பயத்தில் அனேகமானவர்கள் விழித்தபடி கதைத்துக் கொண்டிருப்பார்கள். எல்லோரும் உறங்கிவிட்டால் சில வேளைகளில் அந்த வழியில் வரும் யானைகள் தூங்பவர்களை உழக்கிக் கொண்டு செல்லவோ கரடி அல்லது சிறுத்தைகள் குழந்தைகளைக் கவ்விக்கொண்டு சென்றுவிடவோ கூடுமென்னும் பயத்தில் பெண்களையும் குழந்தைகளையும் தூங்கவிட்டு ஆண்கள் இரவில் விழித்திருப்பார்கள்.

ஆனால் மிருகங்கள் பாவம். இதுவரை அந்த அநியாயத்தை கதிர்காம யாத்திரீகர்களுக்கு இழைத்ததில்லை. மனிதர்களின் குரலைக்கேட்டால் எந்தக் கொடிய விலங்கும் தானாகவே ஒதுங்கிப் போய்விடும். ஆஹா, நல்லதொரு இரை அகப்பட்டுவிட்டது என்று எந்தச் சிறுத்தையோ வேங்கையோ கரடியோ சிங்கமோ யோசிப்பதில்லை.

இயற்கையின் சிருஷ்டிப்பின் சிகரமான மனிதருக்கெதிராய் விலங்குகள் சிந்தித்துச் செயற்படுவதில்லை. தனிவழியில் தனியொரு மனிதன் அகப்பட்டுவிட்டால் சிலவேளைகளில் பசியோடிருக்கும் விலங்கோ அல்லது கூட்டத்தை விட்டு விரக்தியில் விலகித் திரியும் யானையோ குழுமாடோ அம்மனிதனைத் தாக்கச் சில நேரம் முயலக் கூடும்.

இதை எழுதும்போது மிகவும் வேதனையாக இருக்கின்றது. நமது நாட்டில் தனித்துப் பிரயாணப்பட்ட எத்தனையோ தமிழர்கள் காணாமற் போய்விட்டார்கள். இத்தனைக்கும் அவர்கள்

'கதிர்காம யாத்திரைக்காய் காட்டுவழி
போனதில்லை
எதிராக யாருக்கும் இன்னலிழைக்கவில்லை
வீட்டுக்குள் வந்து விலங்கிழுத்துச் சென்றது
போல்
நாட்டுக்குள் அன்றோ நரபலிக்கு
உள்ளானார்கள்.
புத்தன் அளித்த புனித வழிநடப்போர்
இத்தரையில் செய்யும் இழிசெயல்கள்
ஒன்றிரண்டா
பல்வணங்கிச் சொல்வணங்காப் பாவியர்கள்
ஈனமற்றுக்
கொல்லுந் தொழிலையன்றோ
குலத் தொழிலாய்க் கொண்டுவிட்டார்.
குலமகளிர் நெற்றியிலே குங்குமத்தைக்
கண்டதனால்
கொலை வெறியர் செய்த கொடுமைகள்தான்
எம்மட்டு ?'

விலங்குகள் வாழும் காட்டிலும் மோசமான கொடியவர்கள் வாழும் நாட்டில் நாம் சிறுபான்மையினராகப் பிறந்து விட்டோமே என்பதையெண்ணும் போது வேதனை நெஞ்சை நிரப்புகின்றது.

கதிர்காமத்திற்குக் காட்டு வழியில் போக விரும்பாது பஸ்ஸிலேறி நாட்டு வழியிற்போன எத்தனையோ தமிழ் இளைஞர்கள் காணாமற் போய்விட்டார்கள். எனது உறவுக்காரப் பையனொருவனுக்கும் இந்தக் கதியேற்பட்டது. அந்தக் காலத்தில் பலர் கரையோரப் பாதை வழியாக நடந்து போனார்கள். அவன் விலங்குகளுக்குப் பயந்து தனியே பஸ்ஸில் போனான். போனவன் திரும்பி வரவேயில்லை. அவன் சென்ற வழியிலிருந்த இராணுவ முகாம்களுக்கெல்லாம் சென்று விசாரித்தும் அவனைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. இப்படிப் பலபேர் காணாமற் போனார்கள். அவர்களெல்லாம் இன்றுள்ள காணாமற் போனோர் பட்டியலில் இடம் பெறவில்லை.

ஒரு தடவை கதிர்காமத்திற்கு பஸ்ஸில் சென்று திரும்பியபோது மொனராகலையில் வைத்து ஒரு பஸ் கண்டக்டர் வந்தவர்கள் தமிழர்கள்தான் என்ற இளக்காரத்தில சில பெண்களைக் கைகளாற் தள்ளித் தகாத முறையில் நடக்க முற்பட்டான். அன்று ஒரு தமிழ் யாத்திரீகன் கொல்லப்பட்டு அவனது பிணம் பஸ் நிலையத்தில் ஓரிடத்தில் கிடந்தது.

கதிர்காம யாத்திரையை தமிழர்கள் சிங்கள நாட்டுப் புறங்களுடாகச் செய்வது மிகவும் அபாயகரமானது. தமது பாரம்பரியக் கரையோரப் பிரதேசங்களுடாகச் சென்று தமது பிரதேசமான யால வனப்பகுதியைக்கடந்து கதிர்காமத்தை அடைவதே அன்று தொட்டு இன்றுவரை செய்யப்பட்டு வருகின்றது. அந்தப் பாரம்பரியத்தை இழந்து விடாது தொடர வேண்டும்.

*- தொடருவம்.*

கடற்கரை மணலில் உன் பெயர் எழுதி
வைத்தேன்
காரணம், உன் பெயராவது குளிக்கட்டும் என்று!


ஸ்ரீமதி யோகா தில்லைநாதன் 16வது ஆண்டாக நடாத்தும்

"கானக்குயில் 2008"



- லண்டனில் பிறந்து வளர்ந்த சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள் பங்குகொள்ளும் இசை நிகழ்ச்சி
- ரசிகர்களின் வாக்குகளால் கடந்த ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட பால, இளைய, கானக்குயில்களின் சிறப்புப் பாடல்கள்
- முன்னணி இசைக்குழு சித்ராலயாவின் பின்னணி இசையில் **"கானக்குயில் 2008"**
- Brinthanனின் சிறந்த ஒளி ஒலியமைப்பில் இடம்பெறும் நிகழ்ச்சி
- வயிற்றுக்கு விருந்தளிக்க Rayners Lane சென்னை மசாலாவின் சுவைமிகு சிற்றூண்டி உணவு வகைகள் விற்பனைக்குண்டு

**டிக்கட் : தனிநபர் £12.50 ,12 வயதிற்குட்பட்டோர் £ 7.50**

**November 15**
**GREENFORD TOWN HALL,**
**Ruislip Road,**
**Opposite Mansell Road,**
**Greenford,UB6 9QN**
**மாலை 6 மணிக்கு**

ரசிகப் பெருமக்களே ! உங்களை உங்கள் ஆசனங்களில்
மாலை மணி 5.45க்கு காண ஆசைப்படுகின்றோம்
கடந்த 15 ஆண்டுகளைப் போல் நேரம் தவறாமல்
மாலை 6மணிக்கு ஆரம்பமாகி 10.45க்கு முடிவாகும்
காதுக்கினிய இசை நிகழ்ச்சி " கானக்குயில் 2008 "

விபரங்களுக்கு அழையுங்கள்
020 8251 0996 / 0790 332 7708




**டிக்கட் கிடைக்குமிடங்கள்**

**வெம்பிளி :** தாரணி ஜுவலர்ஸ்
54 , Ealing Road, வெம்பிளி
( 020 902 7111)

மலர் Super Market
543, High Road, வெம்பிளி
(0208 795 5797)

**Eastham :** ராசம் காயத்திரி சில்க்ஸ்
312, High Street North, Eastham
(0208 552 6060)

**Ilford :** அட்சயா Silks
311, Ley Street Ilford, Essex
(0208 694 6653)

**Lewsiham :** A.J video & Audio
14, Lompit Hill, Lewsiham
(0208 694 6653)

**Tooting :** Rani Silks
4, Selkirk Road, Tooting
(0208 672 6555)

ஆதரவு வழங்குவோர்:
Ayngaran international, Tharani Jewellery, Ratna & Co, A-Lanka Travels, London Baba Suresh Krishna, V.K Autos, Vaishna Super Foods,Rathy Jewellers, T&K Accountancy Groups, Rasam Gayathri Sliks, Lucky Windows, Saraswathy Bavans, Malar Supermarket, Rani Silks, Chennai Masala

# பொறுத்திருப்போம் காலம் மாறும்

அநபாயன்
ஒரு பேப்பருக்காக

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

## கொழும்பு நாளேட்டின் தமிழாக்கம்

ஒரு சில இணையத்தளங்கள் கொழும்புப் பத்திரிகையில் வரும் செய்திகள் மற்றும் தற்போது புற்றீசல் போல பெருகிவரும் சிங்கள இராணுவத்தினரின் தனிப்பட்ட Blogs (Defence wire, History and war, Defencenet) ) போன்றவற்றின் தமிழாக்கத்தை வெளியிட்டுவருகின்றன. இதில் உள்ள ஆபத்தை அவர்கள் உணரவில்லை. உதாரணமாக Defence wire போன்ற Blogs ஏதோ நடுநிலையாக உண்மைச் செய்திகளை வெளியிடுவதுபோன்ற பாவனை காட்டினாலும். அவை யாவும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று ஈழத்தமிழ் பொதுப்பரப்பில் சிங்கள இராணுவ உளவுத்துறை விதைக்க வேண்டிய கருத்துக்களை சத்தமில்லாமல் விதைக்கின்றன. தீவிரவாத எதிர் நடவடிக்கையில் உளவியல் போர் என்பது ஓர் முக்கியமான அம்சமாகும்.

இது psychological Operation (Psyops) என்று பொதுவாகக் கூறப்படுகிறது. பல நாடுகளில் Psyops என்ற ஒரு தனிப்பிரிவு உளவுத்துறையில் இயங்கிவருகிறது. எண்பதுகளில் அமெரிக்காவின் 'சிஐஏ' லத்தீன் அமெரிக்காவில் நடாத்திய ஆட்சி மாற்றங்கள், கொலைகள், போர்கள் போன்றவற்றினால் அமெரிக்க ஜனாதிபதி றேகனின் அரசுக்கு எதிராக அமெரிக்க மக்களிடம் உருவான அதிருப்தி உணர்வை மாற்றுவதற்கும் CIA இன் சட்ட விரோதச் செயல்களை நியாயப்படுத்துவதற்கும் அமெரிக்க இராணுவம் தனது Psyops பிரிவிலிருந்து பலரை அமெரிக்க செய்தி நிறுவனங்களிற்குள் பத்திரிகையாளர் என்ற பெயரில் ஊடுருவ வைத்தது.

Psyops பற்றிய ஒரு சமீபகால உதாரணம். அண்மையில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தின் விசேட படையணிக்கு எதிராக விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இராணுவத்திற்கு பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இருந்த போதும் சிங்கள இராணுவம் தமது சேதவிபரத்தைக் குறைத்தே வெளியிட்டது. ஆனால் Defence wire இணையத்தளம் ஏதோ நடுநிலையாக செய்தி வெளியிடுவதாக தன்னைக் காட்டிக் கொள்ளும் விதத்தில் இராணுவத்தின் சேத விபரத்தை அதிகரித்து வெளியிட்டது. உடனேயேபல தமிழ்த்தேசியம் சார்ந்த இணையத்தளங்கள் அத்தொகையை வெளியிட்டு மகிழ்வெய்தின. ஆனால் அதே Defence wire இணையத்தளம் மேலும் பல போர் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை அல்லது செய்திகளைக் கொண்டுள்ளது. அவை மிகவும் மோசமான விளைவை ஏற்படுத்தக் கூடிய ஆக்கங்கள்.

உண்மையிலேயே Defencewire மற்றும் Defencenet போன்ற இணையத்தளங்கள் சிறிலங்கா இராணுவத்தின்Psyops பிரிவினரால் நடத்தப்படுகின்றன. என்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் அவர்கள் வெளியிடும் தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் இராணுவத்திற்குரிய பிரத்தியேகமானவையாகக் காணப்படுகின்றன. எனவே தான் அவை இராணுவ மேலதிகாரிகளின் அனுமதியின்றி வெளியிடப்படுவதென்பது சாத்தியமல்லாத ஒன்று.

Defencenet இணையத்தளம் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டபின் எடுக்கப்பட்ட பல புகைப்படங்களை வெளியிட்டிருந்தது. அவற்றில் ஒரு புகைப்படத்தில் குண்டு வெடிப்பில் மிஞ்சிய அமைச்சரின் மேல் அரைப் பகுதி உடலைப் பொலிசார் தூக்கிச் செல்லும் காட்சியும் ஒன்று. ஆனால் சில மணிநேரங்களில் அனைத்துப் புகைப்படங்களும் இணையத்தளத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டன.

## ஏன் எல்லா போர்நிறுத்த உடன்படிக்கைகளும் நிரந்தர அமைதியில் முடிவடைவதில்லை

இவ்வாறான பின்னணியில் கொழும்புப் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களில் வரும் செய்திகளை மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடுவதில் அதிக கவனம் வேண்டும்.

ஏன் எல்லா போர்நிறுத்த உடன்படிக்கைகளும் நிரந்தர அமைதியில் முடிவடைவதில்லை இணைத்தலைமை நாடுகள் அனைத்திற்கும் இது தெள்ளத் தெளிவாகத்தெரியும். எனவே தான் நாலாம் ஈழப்போரின்அவசியத்தன்மை குறித்து எமக்கு எந்தவிதமான சந்தேகமும் இருக்கத்தேவையில்லை. இதுகாலத்தின்தேவை.

## தற்போதைய நிலவரம் என்ன?

சிறிலங்கா இரணுவம் ஏ9 வீதிக்கு மேற்குப்புறமாக உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பின் எண்பது சதவீதமான நிலப்பரப்பை கைப்பற்றியுள்ளதுடன் கிளிநொச்சியிலிருந்து ஏறத்தாழ 9 கிலோமீற்றர் தொலைவில் நிலையெடுத்து நிற்கிறது. நான் இங்கு இராணுவ ஆய்வு செய்ய முற்படவில்லை. எனக்கு எதுவிதமான முன் அனுபவமும் கிடையாது. சிறுவயது முதல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உன்னிப்பாககவனித்துவரும் ஒருவன் என்ற அடிப்படையில் எனது கருத்தை முன்வைக்கின்றேன். எந்தக்காரணம்கொண்டும்யதார்த்த ரீதியான தர்க்கவியல் சார்ந்து உண்மையைத் தேடும் மனித இனத்தின் அடிப்படைக் குணாம்சத்தை நாம் இழக்கக் கூடாது. எனவேதான் தற்போதைய போர் நிலவரம் தொடர்பான சில அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ள முற்படுவோம்.

## விடுதலைப் புலிகள் தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தின் மதிப்பீடு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை இராணுவத்தின் புலனாய்வு மதிப்பீடு என்பது அரைகுறையானது மட்டுமல்லாது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விடுதலைப்புலிகள் இராணுவத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வண்ணம் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். தற்போதும் இராணுவம் இலத்திரனியல் சார்ந்த புலனாய்வுத் தகவல்களிலேயே அதிகம் தங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பில் தமது உளவாளிகளை ஊடுருவச் செய்வதில் யாரும் வெற்றி பெறவில்லை. விடுதலைப்புலிகள் அமைப்பின் கட்டமைப்பு வெளியாள் ஊடுருவுவதற்கு முடியாதளவு மிகவும் இறுக்கமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இந்தவகையில் விடுதலைப்புலிகளின் ஆளணிப்பலம் தொடர்பாகவோ அல்லது அவர்களது ஆயுத இருப்புத் தொடர்பாகவோ சிறிலங்கா இராணுவமும், இந்திய ஆய்வாளர்களும் தெரிவித்துவரும் தொகை விபரங்கள் எந்தவகையிலும் நம்பக்கூடியவையல்ல. ஏனெனில் அவர்கள் கூறும் கணக்கு வழக்குக்கு எந்தவிதமான ஆதாரங்களையும் அவர்களால் கொடுக்கமுடியவில்லை.

## விடுதலைப்புலிகளின் மூலோபாயம்.

இதுவரை நடந்த எல்லாச் சமர்களிலும் பின்வாங்கும்போது விடுதலைப்புலிகள் அந்தப் பின்நகரும் செயற்பாட்டை தங்கள் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அதாவது தங்கள் கட்டுமானங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள் அனைத்தும் அகற்றப்பட்ட பின்னரேயே அவர்கள் இராணுவத்தை முன்னேற அனுமதித்தனர். அந்தவகையில் விடுதலைப்புலிகள் தாங்கள் என்ன செய்கிறோம். என்பதில் மிகத் தெளிவாகவே உள்ளனர். வன்னியில் இராணுவத்தின் புவியீர்ப்பு மையமானது வவுனியாவுக்கு அண்மையிலிருந்து வடமேற்காக இடம்பெயர்ந்து தற்போது பெரிதும் கட்டமைக்கப்படாத தற்காலிக முகாம்களைக் கொண்ட புதிதாகக் கைப்பற்றப்பட்ட வன்னிமேற்குப் பகுதியில் நிலைகொண்டுள்ளது.

அதாவது விடுதலைப் புலிகளின் ஒரு ஊடறுப்புத் தாக்குதலை எதிர்கொள்வதற்கான இராணுவத்தின் சாதகமான கள நிலவரம் (தரைத்தோற்றம், பின்தள வசதிகள், ஆள் எண்ணிக்கைச் செறிவு) கடந்த ஒரு வருடத்தில் பாரதூரமாக குறைவடைந்துள்ளது. இதைத்தான் பொதுவாக எல்லா ஊடகங்களிலும் 'அகலக் கால் வைத்தல்' எனக் கூறுகின்றார்கள். தமக்கு வாய்ப்பான நேரத்தில் இராணுவம் பலவீனமாக உள்ள வேளையில் தாக்குதல் நடாத்துவது தான் கடந்த முப்பது ஆண்டு காலமாக விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வரும் தந்திரோபாயம் எனவேதான் நான்காம் கட்ட ஈழப்போரிலும் அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திற்குக் காத்திருப்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. ஏனெனில் எமக்கு வேறு யாரும் உதவிசெய்யப் போவதில்லை.

## வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமைத்துவம்.

புகழ்பெற்ற இந்திய வரலாற்று ஆய்வாளர் நீல கண்டசாஸ்திரிகள் ராஜராஜசோழன் தலைமையில் உருவான இரண்டாம் சோழப் பேரரசு பற்றிக் குறிப்பிடுகையில்சோழ அரசின் ஆட்சியதிகாரக் கட்டமைப்பானது மத்தியில் அதிகாரமயப்பட்டதும் அதன் நிர்வாக கட்டமைப்பின் அடிப்படையாக இராணுவம் விளங்குவதும் அக்கால கட்டத்தில் இருந்த மற்றையப் பேரரசுகளிலிருந்து பெரிதும் வேறுபட்ட ஒரு குணவியல்பு என்றும் அழுத்திக் கூறினார். பின் நோக்கிப் பார்க்கையில் இரண்டாம் சோழப் பேரரசுதான் உலகத் தமிழர் வரலாற்றில் மிகவும் வெற்றிமிக்க ஒரு அரசாக விளங்கியது. எனலாம்.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளின் பின்னர். வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் அதே கருத்தியலை அதாவது இராணுவ பலத்தை மையமாகக் கொண்ட ஒரு அரசியல் விடுதலை இயக்கத்தை தலைமையேற்று நடத்தி வருகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் உருவான புரட்சியாளர்கள் விடுதலை இயக்கத்தலைவர்கள் வரிசையில் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் ஒரு இடமுண்டு. அரசியல் காரணங்களுக்காக சர்வதேச ஊடகங்கள் தற்போது தேசியத் தலைவரின் முக்கியத்துவத்தை 'அடக்கி' வாசிக்கின்றன. ஆனால் வரலாறு அவருக்குரியஉயர்ந்த இடத்தை அளிக்கும். அவர் தற்போதுள்ள இராணுவ மூலோபாய வகுப்பாளர்களில்;(strategist) ஒரு தலைசிறந்த இராணுவத் தலைவராக விளங்குகிறார். பல ஜனாதிபதிகள், இராணுவத் தளபதிகளை தனது போராட்ட வாழ்க்கையில் எதிர் கொணடவர் அவர் தமிழீழ விடுதலைக்கு நம்மெல்லோரையும் வழி நடத்திச் செல்வார் என்பதில் எமக்கு எந்தச் சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

## போருக்கான அறம்.

அமெரிக்க சுதந்திரப் போரில் ஜோர்ஜ் வோஷிங்டன் தலைமையிலான படைகள் பிரிட்டிஷ் படைகளுடனான நேரடிமோதல்களில் மிகச்சிறிய எண்ணிக்கையான போர்களிலேயே வெற்றி பெற்றன. ஆனால் இறுதியில் நீண்டபோரில் சலிப்புற்ற பிரிட்டிஷ் படைகள் வெளியேற வேண்டிய நிலையேற்பட்டது.

வியட்நாம் யுத்தத்தின்போது 1968 இல் வடவியட்நாம் படைகள் Tet Offensive எனப்படும் நேரடித் தாக்குதலை தென்வியட்நாமில் இருந்த அமெரிக்கப் படைகளுக்கெதிராக மேற்கொண்டன. இத்தாக்குதலை அமெரிக்கப் படைகள் முறியடித்தாலும் அவர்களுக்கு பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. வடவியட்நாமிய படைகளைப் பொறுத்த வரையில் கணிசமான அளவு உயிரிழப்புடன் ஆயுத இழப்பும் ஏற்பட்டது. அத்தோடு இந்தத் தாக்குதல் (Tet Offensive) தோல்வியில் முடிந்தாலும் இத்தாக்குதல் அமெரிக்க அரசாங்கத்தின் உறுதியை ஆட்டம் காணச்செய்ததுடன் அமெரிக்க மக்கள் வியட்நாம் யுத்தத்தில் நம்பிக்கை இழக்க வைத்ததிலும் முக்கிய பங்கு வகித்தது. இறுதியில் அமெரிக்கப்படைகள் அவமானகரமான முறையில் வெளியே நேர்ந்தது. இது போன்ற பல உதாரணங்கள் வரலாற்றில் கொட்டிகிடக்கின்றன.

ஒரு போரில் வெற்றி பெறுவதற்கு ஆளணி ஆயுத தளபாடங்கள் மட்டும் போதாது போரிடுவதற்கான உளவுரனும், நியாயமான நோக்கமும் அவசியம் இவையில்லாதபோது எவ்வளவு பலமாக இருந்தாலும் அந்த இராணுவம் தோற்கும். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் மிகவும் நிதானத்துடனும், தெளிவோடும் இருக்கின்றார்கள். போருக்கான அறம் அவர்கள் பக்கம் இருக்கும் போது நாம் ஏன் குழப்பமடைய வேண்டும்.



- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sale Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports

TAMSONS

Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# கவலையைப் போக்கும் கண்கவர் ஓவியங்கள்



ஓவியங்களின் ஒப்பற்ற சக்தியை உணர்ந்த எமது முன்னோர்கள், சுவர்களில் பதிய வைத்து அழியாத கைவண்ணத்தைக் காட்டியதோடு நில்லாமல் குகைகளிலும் ஒளித்து வைத்தனர். இதற்குச் சான்று பகர்வது எல்லோரா ஓவியம்.

தம்பிக்கு அஞ்சி மலைமேல் ஒளிந்திருந்த காசியப்பன் என்ற சிங்கள மன்னன் சிகிரியாவில் சேர்த்து வைத்துள்ள ஓவியங்களும் இன்னும் சரித்திரப் புகழ் வாய்ந்தவையாக விளங்குகின்றன.

ஓவியங்களின் மகிமையை உணர்ந்த ஆராய்ச்சியாளர்கள், இதன் தாக்கம் எவ்வாறு மனித உணர்வுகளை மாற்றமடைய வைக்கிறது என்ற ஒரு ஆய்வில் தம்மை அர்ப்பணித்தனர்.

இத்தாலியில் உள்ள Bari எனும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Marina de Tommaso என்பவரும் அவரது சகாக்களும் ஆண் பெண் இருபாலாரையும் சேர்ந்த 12 நபர்களைத் தெரிந்தெடுத்து இந்த ஆய்வில் இறங்கினர்.

பிரசித்தி பெற்ற ஓவியர்களான Davinci, Botticelli போன்றவர்களின் படைப்புகள் உட்பட 300 ஓவியங்களைத் தெரிவு செய்து, அதில் 20 வர்ணப் படைப்புகளை இவர்கள் முன் வைத்தனர்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**


இதில் அழகிய கவர்ச்சிப் படங்களும் அழகற்ற படங்களும் அடங்கும். இவ்வாராய்ச்சியில் உட்படுத்தப்பட்ட 12 நபர்களையும் இவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட ஓவியங்களை உற்று நோக்குமாறு முதலில் கேட்கப்பட்டனர். ஓவியங்களைப் பார்க்கும் போது, அவரவர் உணர்வில் உண்டாகும் மாற்றங்களை அவதானிக்க கதிர் இயக்கத்தால் காரணப்படும் உணர்வலைகளை பதிவு செய்ய இவர்களின் கைகளில் கருவிகள் பொருத்தப்பட்டன.

ஆய்வுகளில் பதிவு செய்யப்பட்ட விபரங்களின் படி வெறுமையான சட்டங்களையும் அழகற்ற ஓவியங்களையும் நோக்கியவர்களை விட அழகிய கவர்ச்சியுடைய ஓவியங்களைக் கவனித்தவர்களின் மனக்கவலை மூன்றில் ஒரு பங்கு குறைவாகத் தளர்ந்துள்ளதைத் தெளிவுபடுத்தின.

மனதளவில் கவலையால் பீடிக்கப்பட்டு அல்லலுறும் நோயாளிகள்அழகிய ஓவியங்களைக் காணும் போது அவர்களுடைய உணர்ச்சிகள் மாறுபடும் தன்மையை மூளைக்குச் செலுத்தப்படும் மின் அணுக்கள் மூலம், நோயின் கடுமையான தாக்கத்தை வெகுவாகத் தணித்து விடுவதை துல்லியமாக அறிய முடிந்தது.

அழகிய ஓவியங்கள் வைத்திய சாலைச் சுவர்களை அலங்கரிக்கப் போவதை காணுங் காலம் நெருங்கி வருகிறது. சும்மா சொல்லக் கூடாது அந்தக் காலத்து அரசர்கள் அறிந்திருந்த இரகசியத்தை ஆராய்ச்சியாளர்கள் இப்போது தான் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

## அலாரம் அடிக்காமல் எழும்பும் அற்புதப் படைப்பு



மே மாதம் வரும் முன்னரே அந்த மாதத்திற்கே உரித்தான May Flowers முற்றுகையிட்டு மலர்வது கண்கொள்ளாக் காட்சி. அதே போல கார்த்திகை மாதம் என்றாலே கார்த்திகைப் பூக்களின் ஞாபகம் முன்கூட்டியே வருவது இயல்பு. இயற்கையின் கட்டளைக்கு அமைய மரங்கள். கொடிகள். செடிகள். பறவைகள். மிருகங்கள் இம்மியும் பிசகாமல் தத்தம் கடமைகளைச் செய்யும் போது மானிட இனம் ஏனோ இசைய மறுப்பது சர்ச்சையைக் கிளப்பும் குழப்பம்.

தாவரங்களை உசுப்பி விடும் மரபணுக்கள் காலவேளையானதும் குறித்த நேரத்தில் எழுந்து தமது வழமையான வளர்ச்சியை ஆரம்பித்து மாலையில் சுருங்கிக் கொள்வதற்கு வழி செய்வது ஆய்வுகள் தெளிவுபடுத்தும் உண்மை.

நீண்டநேரம் வளர்ச்சியடையக் கூடிய தானிய வகைகளைக் கண்டுபிடித்து அதன் மூலம் அதிக பலனை அடைய முடியாதா என்ற ஆராய்ச்சியை தாவரவியல் வல்லுனர்கள் ஆரம்பித்துள்ளனர்.

தாவரங்களுக்குள் மறைந்திருக்கும் மணிக்கூடு இயற்கையின் செயற்பாட்டுக்கமையவும் சூரிய வெளிச்சத்தின் கால அவகாசத்தை நிர்ணயித்தும் தினமும் தமது வளர்ச்சியை இயல்பாகக் கட்டுப் படுத்தியுள்ளது..

இதனால் எந்தவித அலாரமும் இல்லாமலே காலையில் எழுந்து தமக்குத் தேவைப்படும் நீராகாரத்தை உட்கொள்ளும் நேரத்தை நிர்ணயிப்பதும் வளர்ச்சியில் உருவாகும் பசைத் தன்மையை இடைநிறுத்துவதும் இத்தாவரங்களுக்குள் அடங்கியிருக்கும் மரபணுக்களின் செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


தாவரங்களை காலையில் எழுப்பிவிடக் காத்திருக்கும் அலாரம் போன்ற மணிக்கூடு. தாவரங்களுக்குள் செயல்படும் கையளவு மரபணுக்களின் செயல்பாடுதான் என்பது பலரும் அறிந்த உண்மைதான். ஆனால் தாவரங்களில் சுரக்கப்படும் Hormones தான் இவைகள் காலையில் குறித்த நேரத்தில் செயல்பட வைக்கும் அலாரம் என்ற புதிய கண்டுபிடிப்பை கலிபோர்னிய மாநிலத்தின் Salk Institute இன் முதன்மை ஆராய்ச்சியாளரான Todd MIchael முன்வைத்துள்ளர்

இவ்வாராய்ச்சியின் பலனாக உலகில் சீதோசண நிலை மாற்றத்திற்கமைய நீண்ட நேர வளர்ச்சியைப் பெறவும். உற்பத்தியைப் பெருக்கவும் உகந்த தானிய வகைகளை உற்பத்தி செய்ய முடியுமேன கலிபோர்ணிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Steve Kay எனும் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகிறார்.

இதுவரை ஒழுங்காக வளர்ந்து குறைவாகப் பலனைத் தந்துவந்த தானியங்கள் புதிய கண்டுபிடிப்புக்களினால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பதே என் போன்றவர்களின் ஆதங்கம்.

ஆழ்ந்த நித்திரையை விட்டு எழுப்ப அலாரம் அடிக்கும் போது அலுப்பின் நிமித்தமும் களைப்பின் மிகுதியாலும் அலாரத்தை நிறுத்தி விட்டு மீண்டும் உறங்க நினைக்கும் மனிதர்கள் போலல்லாமல் தாவரங்கள் தமது கடமையை தவறாது செய்யும் என்பதில் நிறைவான நம்பிக்கை வைக்கலாம்.

# விழிநீர் சொரிந்து உருகி நிற்கிறோம்!



**திரு சின்னத்தம்பி இராமனாதன்**

தோற்றம்: 31-01-1945 மறைவு: 29-09-2008

தென்மராட்சி கல்வயலை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திரு சின்னத்தம்பி இராமனாதன் கடந்த 10ம் மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் அந்தியட்டி கிரியைகள் கடந்த 29ம் திகதி புதன்கிழமையன்று நடைபெற்றன. கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

தகவல் : மனைவி அமிர்தராணி
லண்டன்
தொலைபேசி எண்: 020 8311 2867

மகன் கருணேஸ்வரன்
இலங்கை தொலைபேசி எண் : 077 9770 0877

வாசகர் கடிதம்

# என்னதான் நடக்குது இங்கே!

எங்களுக்குள்ளேயே எங்களின்ரை ஆட்களைக் காட்டிக் குடுக்கிற சுயவாளித்தனங்கள் இங்கை நடக்குது. டக்கிளஸ், கருணா, சங்கரி என்ற துரோகம் ஒருபுறம் என்றால் இது இன்னொரு காட்டிக் கொடுப்பு.

இங்கு சில தமிழ் ஊடகங்கள் இருக்கினம் அவர்களுக்கு பல கொம்புகள் முளைச்சிருக்கு. அந்த ஊடகர்கள் தாங்கள் தனித்த சாதி என்று திரிகிறார்கள். அதுவும் உயர்சாதி என்ற நினைப்பு. அவர்களது உடையும் நடையும், சிரிப்பும், கனைப்பும்... தங்களை விட்டால் ஆட்கள் இல்லை என்ற வண்ணம் அவர்கள் திரிவார்கள்.

இந்த ஊடகர்கள் யார், மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்டவர்கள் தான். மக்களில் இருந்து வேறுப்பட்டவர்கள் அல்லர். ஆனால் இந்த ஊடகர்கள் மக்களை மந்தைகளாக நினைத்துத் தான் கடமையாற்றுகிறார்கள்.

தரராசிசிவராம், நிமலராஜன், நடேசன் ஆகிய ஊடகர்களை நினைத்துப் பார்க்கிறேன். மக்களுடன் நின்று மக்களுக்காகவே மரணித்தவர்கள். அவர்கள் மக்களை விட்டு விலத்திப் போகவில்லை. மக்களின் அன்றாட துன்ப துயரங்களைக் கண்டு வெந்தவர்கள், கொதித்தார்கள். தமிழ் மக்களின் இன்னல்களை தமது பேனாவால் உலகறியச் செய்தவர்கள். செத்தும் உலகறிய வைப்பவர்கள்.

சமீபத்தில் இலங்கையிலிருந்து ஒரு ஊடகர் இலண்டனுக்கு வந்திருந்தார். அவர் வந்ததே சிங்கள அரசின் தமிழ் ஊடகர் மீதான வன்முறையிலிருந்து தப்பவே. சிங்கள அரசால் அவருக்குக் கொலைப் பயமுறுத்தலும் இருந்தது.

அவர் இலண்டன் 'தீபம்' தொலைக்காட்சிக்கு செவ்வி அளிக்கையில் சொல்கிறார் 'ஊடகவியலாளருக்கு அரசாங்கத் தரப்பாலும் புலிகளாலும் அச்சுறுத்தல்' .

வலு சுலபமாகவும், மேலெழுந்த வரியாகவும் இவ்வாறு சொல்லி விட்டுப் போய் விடுவார்கள். இதனைக் கேட்கிற சாதரண பொதுமகன் என்ன நினைப்பான்? விடுதலைப் புலிகளையும், சிங்கள அரசையும் அவன் ஒரே தட்டில் வைப்பான். ஆனாலும் உண்மை அதுவல்ல. இந்த ஊடகர் ஏன் இப்படிச் சொல்கிறார் என்றால் தான் 'நடுநிலைமை' என்று ஊர் உலகத்துக்கு பறை சாற்ற. ஆருக்கு ஐயா வேண்டும் உந்த நடுநிலமை? நடுநிலைமை என்று எதுவும் இல்லை. மக்களின் பக்கம் நில்லுங்கள். அதுதான் ஊடகரின் கடமை.

இன்னொரு ஊடகரின் கதை இது. இந்த ஊடகர் இலண்டனில் இருந்து இயங்கும் 'ஜீரீவி' யில் வேலை செய்கிறார். இந்த ஊடகர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா எம். பி.. கிஷோர் அவர்களைப் பேட்டி காண்கிறார். கிஷோர் அவர்கள் ஏனைய த. தே. கூ எம்பிக்களின் காலை வாருகிறார். தான் ஒருவன் தான் தனது தொகுதியில் இருக்கிறேன். ஏனைய எம்பிக்கள் தனது தொகுதியில் இருக்காமல் வெளிநாடு என்று சுற்றுகிறார்கள். இவர்கள் அடுத்த எலெக்சனுக்கு எப்படி மக்களிடம் வோட்டு கேட்பார்கள் என்று பல கேள்விகளை தனது கூட்டமைப்பு எம்பிக்களையே பப்ளிக்காகக் கேட்கிறார்.

கிஷோர் அப்படிச் சொல்கிறார் என்றால் அப்படிச் சொல்ல வைக்கிறார் அந்த ஊடகர். 'மக்கள் தரப்பு சொல்கிறார்கள்'. 'பொதுவான அபிப்பிராயம் இது' என்றெல்லாம் சொல்லி தனது நச்சுக் கருத்துக்களையே அந்த ஊடகர் முன்வைக்கிறார்.

அந்த ஊடகருக்கும் கிஷோர் எம்பிக்கும் மூன்று கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

1) தொகுதியில் அல்லது மக்களுடன் அல்லது இலங்கையில் நின்ற ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன், சிவனேசன் ஆகிய தமிழ் எம். பிக்களுக்கு என்ன நடந்தது? அதையே ஏனைய த.தே. கூ. எம்பிக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று அந்த ஊடகரும், கிசோரும் நினைக்கிறார்களா?

2) வெளிநாடு என்று புறப்பட்ட த. தே. கூ எம்பிக்கள், சொகுசாக சுற்றுப் பயணம் செய்கிறார்கள் என்றா அந்த ஊடகரும் கிஷோர் எம்பியும் நினைகிறார்கள்? வெளிநாடுகளில் நிகழ்கின்ற எத்தனையோ எழுச்சி நிகழ்வுகள் த. தே. கூ எம்பிக்களால் தான் சாத்தியமாகிறது

உதரணத்துக்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டின் இப்போதைய எழுச்சிக்கு அங்கு இருந்த சிவாஜிலிங்கம் எம்பியும் காரணமாகிறார். இவையெல்லம அந்த ஊடகருக்குத் தெரியாதென்றல்ல. "நான் ஊடகச் சாதி, உயர்ந்தவன்' என்று இறுமாப்பில்தான் இவர்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்.

3) உயிருக்குப் பயமென்றால் கிஷோர் எம்.பி ஏன் தனது தொகுதியிலேயே இருக்கிறார் என்ற கேள்வி எழலாம். கிஷோர் எம்பி யூ. என்.பி சார்பாகவே எலெக்சனில் குதிக்க இருந்தார் என்ற தகவல் உங்களுக்குத் தெரியுமா? ஏதோ ஒரு 'அம்புக்குறி' அவர் பாதையைத் திருப்பி விட்டது.

வவுனியாவிலும், கொழும்பிலும், நுவரெலியாவிலும் பல இராணுவ அதிகாரிகளுக்குத் 'தண்ணிப்பார்ட்டி' வைத்துத் தான் தனது உயிரைத் தக்க வைத்திருக்கிறார் என்ற தகவல் கசிந்திருக்கிறதே! அது கூட அந்த ஊடகருக்குத் தெரியாதா?

இப்படியான ஊடகர்களே! ஒன்றும் தெரியாமல் மக்களுக்கு சேறடிக்க முயலாதீர்கள். த.தே.கூ எம்பிக்களில் பலர் தேசத்துக்கான சேவையை ஆற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு சிலர்தான் அடுத்த எலெக்சனுக்கு ஆயத்தமாகிறார்கள். ஊடகர்களே! உங்களுக்கு அகலக் கண்ணும் ஆழக் கண்ணும் நல்ல மனசும், தெளிவான மனமும் வேண்டும். வீணாக மக்களைக் குழப்பாதீர்கள்

*- பரதேசி*

## தின்றுவிட்டுச் சாகட்டும் தமிழினம்

வன்னிக்குச் சோறு கொடு
இலங்கை வான்படைக்குக் குண்டு கொடு
திண்டுவிட்டுச் சாகட்டும் தமிழினம்
எண்டந்தப் பாவி சொன்னான்
முண்டப் பேதைகளாய்
இன்னும் முடங்கிக் கிடப்பாரோ
தமிழர் தமிழகத்தில் இல்லை
முண்டு பிடித்துத் தொடர்வாரோ
தம்போரை
பார்ப்பனியம் பணிவதில்லை
அது பணியவைத்து ஆள்வதுவே
என்றந்தப்பாவி சொன்னான்
இன்னமும் பொறுத்திடுமோ
தமிழிதை
இந்து மகாசதியும்
பௌத்த மதவெறியும்
இணைந்து நின்று தமிழைக்
கொல்வமெனச் சொல்கிறதே
இன்னும் என்ன தூக்கம்
என்னருமைத் தமிழகமே
நீ பொங்கியெழுந்தாலன்றி
மழையில் நனைந்ததிலே
பயனுண்டோ எண்ணிப்பார்.

*- பரதேசி*

## கொடுமையடா சாமி!

கணவன் : இந்த வயசிலை பாம்பு கடிச்சுச் செத்துப் போச்சுதாம்

மனைவி : யாரப்பா

கணவன் : வன்னியிலை எங்கடை பக்கத்து வீட்டிலை இருந்த கமலம் அக்கா தான்.

மனைவி : எட அவவே. 'கோலங்களிலை' வாற அபியாக்கும் எண்டு நினைச்சு நான் பயந்து போனன்


We are urgently looking for properties with1, 2, 3 bedrooms in Mitcham and Morden Area !

வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும் அனைத்து வீத வீட்டுக்கடன் வசதிகளுக்கும் உடனே நாடுங்கள்



House Mortgages Up to 95%
Commercial Loan up to 90%
Insurance 100% cash back guarantee

http://www.matrixproperties.co.uk



Mitcham,Morden பகுதிகளில் 1, 2, 3 படுக்கையறைகள் கொண்ட வீட்டுமனைகள் உடனடியாகத்தேவைப்படுகின்றன

| Sales | Lettings | Mortgages | Insurance | Commercial Loans |

MATRIX
PROPERTIES SERVICES LTD

159, London Road, Mitcham, Surrey, CR4 2JB.
Tel: 020 8687 1700 / 020 8687 1001| Mob: 07958 527 830
Fax: 020 8687 1441 | Email: Contact@matrixproperties.co.uk

# வெண்திரைகளில் !




Staring :- **Staring- Ultimate Star Ajith, Nayanthara, Jeyaram, Piya**
Director :- **Rajusundram**
Music Director :- **Yuvan Shankar Raja**

## Showtimes

Cineworld **Ilford**
11.00AM (Sat/Sun Only),1.00 PM, 2.30PM, 4.30PM, 6.15PM, 8.00PM, 9.40PM (Fri only 11.45PM)

Cineworld **Wandsworth**
11.00AM (Sat/Sun Only)
2.30PM, 6.00PM, 9.30PM

Cineworld **Feltham**
11.00am(Sat/Sun Only)-2.30 PM, 6.00 PM, 9.30 PM
(Fri / SAT 11.30PM)

**Cineworld cinemas**
Staples Corner, High Wycombe, Milton Keynes, Stockport, Wood Green, Crawley, Cineworld Birmingham Broad St

Cineworld **Bolton and Glasgow**
1.00PM, 4.30PM, 8.00PM

"சேவல்"

**Staring- Barath, Simran, Vadivelu and others**
**Music- GV Pragash**
**Director- Hari**

| Cineworld Feltham | Cineworld Ilford |
|---|---|
| Daily shows from Friday 31st Oct 2008 to Sunday 2nd Nov 2008 | Daily shows from Friday 31st Oct 2008 to Thursday 6th Nov 2008 |
| 11.25AM | 1.50PM |

Daily shows from Friday 31st Oct 2008 to Thursday 6th Nov 2008

***இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அஜித் அளித்த பிரத்தியோக ஊடக நேர்காணல்***

அக்டோபர் 25, 2008 அன்று காலையில் கலாட்டா சினிமாவுக்கான நேர்காணலில் அஜித்குமார் உண்மையான உண்மையான உணர்ச்சிகளுடன் மனம் திறந்து கூறிய அறிக்கையில் "இலங்கைத் தமிழர் போராட்டம் குறித்த செய்திகளில் என்னைப் பற்றிய எதிர்மாறான தகவல்கள் வந்துள்ளன. என்மனதை புண்படுத்திய வாந்திகள் மற்றும் பொய்யான தகவல்கள் ஊடகங்களில் வெளிவந்துள்ளன உலகத் தமிழர் களுக்கு என்னுடைய ஈழத்தமிழர் பற்றிய உணர்வை விளக்கம் அளித்தாக வேண்டும்" என்று அஜித் கூறினார்.நான் இதுவரை எந்த விதமான பொது நிகழ்ச்சிகள் மற்றும் அரசியல் குறித்த அறிக்கைகள் அளித்ததில்லை என்பது உலகத்தமிழ் மக்கள் அனைவரம் அறிந்ததே.எனது திரைப்படங்கள் திரையிடப்படுவதற்க்கு முன்னால் மட்டுமே இதுவரை அலுவலக அறிக்கை அளித்துள்ளேன்.எனக்கு எதிராக வந்த எல்லா விதமான செய்திகளும் அர்த்தமற்ற வதந்திகள்.ஏகன் திரைப்படத் தயாரிப்பாளர் லண்டன் "கருணா" என்றஅழைக்கப்படும் திரு.கருணா அவர்கள் ஓர் இலங்கைத் தமிழர் ஆவார். அவருடன் இணைந்து கடந்த ஒன்றரை வருடங்களாக உழைத்துள்ளேன்.ஈழத் தமிழர்க்ள் குறித்து நான் கொண்ட நல் லெண்களையும், அவர்கள் நிலை எண்ணி நான் வருந்துவதும் அவர் நன்றாக அறிந்ததே. இவ்வாறு நானும் ஒரு தமிழனாக இருக்கும் போது நான் ஏன் இப்படிப்பட்ட ஒரு செய்தியை வெளியிட வேண்டும்? என்னைப்பற்றிய பொய்யான தகவல்களைக்கேட்டு நம்பிய சிலர் "ஏகன்" திரைப்படத்தை வெளிநாடுகளில் (U.K. & Europe) திரையிட விடாமலும்.ஏகன் திரைப்பட த்தயாரிப்பாளர்கள் பற்றி தவறான செய்திகளை வெளியிட்டும் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையான செய்திகளை மட்டும் நம்புமாறு என் அன்பான தமிழ் ரசிகர்களை கேட்டுக்கொள்கிறேன்

இப்படிக்கு
உங்கள்
அஜித்

KALAIGNAR

## FIXED POINT CHART FOR U.K. FOR THE WEEK ENDING 31-10-2008 to 06-11-2008

| Time | Friday | Saturday | Sunday | Monday | Tuesday | Wednesday | Thursday | Time |
|---|---|---|---|---|---|---|---|---|
| Date | 31/10/2008 | 01/11/2008 | 02/11/2008 | 03/11/2008 | 04/11/2008 | 05/11/2008 | 06/11/2008 | Date |
| 06.00 - 06.30 | Vazhthu | Vazhthu | Vazhthu | Vazhthu | Vazhthu | Vazhthu | Vazhthu | 06.00 - 06.30 |
| 06.30 - 07.00 | Vidiyale Vaa | SONGS | SONGS | Vidiyale Vaa | Vidiyale Vaa | Vidiyale Vaa | Vidiyale Vaa | 06.30 - 07.00 |
| 07.00 - 07.30 | Vidiyale Vaa | Thaenum Paalum | SONGS | Vidiyale Vaa | Vidiyale Vaa | Vidiyale Vaa | Vidiyale Vaa | 07.00 - 07.30 |
| 07.30 - 08.00 | News | News | News | News | News | News | News | 07.30 - 08.00 |
| 08.00 - 08.30 | Vidiyale Vaa | Vaira Mangai | Azhagia Tamil Magal | Vidiyale Vaa | Vidiyale Vaa | Vidiyale Vaa | Vidiyale Vaa | 08.00 - 08.30 |
| 08.30 - 09.00 | Mangaiyar Ulagam | Melodies | Melodies | Mangaiyar Ulagam | Mangaiyar Ulagam | Mangaiyar Ulagam | Mangaiyar Ulagam | 08.30 - 09.00 |
| 09.00 - 09.30 | Theanum Paalum | ISAI ARUVI | Pattuku Paatu | Theanum Paalum | Theanum Paalum | Theanum Paalum | New Songs | 09.00 - 09.30 |
| 09.30 - 10.00 | Theanum Paalum | | Sirithu Vazhuvoom | Theanum Paalum | Theanum Paalum | Theanum Paalum | New Songs | 09.30 - 10.00 |
| 10.00 - 10.15 | Sirippu Varudhu | Maanaada Mayilaada (Repeat of 28/10/2008) | Thamizharuvi | Sirippu Varudhu | Sirippu Varudhu | Sirippu Varudhu | Sirippu Varudhu | 10.00 - 10.15 |
| 10.15 - 10.30 | | | Marakka Mudiyuma | | | | | 10.15 - 10.30 |
| 10.30 - 11.00 | | | | | | | | 10.30 - 11.00 |
| 11.00 - 11.30 | Santhosham | | Rasigan | Santhosham | Santhosham | Santhosham | Santhosham | 11.00 - 11.30 |
| 11.30 - 12.00 | Kalyana Parisu | New Comedy Clips | | Kalyana Parisu | Kalyana Parisu | Kalyana Parisu | Kalyana Parisu | 11.30 - 12.00 |
| 12.00 - 12.30 | Anandham V. Veedu | | Movie | Anandham V. Veedu | Anandham V. Veedu | Anandham V. Veedu | Anandham V. Veedu | 12.00 - 12.30 |
| 12.30 - 13.00 | Deepangal | New Songs | | Deepangal | Deepangal | Deepangal | Deepangal | 12.30 - 13.00 |
| 13.00 - 13.30 | News | News | News | News | News | News | News | 13.00 - 13.30 |
| 13.30 - 14.00 | Sathi Leelavathi | Movie Idhayathirudan | Thozha | Sathi Leelavathi | Sathi Leelavathi | Sathi Leelavathi | Sathi Leelavathi | 13.30 - 14.00 |
| 14.00 - 14.30 | Latchiyam | | | Latchiyam | Latchiyam | Latchiyam | Latchiyam | 14.00 - 14.30 |
| 14.30 - 15.00 | Movie Alagesan | | | Movie | Movie | Movie | Movie | 14.30 - 15.00 |
| 15.00 - 15.30 | | | | | | | | 15.00 - 15.30 |
| 15.30 - 16.00 | | | Suvaiyo Suvai | | | | | 15.30 - 16.00 |
| 16.00 - 16.30 | | | Movie Pokkiri | | | | | 16.00 - 16.30 |
| 16.30 - 17.00 | | Trailors | | | | | | 16.30 - 17.00 |
| 17.00 - 17.30 | | Logic Illa Magic | | | | | | 17.00 - 17.30 |
| 17.30 - 18.00 | Super Sundhari | Dhil Dhil Manadhil | | Super Sundhari | Super Sundhari | Super Sundhari | Super Sundhari | 17.30 - 18.00 |
| 18.00 - 18.30 | Aasai Nilavu - 36 | Odi Vilayaadu Paappa | | Aasai Nilavu - 34 | Aasai Nilavu - 34 | Aasai Nilavu - 34 | Aasai Nilavu - 35 | 18.00 - 18.30 |
| 18.30 - 19.00 | Rekha IPS | | | Rekha IPS | Rekha IPS | Rekha IPS | Rekha IPS | 18.30 - 19.00 |
| 19.00 - 19.30 | News | News | News | News | News | News | News | 19.00 - 19.30 |
| 19.30 - 20.00 | Manjal Magimai | Vannathirai | Maanaada Mayilaada | Manjal Magimai | Manjal Magimai | Manjal Magimai | Manjal Magimai | 19.30 - 20.00 |
| 20.00 - 20.30 | Vaira Nenjam | Movie Santhosh Subramanyam | | Vaira Nenjam | Vaira Nenjam | Vaira Nenjam | Vaira Nenjam | 20.00 - 20.30 |
| 20.30 - 21.00 | Thekkathi Ponnu | | | Thekkathi Ponnu | Thekkathi Ponnu | Thekkathi Ponnu | Thekkathi Ponnu | 20.30 - 21.00 |
| 21.00 - 21.30 | Thangamanapurushan | | | Thangamana Purushan | Thangamana Purushan | Thangamana Purushan | Thangamana Purushan | 21.00 - 21.30 |
| 21.30 - 22.00 | Gokulathil Seethai | | | Gokulathil Seethai | Gokulathil Seethai | Gokulathil Seethai | Gokulathil Seethai | 21.30 - 22.00 |
| 22.00 - 22.30 | Movie Subramanyapuram | | Ellamae Siripputhan | Barathi - 54 | Barathi - 54 | Barathi - 54 | Barathi - 55 | 22.00 - 22.30 |
| 22.30 - 23.00 | | Maanaada Mayilaada | | Comedy clips | Comedy clips | Comedy clips | Comedy clips | 22.30 - 23.00 |
| 23.00 - 23.30 | | | Comedy clips | Trailor | Trailor | Trailor | Trailor | 23.00 - 23.30 |
| 23.30 - 00.00 | | | Songs | Songs | Songs | Songs | Songs | 23.30 - 00.00 |
| 00.00 - 00.30 | | | Songs | Songs | Songs | Songs | Songs | 00.00 - 00.30 |
| 00.30 - 06.00 | | Songs | Songs | Songs | Songs | Songs | Songs | 03.00 - 06.00 |


**For More showtime details**

Ayngaran Video- www.ayngaran.com, **02084534477, 02085401500, 02084713133**

Ayngaran Hot Line **02085420250**

**Cineworld Cinema- 08712002000, www.cineworld.co.uk**

# சொல்லிக் காட்டவா சோறு போட்டீர்கள்?



**பாமரன்**
*(சண்டே இந்தியனில்)*

நல்லது. மீண்டும் அந்தக் காலம் அரும்பியிருக்கிறது. ஈழத்தமிழர் நலனுக்காக ஒட்டுமொத்த தமிழகமுமே களம் இறங்கியிருக்கும் செய்திதான் அது. அம்மக்களின் நெடுங்காலப் போராட்டத்திற்கு ஆதரவாக ஆக்கபூர்வமாக என்ன செய்யப் போகிறோம் நாம் என்பதுதான் நம் முன் உள்ள கேள்வி.

என்னென்னவெல்லாம் செய்யப்போகிறோம் என்பதைக் காட்டிலும் என்னென்னவெல்லாம் செய்யக் கூடாது என்பதில் கவனத்தைக் குவித்தாக வேண்டிய வேளை இது. அது நாம் காலக் குதிரையைசற்று கழுத்தைத்திருப்ப அனுமதித்தால் மட்டுமே நடந்தேறக்கூடிய விசயம்.

முதலில், சமாதான மேசைகளில் பரிமாறப்பட இருப்பது ஈழத் 'தமிழர்' குறித்ததான பிரச்சினை என்பது கவனத்துக்கு வருமேயானால் இந்தத் தமிழர்களது பிரச்சனைகள் குறித்து எந்தெந்தத் 'தமிழரெல்லாம்' கூடி விவாதிக்கப் போகிறார்கள் என்கிற வினாவும் கூட எழுந்தே தீரும்.

அதில் ஏ.கே.அந்தோணி தொடங்கி எம்.கே. நாராயணனில்தொடர்ந்து சிவசங்கர் மேனனில் வளர்ந்து இலங்கையில் இருக்கும் இந்தியப் பிரதிநிதி அலோக் பிரசாத் வரைக்கும் பலரும் இந்த மொழிக்குடும்பத்திற்குள் அடக்கி விட முடியாதவர்கள் என்பது பள்ளிச் சிறுவனுக்குக் கூட தெரியும்.

இவர்களெல்லாம் தமிழர்கள் குறித்து விவாதிக்கக் கூடாது என்பதில்லை. ஆனால் எவருடைய பிரச்சனை குறித்து விவாதிக்கப்பட இருக்கிறதோ அவர்களது தரப்பைச் சார்ந்த ஓரிருவராவது அதில் அடங்கியிருந்தால் இன்னும் கொஞ்சம் அது அர்த்தமுள்ளதாக இருக்குமே என்பதுதான் ஆதங்கம்.

எண்பதுகளின் மத்தியில் இதை சரிவர கணக்கில் கொள்ளாமல் ரொமேஷ் பண்டாரி என்கிற வெளியுறவு அதிகாரியை திம்பு பேச்சுவார்த்தையில் தலையிட வைத்ததன் விளைவு அமைதிக்கு பதிலாக அனர்த்தத்தில் போய் முடிந்தது. பேச்சுவார்த்தையில் இருந்து ஒட்டு மொத்தமாக அனைத்து போராளிக் குழுக்களுமே வெளிநடப்பு செய்தனர். பொறுப்பற்ற அதிகாரியின் போக்கால் போராளிகள் வெளியேறியதை மத்திய அரசு புரிந்து கொள்ளாததால் அன்ரன் பாலசிங்கம், சத்தியேந்திரா, சந்திரகாசன் மூவரும் நாடு கடத்தப்பட்டனர்.

அதையொட்டி தமிழகத்தில் எழுந்த போராட்டமும்அதற்கு மத்திய அரசு வேறு வழியின்றிப் பணிந்ததும் இன்னமும் நினைவில் நிற்கும் நினைவுகள்.

அடுத்து வந்த 'அகிம்சைப் படை' காலங்களில் தமிழரின் இனப் பிரச்சனையைக் கையாண்ட ஜே.என்.தீட்ஷித் ஆகட்டும் கல்கத் ஆகட்டும் தமிழ் குறித்தோ, தமிழர் குறித்தோ 'அ' னா 'ஆ'வன்னா கூட அறியாதவர்கள் என்பதும் அனைவரும் அறிந்த விசயம்.

இரண்டாவதாக, இலங்கையின் ராணுவத்தை 'சிறீலங்கா ராணுவம்' என்றழைப்பதே எதார்த்தத்திற்குப் புறம்பான விஷயம் என்பதுதான். அதன் ராணுவத்தில் ஒரு தமிழர் கூட இல்லாத நிலையில் அதை சிங்கள ராணுவமாக மட்டுமே பார்ப்பதும்,அழைப்பதும்தான் சரியாக இருக்க முடியும். அப்போதுதான் அங்கு நடப்பது இனச்சண்டை அன்று இனப்படுகொலை என்கிற உண்மை புலப்படும்.

சரி, அப்படி இருக்கிற ராணுவமும் என்ன யோக்கியதையில் இருக்கிறது என்பதை ஹெய்ட்டி லீலைகளே உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. ஐ.நா.அமைதிப் படையில் மக்களைப் பாதுகாக்கப் போன சிங்கள ராணுவத்தினர் 108 பேர் ஹெய்ட்டி நாட்டுப் பெண்களை(யும்) பாலியல் வல்லுறவு கொண்ட குற்றத்திற்காக கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளப்பட்டனர். அமைதி காக்கப் போன இடத்திலேயே இத்தகைய ஆட்டம் போட்டவர்கள், எதிர்த்தாக்குதல் நிகழும் இடங்களில் எத்தகைய ஈனச்செயல்களில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதற்கு 'கோணேஸ்வரிகளே' சாட்சி.

மூன்றாவது, 'இறையாண்மை' குறித்து இடத்திற்கு இடம் மாறுபடும் வியாக்கியானங்கள். ஒரு நாட்டில் உள்ள இரு இனப்பிரிவுகள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதோ,விலகிக் கொள்வதோ அது அவை இரண்டும் சம்பந்தப்பட்ட விஷயம். ஆனால், பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு வங்காள தேசத்தை உருவாக்கும்போது தோன்றாத 'இறையாண்மை' ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகும்போது மட்டும் தோன்றுவது தான் நெருடலான துயரம்.

அதுவும் எப்படிப்பட்ட 'நேச'நாட்டின்'இறையாண்மையைக்' காப்பாற்றப் போகிறோம் இந்திய - பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தான் பக்கம் நின்ற நாட்டின் 'இறையாண்மையை' இந்திய - சீன யுத்தத்தின் போது பௌத்தத்தின் பெயரால் சீனாவின் பக்கம் நின்ற நாட்டின் 'இறையாண்மையை' இன்றைய கணம் வரை பாகிஸ்தானோடும், சீனாவோடும் நூலிழை கூட இடைவெளி இல்லா உறவோடு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் நாட்டின் 'இறையாண்மையை'.

> **அமைதிக்கான ஒப்பந்தம் என்பது இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்க வேண்டும். சமரசம் செய்யச் சென்ற ராஜீவ்காந்தி அதில் சாட்சிக் கையொப்பமிட்டிருக்க வேண்டும். அதுதான் நியதி.**

இந்தப் புவிசார் அரசியல் சூழலின் சூட்சுமம் நேருவின் மகளுக்குப் புரிந்தது. விளைவு? ஒடுக்கப்படும் இனத்தினை நோக்கி அவரது கரங்கள் நீண்டது. நாடெங்கிலும் ஆயுதப் பயிற்சி முகாம்களும் அரசியல் ரீதியான அனுசரணையும் ஈழப்போராளிகளுக்கு வாய்த்தது. அதன் பின்னர் வந்த அயலுறவுக் 'கொள்கை' வகுப்பாளர்களோ ராஜதந்திரத்துக்கான புதியதொரு அகராதியையே 'படைத்தனர்.'

எதிரிகளைக் கூட நண்பர்களாக மாற்றும் வல்லமை படைத்த ராஜதந்திரம் விடைபெற்று நண்பர்களைக் கூட எதிரிகளாக மாற்றும் 'ராஜதந்திர' அபத்தங்கள் அரங்கேறத் தொடங்கியதும் இன்னமும் நினைவில் நிற்கும் நிகழ்வுகள்தான்.

நான்காவதாக, தொடரான ஒடுக்குமுறையும் இனப்படுகொலையும் தொடரும்போது பூமிப்பந்தில் புதிய புதிய தேசங்கள் தோன்றுவதொன்றும் புதிரானதோ எதிரானதோ அல்ல. அது செர்பியா தொடங்கி ஒசீட்டியா வரைக்கும் உலக நிகழ்வுகளை உற்றுப் பார்த்தவர்களுக்குப் புரியும். அப்படி மலரும் ஈழமும் இந்துமகா சமுத்திரத்தின் அரசியல் வானில் இந்தியாவிற்குத் துணையாகத்தான் இருக்கும் என்பதுதான் அப்பட்டமான எதார்த்தம் என்பதும் புரியும்.

ஐந்தாவதாக, துயரப்படும் ஒரு இனத்திற்கான நமது உதவி என்பது எத்தகைய பிரதிபலனும் கருதாமல் நாம் நம் கடமையைச் செய்கிறோம் என்பதே. எண்பதுகளின்பிற்பகுதியில் தமிழகத்தில் ஓங்கி ஒலித்த ஈழத் தமிழர் ஆதரவுக் குரல்களும்,போராட்டங்களும் மத்திய அரசினை கொழும்பை நோக்கி ஒரு கோபப் பார்வையை வீச வைத்தது. அடுத்து இலங்கையின் வான் எல்லைக்குள் இந்தியப் போர் விமானங்கள் துணையோடு உணவுப் பொட்டலங்கள் வடக்கு கிழக்கில் வாடிய உயிர்களை நோக்கி வீசப்பட்டன. தமிழகமும், ஈழமும் நன்றிப்பெருக்கோடு நிமிர்ந்து நோக்கின. ஆனால்.. அடுத்து வந்த நாட்களோ... 'இந்திய - இலங்கை வெளியுறவுத் துறை அதிகாரிகள் ஆலோசனை', 'இந்திய-இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் பேச்சுவார்த்தை' என நகர்ந்து இறுதியில் ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தில் போய் முடிந்தது.

எந்தவொரு ஒப்பந்தமும் போரிட்டுக் கொள்கிற இரு தரப்பாருக்குள் நிகழ வேண்டுமே அன்றி சமரசம் செய்யச் சென்ற நடுவரே உடன்படிக்கையில் கையெழுத்திடுவதென்பது உலகம் கண்டிராத விந்தை.

அமைதிக்கான ஒப்பந்தம் என்பது இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்க வேண்டும். சமரசம் செய்யச் சென்ற ராஜீவ்காந்தி அதில் சாட்சிக் கையொப்பமிட்டிருக்க வேண்டும். அதுதான் நியதி.

ஆனால், உணவுப் பொட்டலங்களின் பெயரால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட கட்டாயப் படுத்தப்பட்டனர் போராளித் தலைவர்கள். பார்வையாளர்கள் சிலருக்கும் ''இவ்வளவு' உதவிகள் செய்த மத்திய அரசை ஏற்றுக் கொண்டு கையெழுத்துப் போட்டால்தான் என்ன' என்கிற எண்ணத்தினையும் அது ஏற்படுத்தியது.

நடுவராக இருந்த அரசே இன்னொரு தரப்பாக உருமாறி ஒப்பந்தம் போட்டுக் கொண்டதும் அப்படிப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்தியதும் ஏற்படுத்திய துயரம் தாளாமல் சென்னையில் நடந்த கூட்டத்தின்போது ஒரு போராளி கேட்டார் 'சொல்லிக்காட்டவா சோறு போட்டீர்கள்?' இதுவும் நினைவில் நிற்கும் நிகழ்வுதான்.

எல்லாவற்றுக்கும் மேலாய், இறுதியாக 'அண்டைநாடு' 'பஞ்சசீலம்' 'இறையாண்மை' 'உள்நாட்டு விவகாரம்' எல்லாம் தாண்டி 'நேச' நாட்டுக் கடற்படையினரால் காவு வாங்கப்பட்ட 'சொந்த' நாட்டு மீனவர்கள் மட்டும் இதுவரை ஐநூற்றுச் சொச்சம் பேர். 'எதிரி' நாட்டு படையான பாகிஸ்தானியரால் கூட மீனவர்கள் எவரும் இப்படிக் கொல்லப்பட்டதில்லை. இந்தியக் கடற்படையும் பாகிஸ்தானிய மீனவர்களை இப்படிக் கொன்றதில்லை. அவ்வளவு ஏன்? எதிரும் புதிருமான கியூபாவும் அமெரிக்காவும் கூட மீனவர்கள் விசயத்தில் இவ்விதம் நடந்து கொண்டதில்லை. இங்கு மட்டும் ஏன் இப்படி? இன்று மனசாட்சியுள்ள எவருள்ளும் எழும் கேள்வி இதுதான். அப்படியாயின், தமிழர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் ஈழத்தில் பிறந்திருப்பினும் சரி. இந்தியாவில் பிறந்திருப்பினும் சரி. தமிழர்கள் என்பவர்கள் யார்? இதுவே இன்று உள்ள ஒரே கேள்வி.

**First Indian Guru Rishi Ji**
From India

In the Spirit of true Spiritualism who writes your problems before you speak. A classical fantasy in the spiritual world

**Doctrine in Tantra Practising**
since 1973 world-wide.

**(No Consultation Fees)**

By using the tools of Ancient Indian Tantra:
Juju, Black Magic, Evil effects of any kind etc. are removed.

பார்வையொன்றே போதும் உங்கள் ஜாதகத்தை கணிப்பதற்கு...

முதன் முறையாக இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் குரு ரிஷிஜி. உங்களது பிரச்சனைகளை நீங்கள் கூறுமுன்பே எழுத்தில் தரும் உண்மையான ஆன்மீகவாதி. "தந்திர" வழிமுறைப்படி ஒழுகும் ஆன்மீகவாதி. 1973ஆம் ஆண்டு தொடக்கம் உலக புகழ் பெற்ற "தந்திர" நியுணத்துவம் உள்ளவர். பண்டைய இந்திய "தந்திர" வித்தையை உபயோகித்து சூனியம், பில்லி, பிசாசு ஆகியவற்றை அகற்றுதல், பணக்கஷ்டம், நோய், நொடி, காதல் தோல்வி . ஆகியவற்றிற்கு நிவாரணம்.

இந்த செய்தியை உலகிற்கு தெரியப்படுத்துவதிற்காக ரிஷிஜியின் அனுமதி பெற்று விளம்பரம் செய்கின்றோம்.

To give this message worldwide we requested Rishi Ji to allow his followers to advertise
For appointment ring: **020 8518 2201 / 020 8554 2177**
50 Vaughan gardens, Gants Hill, Ilford, Essex IG1 3PD

## நண்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

# GAITHIRI NATHAN & CO.

SOLICITOR & COMMISSIONER FOR OATHS
Practising Since 1983 in UK

### FOR QUALITY LEGAL SERVICES

- ✓ COMMERCIAL & RESIDENTIAL CONVEYANCING
- ✓ LIQUOR LICENSING & PLANNING APPLICATIONS
- ✓ IMMIGRATION, NATIONALITY, ENTRY CLEARANCE APPLICATIONS, WORK PERMIT & HSMP
- ✓ WELFARE & HOUSING ADVICE
- ✓ LANDLORD & TENANT DISPUTE (BUSINESS TENANCIES)
- ✓ WILLS & PROBATE
- ✓ DIVORCE & FAMILY (NON LEGAL AID)
- ✓ BUYING AND SELLING IMMOVABLE ASSETS IN INDIA & SRI LANKA
- ✓ POWER OF ATTORNEY DEED POLLS, BUSINESS MANAGEMENT AGREEMENT & SPONSOR DECLARATION

***Mrs. Gaithiridevi Kathirgamanathan who established Nathan Suresh Amirthan in March 1993 has now come out of the partnership and has established a Sole Principal Practice in the name of GAITHIRI NATHAN & CO on the 1st October 2008***

**Registered office address:**
(For postal correspondence only)
**72 CHESTNUT DRIVE,
PINNER,
MIDDLESEX,
HA5 1LY**

**also at:**
(For personal attendant after making prior appointment over the phone)
**87 EALING ROAD,
WEMBLEY,
இப்போது வானம் வெளிக்கின்றது விடிவெள்ளி தெரிகின்றது. இலட்சம் இலட்சம் தமிழ் உயிர்கள் விட்ட கண்ணீருக்கும் நீங்கள் கண் திறக்க மாட்டீர்களா என்று இருந்த எங்கள் தவத்திற்கும் பதில்கள் கிடைக்கின்றன.

இன்னுமே இதயத்தைத் திறக்காமல் இருக்கும் உறவுகளே சொல்லுங்கள் எங்களுக்கு யாருமே இந்த உலகில் இல்லையா?

எங்கள் அழுகுரல்கள் உங்கள் காதோரம் வந்து கேட்கவில்லையா? உங்களின் மனச்சாட்சியை எமது வேதனைகள் தொடவில்லையா?

கற்புகள் பறிக்கப்பட்ட போது அந்தச் சகோதரிகள் எழுப்பின ஓலங்கள் உங்கள் கண்ணைத் திறக்கவில்லையா?

திறவுங்கள் உறவுகளே திறவுங்கள்.

நாங்கள் அழிவின் விழிம்பில் இருந்து கதறுகின்றோம் இரக்கின்றோம்.. சாவு எமக்கு நன்றாகத் தெரிகின்றது அழைக்கின்றது.

உதவிக் கரங்கள் இன்றி நாம் சாவை நோக்கிச் செல்கின்றோம். உறவுகளே அதுதான் உங்களுக்கு ஆத்ம நிம்மதி தரும் என்றால் நீங்கள் வடிவாகத் தூங்குங்கள். உங்களுக்கு நல்ல தூக்கம் வர நாங்கள் இறைவனை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு

*ஈழத்து அகதி*

## கொடுமையடா சாமி!

கணவன்: ஆர்ப்பாட்டம் செய்ததுக்காகப் பொலிஸ் காறர் பிடிச்சுக் கொண்டு போட்டினமாம்

மனைவி: யாரையப்பா?

கணவன்: இந்தியாவிலை வைக்கோவைத் தான்

மனைவி : எட அவரையே ! நான் விஸ்வநாதனோடை சண்டை பிடிச்சதுக்காக 'அரசியை' ஆக்கும் எண்டு நினைச்சுப் பயந்து போனன்.


**Painfree Clinic**

- NHS அழைப்பிற்காக காத்திருந்து அலுத்து விட்டதா ?
- கை, கால், கழுத்து, முதுகு வலியுடன் நெடுநாள் அவஸ்த்தையா ?
- மொழி பிரச்சினையால் உங்கள் வலியை முழுமையாக உணர்த்த முடியவில்லையா ?
- நமக்காக ஒன்று அருகில் இருந்தால் நன்று என நீங்கள் நினைப்பது எங்களுக்கு கேட்டது, . . .

அதனால் Bromley இல் ஒரு புதிய Physiotherapy சிகிச்சை அறை (வீட்டுச் சூழலில்)

மருத்துவமனை செல்கிறோம் என்ற எண்ணம் தோன்றா வண்ணம் முழுவதும் வீட்டுச் சூழலிலே !

உடனே முன்பதிவு செய்யுங்கள் நலம் பெறுங்கள் தொடர்புகளுக்கு:
07903501336 07794424147

**WEBSITE DESIGN**

**தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சி**

நீங்கள் தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சியைப் பெற வேண்டுமா?

கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 3 மணி நேர பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன

5 வகுப்புகளில் பயிற்சி பெற்றபின் நீங்களாகவே ஒரு இணையத் தளத்தை உருவாக்கும் ஆற்றல் பெறுவீர்கள்.

**இடத்திற்கு முந்துங்கள்**

பதிவு செய்வதற்கு
தொலைபேசி: **020 7043 4316**
*45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ*

**A J ACCOUNTANCY**
Auditors & Accountants
Over 25 years in public practise
Accounts Preparation, Self Assessment, VAT & PAYE Returns
An Efficient, Practical Service for small to Medium Size Companies, Partnerships & Sole Traders
Tel: 020 8778 8666
Fax: 020 8778 8999
Email: info@ajaccountancy.co.uk
Web: www.ajaccountancy.co.uk
43 Anerley Road, London SE19 2AS

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________
Address: ____________
Postcode: ____________
Telephone: ____________
Email: ____________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வாசகர் கடிதம்

# தமிழ்ப் பத்திரிகைக்கு வேண்டாமே!

ஒரு பேப்பர் 103வது வெளியீட்டில் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் சித்தரிக்கப்பட்ட விதம் மிகவும் அருவருப்பானதாக இருந்தது.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எம் இனத்தைச் சார்ந்த ஒரு தமிழ்ப்பெண். அனைத்தும் உன்னதங்களோ, சாமானியமோ ஈழத்தின் வேறெந்தத் தமிழ்ச்சியை விடவும் பரந்த எழுத்துப்பரப்பின் சொந்தக்காரர்.

மருத்துவத் தாதியாக இருந்தாரோ, தோட்டியாகப் பணிபுரிந்தாரோ காரியமல்ல. உலகின் எந்த விஷயத்தைப் பற்றியும் தனக்குரிய கருத்தைச்சொல்லும் உரிமைஉள்ளவர். விடுதலைப் புலிகளை ஆதரிக்கவோ எதிர்க்கவோ ஒரு உலகப் பிரஜைக்குள்ள உரிமை, ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றெனக் கருதப்படும் ஒரு பத்திரிகை ஒன்றினால் மறுக்கப்படும் விதம் சரியில்லை.

'இலங்கைத் தமிழர்கள் ஏன் தனிநாடு கோருகிறார்கள்? அக்கோரிக்கையின் ஊற்றுக்கண் என்ன, அடிவேரில் என்னதான் கோளாறு' என்பதை எந்த சிங்கள அரசியல்வாதியும் இதய சுத்தியுடன் நோக்குவதில்லை. அதேபோல் 'கருணா, பிள்ளையான் பேர்வழிகள் ஏன் துரோகிகள் ஆனார்கள்' என்பதை வேரிலிருந்து ஆராயவும் இங்கே எவருக்கும் துணிச்சலுமில்லை. ஆக எல்லோர் மீதும் விமர்சனங்கள் உண்டு, அவை இயல்பானவை.

ராஜேஸ்வரியின் நிலைப்பாடும், அரசியலும், கருத்துக்களும், காரியங்களும், தவறானவையாக இருக்க முடியும். அவை அனைத்தையும் விமர்சிக்க, கண்டிக்க, கேலி பண்ண, எதிர்க் கருத்துக்களை வைக்க உங்களுக்கு சகல உரிமையும் உண்டு.

அதை விடுத்து நீண்ட கலாச்சாரமும், பண்பாட்டுப் பாரம்பரியமும் விழுமியங்களும் கொண்ட ஒரு மொழியில் வரும் பத்திரிகை தன் பார்வையை தாழ்த்திக் கொண்டு அப்பெண்ணை மார்புக் கச்சை அணிவதில்லையென்றோ, உள்ளாடை அணியாதவரென்றோ, செக்ஸியானவரென்பதையோ கவனிப்பதும் விமர்சிப்பதும் (பத்திரிகை) தர்மத்தின்பாற்பட்ட நிகழ்வல்ல.

இதே பாணியில் இன்னொருவர் உங்கள் தங்கையை, தாயை, தாரத்தை விமர்சித்து எழுதலாமல்லவா?

சந்திரிகாவோ, ஜெயலலிதாவோ கூட இவ்வாறான ரீதியில் எந்த எதிர்கட்சியினராலும் இது வரை இப்படி விமர்சிக்கப்படவில்லை.

ஒரு மஞ்சள் பத்திரிகைக்குச் சமமாக விஷமத்தையும், துச்சாதனியத்தையும் பேனாவில் நிரப்பி வைத்துக் கொண்டு மறுபக்கங்களில் குறளையும், பெண்ணியம் பற்றியும் வினவுவது ஒரு பக்கத்தில் பூசாரிகள் மந்திரவாதிகளின் விளம்பரத்தையும், எதிர்ப் பக்கத்தில் பகுத்தறிவுக் கட்டுரையையும் வெளியிடுவதற்கு இணையான காரியங்கள்.

கி.செ.துரை மீதான வசைகளையும் இவ்வாறே பார்க்கலாம். அவர் அவ்விருந்தில் எமது போராட்டத்தின் துவக்கம் பற்றி அவர் இயம்பிய கருத்து தவறானதாக இருக்கலாம். அவர் கூற்றுப் பற்றி அவரிடம் நேரில் உறுதி செய்திருக்க வேண்டும். அவர் அப்படிக் கூறிவிட்டதால் முன்னெடுத்துள்ள எம்போராட்டம் எவ்விதத்திலும் பாதிக்கப்படப் போவதில்லை.

எனவே இது போன்றவற்றை கண்டு கொள்ளாமலே மேற்செல்லலாம், அவை தாமாக அடிபட்டுப்போகும்.

அவர் ஒரு சமகால இலக்கியர் என்பதையும் அவரது பிற ஆளுமைகளையும் மறந்து தூற்ற வேண்டிய அவசியமில்லை. மனிதனின் அரசியலில் வாழ்நிலையில் சமயத்தில் அவலமோ தடுமாற்றமோ மேவலாம். அறத்தின் மீதுமா?

*- பொ.கருணாகரமூர்த்தி, பெர்லின்*

## பொ. கருணாகரமூர்த்தியின் கடிதத்திற்கான சாத்திரியின் பதில் மடல்!

பொருமியிருக்கும் கருணாகரமூர்த்தி (பொ. கருணாகரமூர்த்தி) அவர்களிற்கு, 103 வது ஒரு பேப்பரில் ராஜேஸ் பாலா பற்றி என்னால் பயோடேற்றா (சுயவிபரம்) கேலிச்சித்திரத்துடன் எழுதப்பட்டிருந்த கருத்துக்களிற்கு நீங்கள் உள்ளம் குமுறி, உருகி, எழுதியிருந்த ஆதங்கக் கடிதத்தினைப் படித்தேன்.

அதில் நீங்கள் சொல்லியுள்ளதைப் போல அந்த அம்மணிக்கு தனது கருத்தினை சொல்ல எவ்வளவு உரிமையுள்ளதோ அதேயளவு உரிமை எனது கருத்தினை சொல்லவும் இருக்கின்றதென்பதனை ஒத்துக் கொண்ட உங்களிற்கு முதலில் நன்றிகள்.

அடுத்ததாய் மார்புக் கச்சையை அடித்துத் துவைத்து அதனை பெண்ணிய கூட்டங்களில் காயப் போட்டு வருபவர் ராஜேஸ்வரிதான். அதனை அவரது பெண்ணிய வாதக்கூட்டத்து உரைகளிலும், அவர் சார்ந்த கூட்டத்தினரின் இணையத் தளங்களில் வெளியாகும் அவரது கட்டுரைகளிலும் தாராளமாய் படித்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

அடுத்ததாய் அவர் அறுபதிலும் பருவமாய் (சிக்ஸ்ரியிலும் செக்சியாய்) இருக்கிறாரா இல்லையா என்பதனையும் நான் ஆராய்ச்சி செய்யவில்லை. அதனையும் அவரேதான் ஒரு இணையத்தளத்தின் பதிவூட்டத்தில் எழுதியிருந்தார்

எனவே அவர் சொன்னவைகளைத் தான் நான் திருப்ப என்னுடைய கேலிப் பதிவில் பதிவாக்கியிருந்தேனே தவிர புதிதாய் நான் எந்த ஆராய்ச்சியும் செய்து கண்டு பிடித்தது எழுதவில்லை.

அடுத்ததாய் கேட்டீங்களே ஒரு கேள்வி உங்களது தாயை, தங்கையை, தாரத்தினை யாராவது இப்படி விமர்சித்து எழுதலாமா என்கிற கேள்வி.

உண்மையிலேயே என் உள்ளம் உருகி விட்டது. உருகிய உள்ளத்தை அப்படியே ஒரு கிண்ணத்தில் பிடித்து பத்திரமாய் பக்கத்தில் வைத்துவிட்டு மீதியை எழுதுகிறேன்.

நீங்கள் தாய், தாரம், தங்கை இவர்களுடன் அக்கா, அண்ணி, மச்சினி, மாமி இப்பிடி மற்றைய பெண் குடும்ப உறவுகளையும் சேர்த்திருக்கலாம்.

பாரிசில் நடந்த 26 வது பெண்கள் சந்திப்பு என்கிற பெயரில் நடந்த ஈழவிடுதலைப் போராட்டத்தின் மீதான சேறடிப்பு நிகழ்வின் பொழுது 'புனிதம் என்ற போர்வையில் பெண் தற்கொலை தாரிகள்' பற்றிய சிறு குறிப்பொன்றை வாசித்தார்.

அதில் நாங்கள் தாய், தங்கை, தாரத்திற்கும் மேலாக மதிக்கும் எங்கள் பெண் போராளிகளை அவர் கீழ்த்தரமாக விமர்சித்து கொச்சைப் படுத்தி இறுதியில், தங்களின் கட்டுப்பாட்டுக்குள் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் ஏழைகளை புலிகள் தற்கொலைதாரிகளுக்கு பயன்படுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

புராணங்களிலோ, இதிகாசங்களிலோ இல்லாத 'பெண் தற்கொலைதாரிகள்' அம்சத்தை முழுக்க முழுக்கப் பாவித்து அப்பாவிப் பெண்களையும், குழந்தைகளையும் புலிகள் அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவரது உதாரணத்திற்கு எங்கள் புராண இதிகாசங்களை வேறை இழுத்த அவரது புலம்பல் பத்திரிகைகளில் மட்டுமல்ல, இணையத்தளங்களிலும் பக்கம் பக்கமாய் விவாதம் போய்க் கொண்டிருந்த பொழுது உங்கள் பேனாவை யாரிற்காவது வாடகைக்கு விட்டிருந்தீர்களா? அல்லது உங்கள் வீட்டுக் கணணியை அடகு வைத்திருந்தீர்களா? அல்லது இலக்கிய நயத்தில் கண்டனக் கடிதம் எழுத எதுகை மோனை கிடைக்கவில்லையா?

துச்சாதனியத்தை என் பேனாவில் நிரப்பி வைத்து எழுதுவதாக குற்றம் சாட்டியுள்ளீர்கள். ஒரு பெண்ணை உள்வீட்டில் வைத்து மாறி மாறி துயிலுரியும் பாண்டவராய் இருப்பதை விட ஒரே பெண்ணை ஊரார் மத்தியில் துயிலுரிந்து விட்டுப் போகும் துச்சாதனனாகவே இருந்து விட்டுப் போகிறேன்.

இறுதியாக ஒன்று உங்களிற்கு கா(ம)மாலைகண் என்று புரிகிறது. எனவேதான் என் எழுத்துக்கள் மஞ்சளாய் தெரிகின்றது.

*- அன்புடன் சாத்திரி.*

### கொடுமையடா சாமி!

பெண்1: ஐயோ! ஊரிலை நடக்கிற கொடுமைகளை நினைக்க விசர் வருகுது. ரீவியிலை சனம் படுற கஸ்டத்தைப் பாத்து என்ரை 10 வயசு மகளும் அழுகிறா எண்டால் பாருங்கோவன்

பெண் 2: அப்படியே! நல்ல பொறுப்பா, தாய் மண்ணைப் பற்றிச் சொல்லி வளத்திருக்கிறியள். இந்தச் சனிக்கிழமை இங்கை இருக்கிற இளம் பிள்ளைகள் எல்லாம் சேந்து நிதி சேகரிக்கிற நிகழ்ச்சி நடத்துகினம். பிள்ளையையும் கூட்டிக் கொண்டு வாங்கோவன்

பெண்1: சனிக்கிழமை கஸ்டம். 'ஹலோவின் டே' எல்லோ. பிள்ளைகள் பார்ட்டிக்குப் போவினம். அவைக்கு வரக் கிடைக்காது.

### பயோடேற்றா



**உண்மைப்பெயர்:** லலிதா

**போலிப்பெயர்:** சாமியாரம்மா

**தொழில்:** சுஸ்மா (சுத்துமாத்து என்பதை ஸ்ரைலாக எழுதியிருக்கிறேன்)

**தொழில் நடத்துமிடம்:** டென்மார்க் பிராண்டா நகரில்

**மூலதனம்:** மக்களின் மதநம்பிக்கையும் மூடநம்பிக்கைகளும்

**பிடித்த நிறம்:** காவி

**பொழுது போக்கு:** சாமியாடுவது, முழியை பிரட்டுவது.

**பிடித்த பாடல்:** காசுமேலை காசு வந்து கொட்டுகிற நேரமிது. வாசக் கதைவை ராசலச்சுமி தட்டுகிற நேரமிது (படம். காதலா காதலா)

**நீண்டகால எரிச்சல்:** ஒரு பேப்பர்

**அண்மைக்கால எரிச்சல்:** புதிதாய் தொழில் தொடங்கியிருக்கும் அம்மா பகவான் சோடி

**சாதனை:** வருசா வருசம் அவதாரம் எடுப்பதாகச் சொல்லி சனத்தை ஏமாற்றி விடுவது

**சோதனை:** இன்னமும் வாயால் லிங்கம் எடுக்கப் பழகாதது

**கனவு:** தமிழர் வாழுகிற நாட்டிலை யெல்லாம் கிளை தொடங்கிறது

**நனவானது:** கனடாவில் செருப்புப் பூசை செய்தது

**பஞ்ச் டயலாக்:** ஏமாற்ற நான் ரெடி..ஏமாற நீங்கள் ரெடியா

**புலம்பல்:** சாமியின்ரை பேரைச் சொல்லி நானும் வயித்துப் பிழைப்பை நடத்துவமெண்டால் சில வயித்தெரிச்சல் பிடிச்சதுகள் விடுதுகள் இல்லை.

*அன்புடன் சாத்திரி.*


## அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

**உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?**

**நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?**

**"தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது"**

தஞ்சம் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை - கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

**020 8444 6655.**

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலைய்ம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

**"யாமிருக்கப் பயம் ஏன்?"**

அழையுங்கள்:

**தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்**

**0208 444 6655**

தமிழர் அறங்காவற் கட்டளை
(இலக்கம்: 1117267)

**tamil community**
"building a better community"
C.A. House
28-30 Muswell Hill Broadway
London N10 3RT
Tel: 020 8444 6655
Fax: 020 8444 6244
Email: info@thamilcommunity.org
www.thamilcommunity.org

# சுயரூபத்தை மீண்டும் வெளிக் காட்டிய கலைஞர்




அநபாயன்
(ஒருபேப்பருக்காக)

'நரிக்கண்ணன் வஞ்சித்துக் கொன்றபோது
நா்னற்று போனதெண்ணி அழுவேனா நான்'
*(பாண்டியன் பரிசு, பாரதிதாசன்)*

### காட்சி ஒன்று 14.10.2008
### தமிழக சர்வ கட்சி மாநாடு,

தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் ஆறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

அவற்றில் தலையாயது சிறிலங்காஅரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஒரு போர் நிறுத்தத்திற்கு இந்திய மத்திய அரசு அழுத்தமளிக்க வேண்டும், தவறும் பட்சத்தில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியை பிரதிநித்துவப்படுத்தும் மக்களவை உறுப்பினர்கள் தங்களது பதவியை இராஜினமாச் செய்வார்கள் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டு இருந்தது. இதற்கான காலக்கெடுவாக இரண்டு வாரங்கள் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டு இருந்தது.

### காட்சி இரண்டு 26.10.2008.
### புது தில்லி, சவுத் புளொக்

பசில் இராஜபக்ச, இந்திய வெளியுறவு அமைச்சர் பிராணப் முகர்ஜி மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாரயணன், மற்றும் வெளியுறவுச் செயலர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் முடிவில் சரியாக 416 ஆங்கிலச் சொற்கள் கொண்ட ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

### காட்சி மூன்று 26.10.2008
### மாலைநேரம், கலைஞர் கருணாநிதியின் சென்னை இல்லம்

கலைஞர் கருணாநிதியைச் சந்தித்த பிரணாப் முகர்ஜி இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டையும் சிறிலங்கா அரசின் சிறப்புத் தூதுவருடனான சந்திப்பின் விளைவாக ஏற்பட்ட உடன்பாட்டினையும் விளங்கப் படுத்துகிறார்.

சுற்றிலும் ரீ. ஆர். பாலு, தங்கபாலு, மு.க.ஸ்டாலின், கனிமொழி, கலைஞரின் மனைவி இராசாத்தி ஆகியோர் தங்கள் முழுப் பற்களும் தெரிய புன்னகைத்த வண்ணம் காணப்படுகின்றனர்.

இந்திய அரசின் செயற்பாட்டில் திருப்தி தெரிவித்த கருணாநிதி தான் மத்திய அரசுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் மக்களவை உறுப்பினர்கள் இராஜினாமாவிற்கு செய்யப் போவதில்லை என்று தெரிவித்தார்.

இவ்வளவு நாடகமும் போதாதென்று கலைஞர் ஈழத் தமிழர்களுக்காக நிவாரண நிதி வேறு சேர்க்கத் தொடங்கி விட்டார்.

கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக வேறு யாருடைய உதவியுமின்றி ஒரு மகத்தான விடுதலைப் போராட்டத்தை நடாத்தி வருகின்ற ஈழத் தமிழர்களுக்கு கருணாநிதியின் பிச்சைக் காசுதான் ஒரு குறை. உலகிலுள்ள வல்லரசுகள் எல்லாம் பலமூட்டி, பயிற்சியளித்து உருவேறி நிற்கின்ற சிறிலங்கா இராணுவத்துடன், விடுதலைப் புலிகள் தமது சொந்த மக்களின் பொருளாதார உதவியினால் தான் போரிட்டு வருகிறார்கள்.

நாளை தேசம் விடுதலை பெற்ற அடுத்த நிமிடமே, தேச நிர்மாணத்தை தொடங்குவதற்கான பொருளாதார, அறிவியல்பின்பலத்தோடு தான் ஈழத் தமிழினம் இருக்கின்றது.

நிலமை இவ்வாறு இருக்க, கலைஞர் ஈழத் தமிழர்களுக்கு தன் சொந்தப் பணமாக பத்து லட்சத்தை வழங்கியுள்ளாராம். கலைஞர் திரைக்கதை எழுதுவதை நிறுத்தி பலகாலமாகி விட்டாலும் அவ்வப்போது நடைமுறை வாழ்க்கையில், அரசியலில் வசனம், திரைக்கதை எழுதி அரங்கேற்றுவதில் வல்லவராகத்தான் இருக்கின்றார்.

சிலவாரங்களுக்கு முன்னர், உண்மையான தமிழின உணர்வாளர்களாலும், ஒரு சில பத்திரிகை நிறுவனங்களினாலும் எந்தவித உள்நோக்கமும் இன்றி ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் பற்றி தமிழகத்தில் தொடங்கி வைக்கப்பட்ட எழுச்சியானது, கலைஞர் கருணாநிதியினால் கபளீகரம் செய்யப்பட்டு தனது அரசியல் நலனுக்காக தாரைவார்க்கப்பட்டு விட்டது.

கலைஞர் கருணாநிதி பற்றி சில மாதங்களுக்கு முன்னர் ஒரு பேப்பரில் கட்டுரை ஒன்று எழுதியிருந்தேன். அதில் பொதுவாக கலைஞரின் நேர்மைத்திறன் மற்றும் செயல் திறன் பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தேன்.

திராவிட அரசியல் பற்றி சிறு வயதிலிருந்தே படித்தும் கேட்டும் வரும் நான், ஒட்டு மொத்த திராவிட இயக்கத்திலும், தமிழ் தேசியத்திலும் கலைஞரின் விசுவாசத்தன்மை பற்றி எனக்கு நீண்ட காலமாகவே சந்தேகம் இருந்து வந்துள்ளது.

கலைஞர் பெரியார் தலைமையிலும் பின்னர் அண்ணாதுரை தலைமையிலும் இயங்கிய காலத்தில் தான் வெளிப்படையான பிரிவினைவாதம் பேசப்பட்டது.

அறுபதுகளில் அண்ணாத்துரை இந்திய தேசத்தை ஏற்றுக் கொண்டு தமிழக முதல்வராக குறுகிய காலம் பணியாற்றி புற்றுநோய் காரணமாக இறந்த பின்னர் தான் கலைஞர் கருணாநிதி முன்னிலைக்கு வருகிறார். அவ்வேளையில் தி.மு.க உத்தியோகபூர்வமாக பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டது.

அண்ணாத்துரைக்குப் பின்னரான நாற்பதாண்டு கால கலைஞர் தலைமையிலான திமுகவின் வரலாற்றை நுணுக்கமாக ஆராய்ந்தால் சில உண்மைகள் தெளிவாகப் புலப்படும்.

அதாவது தமிழ் தேசியம் தொடர்பான திமுகவின் பற்றுறுதி படிப்படியாகக் குறைந்து, வெறும் வாய்ப் பேச்சு மட்டும் தான் மிஞ்சிக் கிடக்கின்றது. இதற்கு வரலாற்றில் சில நிகழ்வுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்

எண்பதுகளில் தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விடயத்தில் கூட அன்றைய தமிழக அரசுடன சேர்ந்து செயற்படாமல் தனிவழியில் சென்றவர்

தொண்ணூறுகளில் ஒருமுறை இந்தியப் பிரதமராவதற்கான சந்தர்ப்பம் உருவாகிய வேளையில் மூப்பனாரை முழுமனதுடன் ஆதரிக்காமல் நழுவல் போக்கைக் காட்டியவர்

மிக வேகமாக ஆங்கில மயப்பட்டு வரும் தமிழகத்தில், தமிழைக் கட்டாயம் சகல ஆரம்பப் பாடசாலைகளிலும் கற்பிக்க வேண்டும் என்ற அரசு ஆணையை உச்சநீதிமன்றம் ரத்துச் செய்தபோது அதனை மேன்முறையீடு செய்யாமல் விட்டு வியாபார மயப்பட்டு விட்ட தமிழக கல்வி நிறுவனங்களின் அழுத்தத்திற்குப் பணிந்து போனவர்.

மிகவும் வசதிக் குறைவான பின்னணியிலிருந்து பொதுவாழ்க்கைக்கு வந்த கலைஞரின் குடும்பம் தற்போது தமிழகத்தின் ஊடக, சினிமாத் துறையை தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளது. இவ்வளவு சொத்துக்கள் எவ்வாறு கலைஞர் குடும்பத்திற்கு வந்து சேர்ந்தது என்று எந்த விளக்கமும் இல்லை

தனது குடும்ப உறுப்பினர்களைக் கட்சியில் முன்னிறுத்தி திறமை வாய்ந்த பல கட்சி உறுப்பினர்களை வெளியேறச் செய்தவர். வாரிசு அரசியல் பற்றிய குற்றச்சாட்டிற்கு ஒருமுறை பதிலளிக்கும்போது காஷ்மீர் பிராமணர் மோதிலால் நேருவிற்குப் பின்னர் அவரது மகன் ஜவஹர்லால் நேரு தலைமையேற்கலாம், அவரது மகள் இந்திரா காந்தி தலைமையேற்கலாம், அவரது மகன் தலைமையேற்கலாம். ஒருவரும் ஒன்றும் பேசமாட்டார்க்ள. ஆனால் சூத்திரன் கருணாநிதியின் மகன் தலைமையேற்றால் எல்லோருக்கும் அது பெரிய விடயமாகத் தெரிகின்றது என்று பதிலளித்திருந்தார்

அதாவது தனக்கு எதிரான விமர்சனத்தை திசைமாறச் செய்து வேறு விடயத்தைத் தூக்கிப் பிடிப்பது இவரது வழமை. இச்சந்தர்ப்பத்தில் பிராமணிய எதிர்ப்பை ஒரு வாய்ப்பான ஆயுதமாகப் பயன்படுத்தியிருந்தார்


தமிழைச் செம்மொழியாக்கும் விடயம் என்பது ஒரு வெறும் குறியீட்டுச் செயற்பாடே, செம்மொழி அங்கீகாரம் தமிழ் மொழி அழிவடைவதைத் தடுக்கப் போவதில்லை.

எல்லோருக்கும் வருத்தமளிக்கும் வகையில் கலைஞர் தனது பதவி, குடும்பம், மற்றும் குடும்பத்தின் பணப் பேராசை என்பன பற்றித் தான் சிந்தித்தார். தனக்குக் கிடைத்துள்ள பதவியையும் உலகத் தமிழரின் தலைவர் என்ற அங்கீகாரத்தையும் கொண்டு அவரால் உலகத் தமிழனத்துக்கு எத்தனையோ விடயங்களைச் செய்திருக்க முடியும். ஆனால் அவரோ தனது பிள்ளைகளுக்குப் பதவி கொடுத்து மகிழ்கின்றார்.

நெடுமாறனுக்கு எதிராக கீழ்த்தரமான கவிதை எழுதும் அளவிற்கு அவரின் தரம் தாழ்ந்து விட்டது என்பதே யதார்த்தமானதாகும்.

தமிழீழத் தமிழர்களை 'புலிக்கூட்டம்' என்று எழுதும் அளவிற்கு தனது தரத்தை தாழ்த்தியவரிடம் இருந்து ஈழத் தமிழர்கள் எந்த வகையான உதவியையும் எதிர்பார்ப்பது என்பது மிகவும் மடைமைத்தனமானது.

தமிழகத்திலுள்ள தமிழின உணர்வாளர்களையும் தமிழ் தேசிய ஊடகங்களையும் துணையாகக் கொண்டு தமிழகத்துச் சகோதரர்களுடன் நேரடியாகப் பேசுவது தான் தமிழ்த் தேசிய அங்கீகாரத்திற்கான உலகத் தமிழர் கிளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

"God Bless All"

ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்

ஜோதிஸ்/பண்டித் டி.சாஸ்திரி

VEL SUPERMART
834 LONDON ROAD,
THORNTON HEATH POND
CR7 7PA.

**Tel: 07960077934**

(Note: All matters will be kept confidently)
TIMINGS: 8.00 am - 9.00pm (ALL DAYS OF A WEEK)

**கைரேகை, சாமுந்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாக கணித்து வழங்குவார்.**

**கல்வி, வேலை வியாபாரம், காதல், கணவன் மனைவி ஒற்றுமை, திருமணப் பிரச்சனை தீர, தொழில் முடக்கம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அதிஸ்டக் கற்கள், கோர்ட் பிரச்சனை, உடல் நலக்குறைவு, லாட்டரி அதிஸ்டம், பில்லி சூனியம், மந்திரம், செய்வினை ஜனவசிகம், செய்வினையால் பாதிப்படைந்தவர்களுக்கு பரிகாரம் வழங்கப்படும்.**



**அனைத்து விதமான தோசங்களுக்கும் லக்சுமி பூசை மூலம் பரிகாரம் வழங்கப்படும்.**

திருமணப் பொருத்தம் குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.

பிறந்த குழந்தைகளுக்கு சாதகம் இலவசமாகக் கணித்துக் கொடுக்கப்படும்.

குழந்தைகளுக்கு பாலகிரக இயந்திரம் இலவசமாகத் தரப்படும்.

ஒருமுறை சந்தியுங்கள்.

SERVICE: TAMIL, HINDI, ENGLISH & OTHER LANGUAGES.

# தம்பி டக்ளஸ். நடக்கப் போவது தெரியுமா உனக்கு?

சென்ற வாரம் தமிழகத்திலிருந்து வெளிவரும் துக்ளக் இதழில் நீ தமிழக அரசியல் தலைவர்களுக்கு எழுதிய பகிரங்க மடலைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அதில் இலங்கையில் புலிகளை ஒழிக்கத் தமிழகத் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும். புலிகள் ஒழிக்கப் பட்டால் தமிழர்கள் சகல சுதந்திரத்தோடும் கௌவரத் தோடும் இலங்கையில் வாழ்வார்கள். இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு காண்பதற்கு புலிகளே தடையாய் உள்ளார்கள். தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி தங்கள் சுயநலத்திற்காக தமிழ் மக்களின் அமைதியும் நிம்மதியும் நிறைந்த வாழ்க்கையைக் கெடுக்கினறார்கள். எனவே இத்தகைய கொடுமைகளைச் செய்யும் புலிகளுக்கு எதிராக தமிழகத் தலைவர்களின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற கருத்துப்பட அந்த பகிரங்க மடலில் தமிழகத் தலைவர் களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தாய்.

இதற்குப் பதிலாக நானும் உனக்கு ஒரு பகிரங்க மடலை எழுத வேண்டும் போல் தோன்றியது. அதனால் இதை எழுதுகிறேன்.

1985ஆம் ஆண்டளவில் தமிழர்களின் இழந்த உரிமையை வென்றெடுப்பேன், தமிழீழம் அமைப்பேன் என்று வீராவேசத்தோடு சிலிர்த்தெழுந்து உனக்கென் றோர் படை திரட்டி இலங்கை அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தாய்.

பல அரச வங்கிக், காவல் நிலையங்கள், பள்ளிக் கூடங்கள், அரச வைத்தியசாலைகள் மற்றும் பல்வேறு பட்ட அரச நிறுவனங்கள், பேரூந்துகள், தொடரூந்துகள், தொழிற்சாலைகள், மின்சார நிலையங்கள் என்பவற்றைக் குண்டு வைத்துத் தகர்த்தோ அல்லது ஸ்தம்பிக்கச் செய்தோ அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டங்களை முடுக்கி விட்ட முன்னணி தமிழ் ஆயுதக் குழுக்களில் உனது குழுவும் ஒன்று.

உன் மனச் சாட்சியைத் தொட்டுச் சொல். ஏன் அந்த ஆயுதப் போராட்டத்தை அன்று அரசுக்கு எதிராய்த் தொடுத்தாய்? தமிழர்களின் நிம்மதியான வாழ்க்கையைத் தமிழீழத்தின் பெயரால் கெடுத்தாய்? பின்னர் பல நூற்றுக் கணக்கான தமிழர்களைக் ஏன் கொன்று குவித்தாய்? ஏன் எதற்கு என்று சொல்லிவிடு. தமிழகத்துத் தமிழர்களுக்கு மட்டுமல்ல. ஈழத்தமிழர் களுக்கும் சேர்த்துச் சொல்லிவிடு.

தமிழீழ விடுதலைக்காகவே ஆயுதப் போராட்டம். வடக்கு கிழக்கு இணைந்த அரசியல் அங்கீகாரம் பெற்ற தமிழராட்சியை நிறுவும் வரை உன் போராட்டம் ஓயாது என்றாயே அன்று. இன்று வடக்கு கிழக்கு இணைந்த தமிழராட்சியைப் பெற்ற பின்னர் தான் நீ எந்த அரசோடு போர் தொடுத்தாயோ அந்த அரசோடு சமரசம் செய்து அமைச்சர் பதவி பெற்றாயா? இந்த உனது உன்னத சாதனையை தமிழக மக்களுக்கு மட்டுமல்ல. உலகத்துக்கும் எடுத்துச் சொல்லிவிடு.

எண்பதாயிரம் அப்பாவித்தமிழர்கள் கொல்லப்பட்டு, பல லட்சக்கணக்கான தமிழர்கள் அங்கவீனர்களாக்கப் பட்டு, பல பெறுமதியான தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டு இலங்கைத்தமிழர்கள் இன்று காணும் அவல நிலைக்கும் கண்ணீர் வாழ்வுக்கும் நீயும் ஒரு காரணமல்லவா?

இதையும் மறக்காமல் கடிதமூலம் துக்ளக் சோவுக்கு எழுதிவிடு. ஏனென்றால் தமிழகத்தில் ஜெயும் சோவும் ஆடும் கபட நாடகத்திற்கு நீயும் ஒரு பகடைக் காயல்லவா?

உன்னைப் போல் பல பேர் படை திரட்டினர். இலங்கை அரசுக்கெதிராக ஆயுதமேந்தினர். தமிழீழம் அமைப்பதற்காக. ஆனால் அத்தனை பேரும் வெறி பிடித்த சிங்கள அரசின் காலில் சாட்டாங்கமாய் விழுந்து எதிரியின் ஏவல்நாய்களாய் மாறினர்.

ஆனால் மகா அலெக்சாண்டர் போல் இன்று தமிழீழப் போர்க்களத்தில் தனித்து நின்று தன் படையினரை அரச படைகளுக்கு எதிராக வழி நடத்தும் மறத்தமிழ் மாவீரன் பிரபாகரனின் பெயரை உச்சரிக்கும் தகுதி கூட உன்னைப் போன்ற வஞ்சனையாளர்களுக்கும் பச்சோந்திகளுக்கும் உண்டா?

ஒன்றை மட்டும் புரிந்து கொள். இலங்கைத் தமிழரர் களின் பாதுகாப்புக் கேடயம் புலிகள். உன்னைப் போல் பல போலிகள் தற்போது அனுபவிக்கும் பவிசுக்கும் பதவிக்கும் கேடயமாய் அரசிடமிருந்து உங்கள் உயிர் காப்பதும் புலிகள் தான்.

சாதாரண தமிழ் மக்களை, உங்கள் உயிர்களைக் காப்பதற்காக மனிதக் கேடயமாகப் பாவித்து அவர்களின் நிம்மதியான வாழ்வைக் கெடுத்து வாழும் நடமாடும் பிசாசுகள் நீங்கள்.

நீ எழுதிய மடலில் கூறியபடி யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டு அரசு வெற்றிபெறுமானால் இலங்கை யில் இன்று வாழும் தமிழர் சிங்கள அரசின் நிரந்தர அடிமைகளாவர். சுதந்திரக் காற்றைச் சுவாசக்கும் சந்தர்ப்பம் எந்தக் காலத்திலும் அவர்களுக்குக் கிட்டாது. இது மட்டுமல்ல உன்னைப் போன்றவர்களின் சொல்லும் செயலும் சிங்கள அரசின் முன் செல்லாக் காசாகி விடும்.

தெரிந்தோ தெரியாமலோ தமிழீழத்துக்காக குரல் கொடுத்தவன் என்ற காரணத்தினால் நீயும் உன்னைப் போல் அரசுக்குச் சாமரை வீசும் அனைத்து ஆயுதமேந்திய குழுக்களும் வஞ்சமே உள்ளமாய் நஞ்சே இரத்தமாய் சதியே தொழிலாய் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆனந்த சங்கரிபோன்றவர்களும் சிங்கள அரசு தோண்டப்போகும் சவக்குழிக்குள் அடக்கம் செய்யப்படுவர்.

இதுதான் புலிகள் யுத்தத்தில் தோற்றால் நடக்கப் போவது. இதை நீ புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொண்டு உன் தற்போதைய வழியை மாற்றி தமிழின விடுதலைக்கு பயன்படுவாய் என்று நான் நம்புகிறேன்.

நாயாக, நரியாக வாழ்ந்து சாவதை விட வீர வேங்கை யாக எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக வாழ்ந்து சாவதே சரித்திரம் படைக்கும் செயல் என்பதை உணர்ந்து கொள்.

*க. செல்வநாயகம்* (LLB)
*சட்டத்தரணி, லண்டன்*

## கொடுமையடா சாமி!

நபர்1 : இலங்கைத் தமிழருக்காக நாங்கள் ஏன் ஆர்ப்பாட்டம் செய்ய வேணுமெண்டு அஜித் கேட்டானாம்.

நபர் 2 : எங்கடை சிலதுகள் தல தல எண்டு அந்தத் தறுதலையைத் தலையிலை வைச்சிருந்தினம். இப்ப அவரின்ரை வண்டவாளம் வெளிச்சிட்டுது.

நபர் 1: அதுசரி உந்த ஏகன் பட டிவீடீ உங்களிட்டை இருக்குதே.. இருந்தாத் தாங்கோ, பாத்திட்டு நாளைக் குக் கொண்டு வந்து தாறன்.

# பழங்கள்ளு

**வழுதி**
*(ஒரு பேப்பருக்காக)*

## யாம் எந்தையும் இலமே

வாழ்ந்த மண்ணை, வாழ்ந்த வீட்டை, வாழ்ந்த தேசத்தை விட்டு இடம் பெயர்ந்து, புலம் பெயர்ந்து செல்வது என்பது எவ்வளவு வலி தரும் வேதனை. வேரோடும், வேரடி மண்ணோடும், விழுதுவிட்ட வாழ்வோடும் வீசி எறிபட்ட வேதனை நமக்கு. எத்தனை சுகங்களை, எத்தனை சொர்க்கங்களை, எத்தனை சுகந்தங்களை நாம் இழந்து அல்லாடிக் கொண்டிருக்கிறோம். இழப்பின் வலி சொல்ல வார்த்தை ஏதும் இருக்கிறதா?

இழப்பின் வலி சொல்லும் சங்க காலக் கவிதை ஒன்று. கவிதை சொல்ல முன்னர் கதை ஒன்று.

பறம்பு மலை என்ற நாட்டை பாரி என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான். அவன் நல்லவன். வல்லவன், வள்ளல். மக்கள் அவன்பால் அன்பும் ஈர்ப்பும் கொண்டார்கள் ஏனைய அரசர்களால், முக்கியமாக சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் மூவேந்தர்களால் பாரியை வெற்றி கொள்ள முடியவில்லை.

பறம்பு மலையை தம் வசமாக்க முயன்ற மூவேந்தர்கள், பாரியை பறம்பு மலையிலிருந்து இறக்கி பேச்சுவார்த்தைக்கு அழைத்து, பேச்சுவார்த்தை முடிந்து அல்லது முறிந்து பாரி தன் தேரில் ஏற, மூவேந்தர்களும் அம்பெய்தி பாரியைக் கொல்கிறார்கள். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி என்ற அம் மன்ன ன் மண்ணோடு சரிந்தான்.

பாரிக்கு அங்கவை, சங்கவை என்று இரு மகள்மார் உண்டு. (சிவாஜி திரைப்படத்தில் வந்த அங்கவை, சங்கவை அல்ல.) பாரி இரு மகள்மாரையும் கபிலர் என்ற புலவரிடம் ஒப்படைத்து விட்டு போருக்குப் போயிருந்தான்.

போரிலிருந்து பாரி மீண்டு வரவில்லை. இப்போது பறம்பு மலையை மூவேந்தர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இனிப் பாரி மகளிருக்கோ, கபிலனுக்கோ பறம்பு மலையில் இடமில்லை. அங்கவை, சங்கவை என்ற பாரி மகளிரை அழைத்துக் கொண்டு கபிலர் பறம்பு மலையை விட்டுக் கீழிறங் குகிறார்.


அது இராப் பொழுது. பூரணை நிலவு பொழிகிறது. நிலா வெளிச்சத்தில் தாம் வாழ்ந்த பறம்பு மலையை பாரி மகளிர் பார்க்கிறார்கள். இப்பொழுது தந்தையும் இல்லை. பறம்பு மலையும் தங்களிடம் இல்லை. கபிலர் பாரிமகளீர் குரலாய்ப் பாடுகிறார்?

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையும் உடையோம்
எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்.
யாம் எந்தையும் இலமே'

இதன் பொருள்: சென்ற மாதம் அந்த வெண்மையான நிலவில் எமது தந்தையாரும் இருந்தார். எமது பறம்பு மலையும் பிறர் கைப்பற்றவில்லை. இந்த மாதம் இன்றைய வெண்மையான நிலவில் வெற்றி முரசு கொட்டும் மூவேந்தர்கள் எமது பறம்பு மலையை கைப்பற்றி விட்டார்கள். எங்களுக்கும் தந்தை இல்லாது போனார்.

எத்தனை துயரம் மிக்க பாடல் இது. இழப்பின் வலியை இதற்கு மிஞ்சி எப்படி சொல்லமுடியும், இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் யாத்த பாடல் இது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே இழப்பும், துயரும், கசப்பும், வெறுப்பும் தான்.

இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின்னர் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்ததா? அதே இழப்பும், வெறுப்பும், கசப்பும், நெருப்பும்தான். ஆண்டியாய் உள்ள மனிதர்களுக்கு, தமிழர்களுக்கு இதுதான் கதியா? இதுதான் விதியா?


NAG & Co.
SOLICITORS
Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myatsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line
✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

# பரியாரிமாரின் இயற்கை வைத்தியம்



இறப்பு நாளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற 'யூடி' என்ற தொலைக்காட்சி நடிகையின் செய்தி ஒன்றை பிரபல ஆங்கிலப் பத்திரிகையொன்று வெளியிட்டிருந்தது ஆறு மாதத்துள் தன் வாழ்க்கை முடிந்துவிடும் என அழுகிறாள் அந்த நடிகை. புற்றுநோய், மரணத் தறுவாய், இறப்பு எப்பவும் நிகழலாம் என்ற நிலை.

இந்த வேளையில் எங்களூர் செல்லத்துரை பரியாரியார் நினைவுக்கு வந்தார். சேடம் இழுக்கும் தறுவாயில் எத்தனை நாட்களுக்கு உயிர் தாங்கும், எப்போ எத்தனை மணிக்கு உயிர் பிரியும் என்பதை கைநாடி துடிப்பை வைத்துக் கணித்துக் கூறக் கூடிய திறமைசாலி அவர்.

இங்கே மூளைப்புற்று நோயால் வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்களால் கைவிடப் பட்டிருந்த கந்தையா குஞ்சி கூட எத்தனை நாள் இவர் உயிர் தாக்குப் பிடிக்கும் என்று கூற இவர்களால் முடியவில்லை ஆனால் ஊரில் அந்த நாட்களிலேயே அது சாத்தியமாயிற்று.

இதே புற்று நோயால் கொழும்பிலிருந்து காரில் கொண்டுவரப்பட்டு இறப்பை எதிர் பார்த்துக் கொண்டிருந்த பொன்னுப்பிள்ளை குஞ்சியாச்சியின் உயிர் பிரியும் நாள், நேரம் உள்ளபடி கணித்துச் சொன்னவர் செல்லத் துரை பரியாரியார்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர் : ப.வை. ஜெயபாலன்

கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் உறவுகள் நீண்ட விடுமுறை எடுத்து வந்து நின்று அலையாமல் செல்லத்துரைப் பரியாரியார் கணிப்பு நாளை ஒட்டி கொள்ளிக் கடமைக்கு வரும் அயலூரார் அந்த நாட்களில் அதிகம்.

கட்டையான, ஒல்லியான, காது வழியாகவும் நரைமயிர்கள் எட்டிப் பார்க்கின்ற செல்லத் துரைப் பரியாரியாருக்கு காது மந்தம், இடி விழுந்தாலும் கேளாது ஆனால் பணம் வாங்காமல் அவர் கொடுக்கின்ற மருந்தை வாங்கி, அவர்கூறும் பத்தியத்தை கடைப்பிடிக்க காத்திருந்தோர் அந்த நாட்களில் அதிகம்.

பரம்பரை பரம்பரையாக தொடர்ந்த மருத்துவசேவை. வருடத்துக்கு ஒருதரமோ, இரண்டு தரமோ பேதி மருந்து குடித்து வயிற்றில் உள்ள அழுக்குகளை மலத்தோடு வெளியே வர வைப்பது அந்த நாள் வழமை.

முதல் நாள் சீயாக்காய், அரப்பு வைத்து முழுகிவிட்டு மறு நாள் காலை கோப்பியும் குடியாமல் பேதி மருந்து வாங்க பரியாரியார் வீட்டுக்குப் போவோம். சர்க்கரையில் குழைத்து உண்ணுமாறு கூறி அவர் பேதி மருந்தை பூவரசம் இலையில் வைத்துத் தருவார். வெறும் தேநீர் மட்டும் இடை இடையே குடித்துக் கொண்டு மதியம் வரை பத்துப் பன்னிரண்டு தரம் மலகூடம் போவோம். வயிற்றுப் பூச்சிகள், கிருமிகள் எல்லாம் மலத்தோடு போய் விடும். மதியம் அம்மா சமைத்துத் தரும் சரக்குக் கறி, பத்தியச் சாப்பாட்டோடு பேதி வைத்தியம் நிறைவுக்கு வரும்.

சலரோக வைத்தியத்துக்கும், பிறவுக்கும் பெயர் பெற்றவர் விச்சுப் பரியாரியார். மிக உயரமான, கறுத்த, வெண்தாடி, குடும்பியோடு பொல்லுப் பிடித்தபடி நடப்பார் விச்சுப் பரியாரியார். ஓலையால் வேய்ந்த எம் வீட்டு தலைவாசலில் ஒவ்வொரு மாலையும் வந்து சார்மனைக் கதிரையில் படுத்து இருந்தபடி சுருட்டுப்புகை வாயால் வர இயற்கை வைத்தியத்தின் மகிமையை எடுத்துக் கூறுவார் விச்சுப் பரியாரியார்.

காட்டில் உள்ள மிருகங்களுக்கு சுகயீனம் வந்தால் அவை தாமாக போய் அதை மாற்றும் சக்திகொண்ட புல், பூண்டு, இலை, குழைகளை தாமாக தின்று நோயைப் போக்கிக் கொள்ளும் என்பார்.

மருந்துக்கு தேவையான பச்சிலைகளை வன்னிக்காடு வரை ஆள் அனுப்பி பெற்று அவற்றை அரைத்து காய விட்டு மருந்துக் குளிசை செய்து நோயாளருக்கு கொடுக்கும் விச்சுப் பரியாரியார், மருந்துக்கு கை நீட்டி பணம் வாங்கினால் பலிக்காது என்பார்.

செங்கமாரி நோய்க்கு வட மாகாணத்தில் ஏற்ற வைத்தியம் செய்யக் கூடிய இன்னொரு பரம்பரை எம் ஊரில் இருந்தது. இன்றும் இருக்கின்றது. ஒரே ஒரு மாறுதல். ஆயுள் வேத வைத்தியமும் கலாநிதி பட்டமான 'டாக்ரர்' பட்டப் படிப்புக்கு உரியது என அரசாங்கம் அறிவித்ததை தொடர்ந்து பரியாரியாரும் 'டாக்ரராகி' தனியார் மருத்துவ மனையை நடாத்தி வருகிறார்கள்.

கைதடியில் அமைந்திருந்த ஆயுர்வேத கல்லூரியில் வைத்திய பரம்பரையைச் சேர்ந்த பலர் பயின்றார்கள். குளிசைகள் பத்திய முறைகளை நவீனமயப்படுத்தி இன்றும் வைத்தியம் தொடர்கிறார்கள்.

செங்கமாரி வைத்தியம் 'பொன்னார்' ஆச்சி மூலம் மகள் முத்தம்மாவுக்கு கையளிக் கப்பட்டது. எரிபொருள் விற்பனை நிலையம் நடத்திக் கொண்டிருந்த வசதியான குடும்பம். இலவசசேவையாக செங்கமாரிவைத்தியத்தை செய்தது.

'பனி பேபி' வீட்டு அல்சேஷன் நாய் கடித்த போது பொன்னார் ஆச்சியிடம்தான் என்னை அம்மம்மா கூட்டிக் கொண்டு போனார். சுத்த வெள்ளைச் சேலை, முழங்கை வரை நீண்ட வெள்ளைச்சட்டை, நரை திரண்ட முடி என்று மிகவும் கட்டையான பொன்னார் ஆச்சி தவக் கோலமாகத்தான் என்நேரமும் காட்சி அளிப்பா. புலி நெய் என்று ஒன்றை கடி வாயில்அப்பி கொள்ளிக் கட்டையால் அதை உருக்கி முதல் நாள் வைத்தியம். பின்னர் மூன்று முறை மருந்துக் கட்டோடு புண் ஆறியது. இலவச வைத்தியம் தான்.

செங்கமாரி என்று சிறுநீர் மஞ்சளாக போகின்ற மஞ்சள் காமாலை நோய். பாரா முகமாக விட்டால் சிறுநீர் ரத்தமாகப் போகும். கொழும்பில் வேலை செய்பவர்கள் கூட செங்கமாரி வைத்தியத்துக்கு பொன்னார் ஆச்சி, முத்தம்மாக்கா, சக்திவேல் என்று பரம்பரையாக வைத்தியத்துக்கு போவார்கள். கையால் உருட்டி காயவைத்த குளிசைகளும் பத்தியமும் தான் மருந்து. இரு வாரங்களில் செங்கமாரி ஆறிவிடும்.

சில்லாலைப் பரியாரியார், அத்த நாசியார், இராமசாமிப் பரியாரியார், பாக்கியப் பரியாரியார் என பரியாரிமார் நோய்க்கு செய்த பரிகாரம் மறக்க முடியாதது. பலர் இறப்பை தள்ளிப் போட்டது.

அகதியாக மாறி நாடு, நாடாகத் திரிந்து ஆங்கில வைத்தியமே கதியென்று மாறிவிட்ட இந்த நிலையில் அந்தப் பழைய நினைவுகளே மீட்டுப் பார்க்க மட்டுமே முடிகிறது.

### இன்றைய தத்துவம்

பெரிய விசயங்களை விட சிறிய விசயங்கள் நம்மை அதிகம் காயப்படுத்திவிடும்.
உ+.ம்: மலைமேல் உட்கார முடியும்
குண்டூசி மேல் உட்கார முடியுமா?

ஹோட்டல்ல காசு இல்லை எண்டு சொன்னா
மாவை ஆட்ட சொல்லுறாங்க.
பஸ்சில காசு இல்லை எண்டு சொன்னா
பஸ்சை ஆட்ட சொல்லுவாங்களா?


## Do you run a business?
## Do you employ staff?
## Do members of public have access to your business premises?

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

Covers for shops and businesses can be arranged with excesses as low as

**£50** for Glass Claims
for Money Claims
for Frozen Food Claims
and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop

## ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா? உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism ) நிபுணர்களாகிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில எங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

| | |
|---|---|
| **Supermarkets** | **Builders Merchants** |
| **Grocers** | **News Agents** |
| **Off Licenses** | **Boutiques** |
| **DIY & Hardware** | **Heating & Plumbing** |
| **Fish & Chips** | **Retail & Wholesale** |
| **Restaurants** | **Manufacturers** |
| **Clothing Retail** | **Wholesalers** |
| **Hairdressers** | **Production** |
| **Beauty Saloons** | **Distribution** |

## Need Van Insurance?

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

## Have 3 or more vehicles?

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver {17+ without any higher excesses} and many more features.

**Ragarfield** can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.


Talk to us now…

Tel: **01474 32 88 88**

**Ragarfield Limited**
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

*Your business insurance can also be extended to include the contents in the flat above if required*

# கப்ரன் கோணேஸ் (R.P.G. கோணேஸ்)



16.05.87.அன்று பிற்பகல் இரண்டு மணியளவில் வல்லைவெளியில் வடமராட்சியிலிருந்து.ஒரு வாகனம் அச்சுவேலி நோக்கி வந்து கொண்டிருந்தது.

அந்த வாகனம் வல்லை பாலத்தை அண்மித்துக் கொண்டிருந்த பொழுது பலாலி படைத்தளம் நோக்கி போய்க் கொண்டிருந்த உலங்கு வானுர்தியொன்று அந்த வாகனத்தை கவனித்து விட்டு அதன் மீது தாக்குதலை தொடுக்கவும் அச்சுவேலியில் வல்லைவெளியின் முடிவில் இருந்த தென்னங்காணி ஒன்றினுள் இருந்த காவலரணில் காவல் கடைமையில் இருந்த இரண்டு போராளிகள் அந்த உலங்குவானுர்தி மீது தாக்குதலை தொடுக்க உலங்கு வானுர்தி திரும்பி பலாலி படைத்தளத்தினுள் சென்று மறைந்து கொள்கிறது.

உலங்கு வானுர்தி நடாத்திய தாக்குதலில் வாகனத்தில் வந்த ஒருவர் காயமடைந்திருந்தார் அவரிற்கு முதலுதவி வழங்கி அவரை அந்த வாகனத்திலேயே வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துவிட்டு அவர்கள் தங்கள் காவலரணினுள் மீண்டும் போகவும் பலாலியில் இருந்து ஒரு கடல் விமானம் மேலெழுந்து வட்டமடிக்க தொடங்க இரண்டு உலங்கு வானூர்திகள் மேலெழுந்து போராளிகள் இருந்த அந்த காவலரணை தாக்கத் தொடங்கின.

உடனடியாக அந்த போராளிகளிற்கு உதவ அச்சுவேலி வசாவிளான் வீதியில் ஒட்டகப்புலத்தில் அமைந்திருந்த புலிகளின் முகாமில் இருந்து சில போராளிகள் ஒரு வாகனத்தில் விரைகின்றனர். அவர்கள் அச்சுவேலி நோக்கி போய்க் கொண்டிருந்த வாகனம் பட்டுபூச்சி பண்ணையை கடக்கும் போது மூன்றாவதாக ஒரு உலங்கு வாஞூர்தி அந்த வாகனத்தை கலைத்து தாக்குதல் நடாத்தத் தொடங்கியது. தோப்பு சந்தியை வாகனம் அண்மித்ததும் உலங்கு வானுர்தி ஏவிய ஒரு குண்டொன்று வாகனத்தின் அருகில் வீழ்ந்து வெடிக்கவும் நிலை தடுமாறிய வாகனம் அங்கிருந்த சிறிய மதகில் மோதி நின்றது.

வாகனத்தினுள் இருந்த கோணேசிற்கும் இன்னொரு போராளிக்கும் வாகன கண்ணாடிகள் உடைந்ததில் காயங்கள் ஏற்படவே வாகனத்தை மீண்டும் இயக்கிய போராளிகள் அச்சுவேலி சந்தியில் அமைந்திருந்த ஒரு தனியார் வைத்திய சாலையில் கோணேசையும் மற்ற போராளியையும் இறக்கிவிட்டு வல்லை சந்தியை அடைந்து அங்கு உலங்கு வானூர்திகள் மீது தாக்குதலை தொடுக்கவும் சில நிமிட நேர சண்டையின் பின்னர் உலங்கு வானூர்தியும் கடல் விமானமும் பலாலி தளத்தினுள் சென்று மறைய அந்த சண்டை முடிவுக்கு வருகிறது.

## நிழலாடும் நினைவுகள்

எழுதியவர்: சிறி

வைத்தியசாலையில் கோணேஸ் காயமடைந்து அனுமதிக்கப்பட்ட செய்தி கேள்விப்பட்டதும் 'அவள்' அழுதபடி பதறியடித்து கொண்டு ஒடோடி வந்தாள் "என்ன நடந்தது பெரிய காயமா ஆளுக்கு ஒண்டும் இல்லையா" என்று அங்கு நின்ற தாதியை கேள்விகளால் துளைத்தவளை, "ஒண்டும் இல்லை சின்ன காயங்கள்தான் வான் அடிபட்டு கண்ணாடி உடைஞ்சதாலை கன்னத்திலையும் நெஞ்சிலையும் கண்ணாடியள் குத்தி போட்டுது காலும் அடிபட்டிருக்கு அவ்வளவுதான் இப்ப டொக்ரர் உள்ளை பாத்துக் கொண்டு நிக்கிறார் அவசரப்படாதை" என்று 'அவளி'ற்கு ஆறுதல் சொன்ன அந்த தாதியின் தோள்களில் சாய்ந்தபடி குழந்தையைப் போல விம்மியழ தொடங்கி விட்டாள்.

'அவள்' யார்? அவள் ஏன் அழுகிறாள்? 'அவளி'ற்கும் கோணேசிற்கும் என்ன சம்பந்தம்?

கோணேசின் கிராமமான அச்சுவேலிதான் அவளின் சொந்தக் கிராமமும். எனவே கோணேசை அவளிற்கு பல வருடங்களாக படிக்கும் காலங்களில் இருந்தே தெரியும் அந்த வைத்தியசாலையில் அவளும் ஒரு தாதியாக வேலை செய்கிறாள். அவள் கோணேசை பலவருடங்களாக காதலிக்கிறாள். கோணேஸ் புலிகள் இயக்கத்தில் இணைந்து பயிற்சிகள் முடித்து விட்டு வேறு இடங்களில் அவனது பணிகளை முடித்துவிட்டு அவனது சொந்த கிராமத்திற்கு திரும்பி வந்தபோதுதான் அவள் கோணேசிடம் தனது காதலை தெரிவித்திருந்தாள்.

கோணேஸ் தனது நிலையை விளக்கி அவளது காதலை மறுத்து அவளிடம் பேசுவதையே நிறுத்திவிட்டான். ஆனாலும் அவள் விடுவதாய் இல்லை. அவனைச் சுத்திச் சுத்தியே வந்தாள். இதுதான் இவளிற்கும் கோணேசிற்கும் உள்ள தொடர்பு. கோணேஸ் அந்த வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதில் இருந்து வைத்தியரிடம் விசேட அனுமதி பெற்று தனது பொறுப்பின் கீழ் இரவு பகலாய் கோணேசை கவனித்து வந்தாள்.

மறுநாள் கோணேசை பார்க்க ஒரு போராளி சென்ற பொழுது அவள் கோணேசின் காயங்களை சுத்தம் செய்து மருந்து கட்டிக் கொண்டிருந்தாள். சென்ற போராளி கோணேசை நலம் விசாரித்துவிட்டு அவனிற்கு தேவையானவற்றை விசாரித்து கொண்டே அருகிலிருந்த மேசையை பார்த்தான். ஒரு சாப்பாட்டுப் பெட்டி இருந்ததை கவனித்தவன் கோணேசை பார்த்து "அட நான் சாப்பாடு வாங்கி தரத்தான் வந்தனான் பிறகென்ன உனக்கு யாரோ கொண்டந்து தந்திட்டினம்" என்று சொல்லவும். அவள் கோபமாக "யாரோ இல்லை நான் தான் கொண்டு வந்தனான் ஆனால் உங்கடை சினேகிதனுக்கு பசி இல்லையாம் நான்குடுத்தா சாப்பிட மாட்டாராம்" என்று சொன்னாள்.

அந்தப் போராளி "ஓ பசி இல்லையாமே சரி என்ன சாப்பாடு" என்றவாறு சாப்பாட்டுப் பெட்டியை திறந்து பாத்தவன். "ம்.......புட்டும் முட்டை கத்தரிக்காய் எல்லாம் பொரிச்சு போட்டிருக்கு வாசம் அந்தமாதிரியிருக்கு சரி உனக்கு வேண்டாம் எண்டா ஏன் வீணா கொட்டுவான் நானே சாப்பிடறன்" என்றவாறு அந்தப்போராளி அதைச் சாப்பிடத் தொடங்கவும் மருந்து கட்டி முடிந்ததும் அவள் கோபமாக "கவனம் சாப்பாட்டு பெட்டியையும் சேத்து விழுங்கிடாமல் அதை கழுவித் தந்திட்டு போங்கோ" என்றவாறு அந்த அறையை விட்டு வெளியேறிவிட்டாள்.

## 'அவள்' யார்? அவள் ஏன் அழுகிறாள்? 'அவளி'ற்கும் கோணேசிற்கும் என்ன சம்பந்தம்?

அவள் போனதும் கட்டிலில் இருந்த போராளியை எட்டி உதைந்த கோணேஸ் "நான் பசி கொதியிலை இருக்கிறன் நீ ரசிச்சு சாப்பிடுறியா? கெதியா போய் சாப்பாடு கட்டிக் கொண்டுவா" என்று சொல்லவும் சிரித்தவாறே "உனக்கு குடுத்து வைச்சது அவ்வளவும் தான் சரி நான் போய் சாப்பாடு கட்டிக் கொண்டு வாறன்" என்றவாறே அந்தப் போராளி வெளியே சென்று விட்டான்

சாப்பாடு எடுத்து கொண்டு அவன் திரும்பி வருகையில் வழிமறித்த அவள் "என்ன சாப்பாடு கட்டிக் கொண்டு போறீங்கள் போலை நாங்கள் ஆசையா செய்து குடுத்தா அவருக்குப் பிடிக்காது கடையிலை சாப்பிடட்டும் அப்ப தான் கொழுப்பு குறையும்" என்றபடி கையில் வைத்திருந்த ஒரு பையை அவனிடம் கொடுத்து. "அண்டைக்கு அவர் காயப்படேக்கை அவர் போட்டிருந்த சேட்டு கிழிஞ்சு போச்சுது ஒரே ரத்தமும் அதை எறிஞ்சாச்சு அதாலை அவர் நெடுக விரும்பி போடுற சிவப்பிலை கட்டம் போட்ட சேட் ஒண்டு வாங்கினனான் நான் குடுத்தா வாங்க மாட்டார் அதாலை நீங்களே இதை அவரிட்டை குடுத்து விடுங்கோ" என்று அவனிடம் நீட்டினாள்.

சிறிது யோசித்த அந்த போராளி "சரி தாங்கோ குடுக்கிறன்" என்றவாறு வாங்கி கொண்டு போனவன். கோணேசிடம் சாப்பாட்டை கொடுத்துவிட்டு "டேய் இந்தா உனக்கொரு சேட்டும் வாங்கினனான் போட்டுப் பார்" என்று அந்த சேட்டை நீட்டினான்.அவனை நிமிர்ந்து பார்த்த கோணேஸ் "நீ எனக்கு இப்ப சேட்டு வாங்கினனி இதை என்னை நம்பச் சொல்லுறாய். எனக்குத் தெரியும் யார் வாங்கித் தந்திருப்பினம் எண்டு பேசாமல் அவையிட்டையே அதை கொண்டு போய் குடுத்திட்டு காம்பிலை என்ரை உடுப்பு பையிலை ஒரு சேட்டும் சாரமும் எடுத்துக் கொண்டுவா" என்று அந்தப் போராளியை அனுப்பி வைத்தான்.

அந்த போராளியும் திரும்ப அவளிடமே அந்த சேட்டை கொடுத்துவிட்டு சென்றுவிட்டான்.

நான்கு நாட்கள் கழித்து 20.05.87 அன்று வழமை போல விடிந்த காலை 7மணியளவில் இலக்கம்3 என்று அடைமொழியில் அழைக்கப்படும் ஒட்டகப்புலம் புலிகளின் முகாமின் நடைபேசியில் (வோக்கி ரோக்கி) பலாலி தொண்டைமானாறு வீதியில் வளலாய் என்கிற கிராமத்தின் காவல் கடைமையில் இருந்த ஒரு போராளியின் அழைப்பு

'நம்பர்3..... நம்பர் 3... குட்டி......... ஓவர்......'

குட்டி..குட்டி..நம்பர்3..சொல்லுங்கோ ஓவர்.'

'தொண்டைமானாறிலை இருந்து வந்த ஆமி குறூப் ஒண்டு ஒரு அம்பது பேரளவிலை றோட்டை விட்டு கீழை இறங்கிது என்ன செய்ய ஓவர்......'.

'வடிவா பாருங்கோ திரும்பி றோட்டிலை ஏறி பலாலி பக்கம் போனால் பேசாமல் விடுங்கோ கூடுதலா உள்ளை இறங்கினா உதவிக்கு மற்ற சென்றிலை உள்ளவையையும் எடுத்து அடியுங்கோ நாங்கள் உடனை வாறம் உடனைக் குடைனை தொடர்பிலை இருங்கோ ஓவர்..... '

என்று வோக்கியில் முகாமிலிருந்த போராளி கதைத்துக் கொண்டே மற்றைய போராளிகளிற்கு அறிவித்தல் கொடுத்ததும் சில வினாடிகளிலேயே அனைத்துப் போராளிகளும் ஆயுதங்களுடன் ஒரு யுத்தத்திற்கு தயாராய் வாகனங்களில் பாய்ந்து ஏறவும் வாகனங்கள் வளலாய் பகுதிக்கு செல்வதற்காக அச்சுவேலி சந்தியை நோக்கி விரைந்தன.

அவர்கள் புறப்பட்டதுமே வளலாய் பக்கமிருந்து துப்பாக்கி சூட்டு சத்தங்கள் கேட்டன. இராணுவம் குடியிருப்பு பகுதிகள் நோக்கி முன்னேற தொடங்கியதால் அங்கு காவல் கடமையில் நின்ற போராளிகள் தாக்குதலை தொடங்கி விட்டிருந்தனர்.

போராளிகளின் வாகனங்கள் அச்சுவேலி சந்தியை அண்மித்து கொண்டிருக்கவும் எதிரே வந்த ஒருவரின் சைக்கிளில் கோணேஸ் தனது முகாம் நோக்கி வந்துகொண்டிருந்தான். கோணேசைக் கண்ட போராளிகள் வாகனத்தை நிறுத்தவும் ஒரு போராளி கோணேசை பார்த்து எங்கை போறாய் உன்னை யார் ஆஸ்பத்திரியை விட்டு வர சொன்னது என்று கடிந்து கொள்ளவும். அவன் போராளிகளிடம் துப்பாக்கி சூட்டு சத்தம் கேட்டது அதுதான் தான் வெளிக்கிட்டு வந்தனான் என்றவன் விபரம் அறிந்து கொண்டதும் தானும் வருவதாக அடம் பிடித்து வாகனத்தில் ஏறிக் கொண்டான்.

வாகனங்கள் வளலாய் கிராமத்தில் நுழைந்து கொண்டிருக்கும் போதே இராணுவம் உள் நுழைந்து விட்டதை உணர்ந்த மக்கள்அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர்.பொது மக்களை பாதுகாப்பாக அச்சு வேலி சந்தியை தாண்டி போகும்படியும் தாங்கள் அறிவிக்கும் வரை யாரும் திரும்ப வரவேண்டாம் என அறிவுறுத்தியபடி போராளிகள் மறைவாக தங்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு வளலாய் தோட்ட வெளிகளை நோக்கி முன்னேறுகின்றனர்.

(தொடர்ச்சி 34ம் பக்கத்தில்)

**Are you looking for a carer in immigration**

**Thamil Community Law Centres have the following vacancies**

- ✓ Newly qualified solicitors
- ✓ Trainee solicitors
- ✓ Case workers
- ✓ English/ Thamil translators
- ✓ Receptionist / Office Administrator.

*Applicants must be fluent in Thamil*

Please contact for further details on **020 8348 2218**
or email your CV to **tonysath@hotmail.com**
or
Send your CV to the following address :-

Thamil Community Law Centres Limited
Miller House,
236 Archway Road,
London N6 5AX

# கப்ரன் கோணேஸ்...

(33ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் ஒரு பொறிக்குள் அகப்பட்டு விட்டோம் என்று உணர்ந்த இராணுவத்தினர் பலாலியில் இருந்தும் தொண்டை மானாற்றில் இருந்தும் மேலதிக உதவிகள் கிடைக்கும் வரை தோட்டங்களில் புகுந்து நன்றாக உருமறைப்பு செய்து கொண்டு பதுங்கி விட்டிருந்தனர். அங்கு வந்த போராளிகளிற்கு இராணுவம் எங்கு மறைந்திருக்கின்றது என்று கண்டு பிடிப்பது சிரமமாக இருந்தது.

அந்த இடம் ஒரு சிக்கலான பகுதி காரணம் அனைத்து வளங்களையும் கொண்ட பலாலித் தளம் ஒருபக்கமாகவும் தொண்டைமானாறு முகாமை மறுபக்கமாகவும் கடற்கரையையும் கொண்ட ஒரு பகுதி. எனவே இராணுவத்திற்கு வேண்டிய அனைத்து உதவிகளும் சுலபமாக கிடைக்கும் எனவே குறைந்தளவு நேரத்தில் எதிரிக்கு கூடுதலான இழப்பை ஏற்படுத்தி அந்த இடத்தை விட்டு அகற்றாவிட்டால் நேரம் செல்ல செல்ல கள நிலை பாதகமாக அமையும்

எனவே போராளிகள் விரைந்து தோட்டங்களினுடாக பதுங்கியவாறு முன்னேறிக் கொண்டிருக்கவும் ஒரு இராணுவத்தினனின் துப்பாக்கி சட சடத்தது துப்பாக்கிக் குண்டொன்று ஒரு போராளியின் நெற்றியை உரசிச் செல்ல சிறிய காயத்துடன் அந்த போராளி அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு சண்டை தொடங்கியது.

நேரம் செல்லச் செல்ல சண்டை உக்கிரமடைந்தது நேரம் மதியத்தை தாண்டியும் இர்ராணுவத்தினரால் தங்கள் இரண்டு பெரிய இராணுவ முகாம்களிற்கு சில கிலோமீற்றர்கள் தொலைவிலேயே சிக்குப்பட்டுள்ள தங்கள் சக இராணுவத்தை மீட்க முடியாத நிலையில் தொண்டைமானாற்றில் இருந்தும் மேலதிகமா இருநூறு பேரளவில் அச்சுவேலி சந்தியை நோக்கி முன்னேற தொடங்கினர்.

இதேவேளை உலங்கு வானுர்திகள் மற்றும் எறிகணைகள் அச்சுவேலி பிரதான வீதிகளை நோக்கி தாக்குதலை தொடுத்து போராளிகளிற்கு மேலதிக வழங்கல்கள் உதவிகள் வருவதை தடைசெய்து கொண்டிருந்தன.

அதேநேரம் போராளிகளிடம் இருந்த ஒரேயொரு விமான எதிர்ப்பு துப்பாக்கியான 50 கலிபரும் விமானத் தாக்குதலிற்கு உள்ளாகி அதனை இயக்கிய போராளிகளும் காயங்களிற்குள்ளாகி யுத்தகளத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவும் தொண்டைமானாற்றிலிருந்து மேலதிக இராணுவத்தினரின் முன்னேற்றம் என்பன இராணுவத்தை முற்கைக்குள் வைத்திருந்த போராளிகள் முற்றுகைக்குள் உள்ளாகும் நிலை. அதே நேரம் இராணுவம் இந்த சண்டையை திசை திருப்பும் முயற்சியாக பலாலியிலிருந்து தெற்கு பக்கமாக கட்டுவன் மற்றும் குப்பிளான் பக்கமாகவும் ஒரு முன்னேற்றத்தை ஆரம்பிக்க அந்த பகுதிகளில் போராளிகளின் எதிர் தாக்குதல்களை அன்றைய யாழ் மாவட்ட தளபதி லெப்.கேணல். ராதா வழிநடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது தான் வளலாய் தோட்டவெளியில் நடந்தகொண்டிருந்த சண்டையில் கோணேசின் துப்பாக்கியும் எதிரிகளைத் தேடித் தேடி இயங்கி கொண்டிருந்த வேளை தான் கவனித்தான் ஒரு பூவரச மரத்திற்கு அருகு வரம்பில் நிலையெடுத்து இருந்த இரு இராணுவத்தினரிடமிருந்து ஒரு பதில் தாக்குதலும் வரவில்லையென்பதை. அவனிற்கு புரிந்து விட்டது.

அருகிலிருந்த போராளியை பார்த்து சொன்னான் "டேய் அங்கை பார் பூவரசிற்கு பக்கத்திலை படுத்திருக்கிற ஆமிக்காரரிட்டை ரவுண்ஸ் இல்லை போலை திருப்பி அடிக்காமல் படுத்திருக்கிறாங்கள் அவங்களை உயிரோடை பிடிப்பம்" என்றவன் மற்றைய இரு போராளிகளிடம் "நீங்கள் அவங்களை குறி வைச்சபடி இருங்கோ நான் எழும்பிபோய் பிடிச்சுகொண்டு வாறன்" என்றவன் மறைவில் இருந்து எழுந்து அந்த இராணுவத்தினரை நோக்கி சரண்டர் என்று கத்தியவாறு கைகளை ஆட்டினான்.

சில வினாடிகளின் பின் ஒரு இராணுவத்தினன் மெதுவாக ஒரு கையை உயர்த்தி சரணடைவதற்கான அறிகுறியை காட்டினான். கோணேஸ் தன்னுடைய கைகளை மீண்டும் அவர்களை நோக்கி ஆட்டிவிட்டு மெதுவாக அவர்களை நோக்கிப் பதுங்கிய படி முன்னேறுகிறான். முன்னேறி அவர்களை அண்மித்ததும் அவர்களை வெளியே வரச் சொல்லி கத்திக் கைகளைக் காட்டினான்.அதை வேறு பக்கங்களில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் கவனித்து விட கோணேசை நோக்கி சரமாரியாக சுட்டார்கள்

கோணேசும் வேகமாக பாய்ந்து சென்று அந்த இராணுவத்தினர் நிலையெடுத்து மறைந்திருந்த பகுதிக்குள் பாய்ந்து பதுங்கி கொள்ளவும் கீழேயிருந்த இராணுவத்தினரிடம் இருந்து தகவல் அனுப்பப் பட்டிருக்க வேண்டும்.

அந்த பூவரசு மரம் இருந்த இடத்தை நோக்கி வேகமாக இரண்டு உலங்கு வானுர்திகள் நெருங்கி இரண்டும் நான்கு செல்களை ஏவின அவை வெடித்து அந்த இடம் ஒரே புகையும் தூசியுமாய் எழுந்து அடங்கிப் போனது அந்த இடத்திலிருந்து கோணேசின் சத்தமோ அல்லது மற்றைய இரு இராணுவத்தினரின் சத்தமோ வரவில்லை. மூவருமே இறந்து போய்விட்டனர்.

இதே நேரம் பலாலியிலிருந்து முன்னேறிய இராணுவத்தினரும் அவ்விடத்தை நெருங்க அங்கு கள நிலைமையும் போராளிகளிற்கு உதவிகள் கிடைக்காமல் இராணுவத்திற்கு சாதகமாக மாறிக்கொண்டிருந்தது எனவே அவசரமாக போராளிகள் தங்கள் குழுவை மறுசீரமைத்து இருக்கின்ற குறைந்தளவு வசதிகளை பகிர்ந்து மீண்டும் ஒரு மூர்க்கமான தாக்குதலை தொடுத்து கோணேசின் உடலை எப்படியாவது எடுத்துகொண்டு சண்டையை அத்துடன் முடிவுக்கு கொண்டுவர எண்ணினர்.

அதன்படி மீண்டும் மூர்கமாக நானூறிற்கும் மேற்பட்ட இராணுவத்துடன் ஆகாய மற்றும் எறிகணை தாக்குதல்களிற்கு முகம் கொடுத்தபடி அறுபதிற்கும் குறைவான போராளிகளே அந்த சண்டையில் ஈடுபட்டிருந்தனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் கோணேசின் உடலை மீட்ட போராளிகள் சண்டையை நிறுத்தி பத்தைமேனி இடைக்காட்டு பகுதிக்கு பின்நகர்ந்து தங்கள் பாதுகாப்பு அரணமைக்க, தங்கள் இறந்த மற்றும் காயப்பட்ட இராணுத்தினரை எடுத்து கொண்டு தங்கள் முகாம்களிற்கு திரும்பினார்கள்.

அன்றைய சண்டையில் பன்னிரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். அதே நேரம் மறுபக்கம் குப்பிளான் சமாதி கோயிலடியில் லெப். கேணல் ராதாவும் இறந்து போனதாக வந்த செய்தியுடன் தனது விடுதலைக்காய் போராடிய இரண்டு போராளிகளை இழந்து விட்ட சோகத்தில் தமிழீழத் தாயும் அன்றைய பொழுதை இருள் போர்வையை போர்த்திக் கொண்டு உறங்கிப் போனாள்.

மறுநாள் அச்சுவேலியிலிருந்த கோணேசின் வீட்டில் அவனது இறுதிச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தது. அவளும் செய்தி கேட்டு கையில் ஒரு பையுடன் அழுதபடி ஓடிவந்தாள் அங்கிருந்த ஒரு போராளியிடம் "அய்யோ அண்ணை கடைசியாவாவது இந்த சேட்டை அவருக்கு போட்டு விடுங்கோ" என்று சொல்லி அவள் வாங்கி வைத்திருந்த அந்த சிவப்பு செக் சேட்டை கொடுத்து விட்டு அங்கேயே அழுதபடி நின்றிருந்தாள்.

கோணேசிற்கு அந்த சேட் அணிவிக்கப்பட்டு அதுவரை விடுதலை தீயாய் ஒளிர்ந்தவன் வல்லை சந்தியிலிருந்த மயானத்தில் தீயுடன் தீயாய் போனான். மறுநாள் அந்த ஒட்டகபுல புலிகளின் முகாமில் கோணேசின் உடுப்பு பையை எடுத்து பார்த்த ஒரு போராளி அதில் கோணேசின் நாட்குறிப்பை எடுத்து புரட்டிப் பார்த்தான். அதில் கோணேஸ் அவளை நினைத்து எழுதிய கவிதைகள் இருந்தன. அவனிற்குள்ளும் காதல் இருந்திருக்கிறது ஆனால் அவன் அதைக் காட்டிக் கொள்ளாமலேயே கரைந்து போய் விட்டான். எம் தேசத்தின் விடுதலைக்காய் விதையாகிப் போன பல்லாயிரம் மாவீரர்களினுள் கோணேசும் வளலாயின் சிவந்த செம் மண்ணினை மேலும் தன் குருதியால் சிவப்பாக்கிப் போனான். அவனிற்கும் எமது வணக்கங்கள்.


## WESTERN INTERNATIONAL COLLEGE

WHEN GOD CLOSES ONE DOOR HE OPENS ANOTHER... — WESTERN INTERNATIONAL COLLEGE — dei gratia — in deo et veritas speramus — deus vobiscum

*222 - 224 [1st/2nd Floor] Northfield Avenue, Ealing, London W13 9SJ*

*Contact : Senthil Phone: 44 208 542 1282 Shanker : 44 208 840 0160*
*M : 07798 850 171*

*Email : s_senthilingam@hotmail.com*
*: shanker@easynet.co.uk*



*www.western-intl-college.co.uk*

**BSc Management**
EDEXCEL BTEC Level 5 DIPLOMA IN MANAGEMENT SCIENCE (DMS)/HND
WIC Certificate in Business Administration

**Msc in IT/IS**
**MA Hospitality**
**MA Social Care**

**CIMA** (Charted Institute of Management Accountants)

**BSc Infrrmation Systems & Management**
EDEXEL BTEC HNC/HND in Computing (ICT)
Incorporates A+,network+,Linux,CCNA,MCSA/MCSE,Solaris,Oracle 10g DBA/OCA,SUN JAVA

**EDEXEL BTEC HNC/HND** in Hospitality Management
CORNAL Hotel School - Certificate in Food& Beverage Management, Food Products & Culinary Arts

**WIC Certificate in PC Hardware & Networking incorporating A+, Network+,Linux+,CCNA,MCSA**
MOC;ECDL
English Language for Foregin Students (IELTS)

Food Safety and Health & Safety training given in-house or at the college to meet the food safety management control procedures based on the principal of HACCP. We train your staff and help implement the required food safety procedure.

We train in TAMIL OR ENGLISH Also implement Health and Safety Policy.

Home Office — BUILDING A SAFE, JUST AND TOLERANT SOCIETY
Authorized PROMETRIC TESTING CENTER — ORACLE WORKFORCE DEVELOPMENT PROGRAM
ECDL — Accredited Test Centre
PEARSON VUE AUTHORISED TEST CENTRE — SCHEDULE EXAMS
CompTIA E2C Academy
Microsoft IT Academy — find a Microsoft IT Academy
CIMA — Microsoft Office Specialist

# மில்ரன் கீன்ஸில் நடந்த அமைதிப் பேரணி

























சிறிலங்கா அரசாங்கம் நடாத்தும் மனித அவலத்திலிருந்து தமிழீழ மக்களைப் பாதுகாக்குமாறு கோரி பிரித்தானியாவில் உள்ள மில்ரன் கீன்ஸ் நலன்புரி அமைப்பு முன்னெடுத்த அமைதிப் பேரணி கடந்த 25.10.08 அன்று பகல் 12.30 தொடங்கி நடைபெற்றது.

இதில் ொருமளவிலான மக்கள் கலந்து கொண்டு சிங்கள இனவாத அரசு புரியும் கொடுமைகளை வெளிக்கொணர்ந்தனர்.



# சர்வதேச சமூகம் விரைந்து செயற்பட வேண்டும் ஜேர்மனி கருத்தரங்கில் வேண்டுகோள்.












இலங்கைத்தீவில் நடைபெறும் மனிதவுரிமை மீறல்களும், மனித அவலமும் சர்வதேச ஊடகங்களினால் வெளிப்படுத்தப்டாத ஒரு விடயமாகவிருக்கிறது. அதனால் இலங்கைத்தீவை உல்லாசப்பயணிகளுக்கு ஏற்ற ஒரு இடமாகக் கருதிவரும் மேலைதேச நாடுகளில் வாழும் மக்களுக்கு அங்கு நடைபெறும் மனித அவலம் பற்றி எதுவும் தெரியாமலிருக்கிறது. மனிதவுரிமை மீறல்களை ஐ.நா. அமைப்புக்கள் பட்டியலிட்டு அறிக்களை வெளியிட்டு வருகின்ற போதிலும், இங்குள்ள அரசுகள் இந்த அவலத்தையிட்டு அதிகம் கரிசனை கொள்வதாகவோ அல்லது அதனை முடிவுக்கு கொண்டுவரும்பொருட்டு ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுப்பதாவோ தெரியவில்லை. மேற்படி கருத்துக்கள் ஒக்ரோபர் 29ம் திகதி ஜேர்மனி Stuttgart நகரில் உள்ள Hohenheim பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டவை.


ஜேர்மனியின் ஆளும் கூட்டணிக்கட்சிகளில் ஒன்றான சமூக சனநாயகக் கட்சியின் (SPD) மாணவர் அமைப்பினால் (JUSS) ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் Peter Schallk தமிழர் மனிதவுரிமைகள் மையத்தினைச் சேர்ந்த திரு. ச.வி. கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு இலங்கைத்தீவில் குறிப்பாக தமிழீழப் பகுதிகளில் சிறிலங்கா அரசு புரிந்து வரும் மனிதவுரிமை மீறல்கள், போரின் கொடுரத்தினால் தமிழ் மக்கள் படும் துயரம் என்பவற்றை விளக்கினர். அரசியல்வாதிகள், சமூக சனநாயகக்கட்சி செயற்பாட்டாளர்கள் என் உள்ளூர் வாசிகள் பெருமளவில் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் பேச்சாளர்கள் ஜேர்மனிய மொழியில் உரையாற்றினர். திரு. கிருபாகரனின் ஆங்கில உரையை செல்வி. வலன்ரீனா ஜேர்மனிய மொழியில் மொழிபெயர்ப்பு செய்தார். பார்வையாளர்களின் கேள்விகளுக்கு திரு. கிருபாகரன், பேராசிரியர் Peter Schallk பதிலளித்து அங்குள்ள நிலமையை விளக்கினர். முனைவர் டக்மார் ஹெல்மன் இராஜநாயகம் மட்டுநிறுத்தினராக பங்கேற்றுக் கொண்டதுடன் தொகுப்புரையும் வழங்கினார்.


மேற்படி கருத்தரங்கு திருப்தியாக நடைபெற்றது எனத் தெரிவித்த பார்வையாளர் ஒருவர் இது போன்ற கருத்தரங்குகள் ஜேர்மனியின் மற்றய பிராந்தியங்களில் நடாத்தபட வேண்டும் என கருத்து வெளியிட்டார்.

# வெண்புறா நடாத்திய நர்த்தன மாலை 2008













**WORLD FAMOUS ASTROLOGER & PALM READER FROM GENERATIONS**

Please do not hesitate to contact:

**PANDIT LAXMINARAYAN**

**IF YOU ARE WORLDLY UNHAPPY FOR THE FOLLOWING REASONS:**

Loss of Business, Unsuccessful Family life, Lacking Love & Peace, Your Children misguided by your enemies & relatives, Suffering from any deceases and if you are under the evil effects of Jadu, Tona, Bhoot, Pret.

There is no human difficulty that can't solve with quick, fast & efficient result to all your problems no matter what your problems are. He can solve them for you. Regarding uniting family together, bring back loved ones, court cases, Divorce, job, Business, Marriage, exams,He will help you to succeed in life. He can also protect you from black magic and give you religious guidances. Pandithji can predict accurately about past present, future by reading face palm & name, date of birth.


Please contact for HOROSCOPE print-outs.

Languages spoken: Hindi, English & tamil

19 Ansell Road
Upper Tooting Road
London SW17 7LS (Behind TESCO)
Tel: 020 8767 9742
Mob: 07946 114 835







# National Legal Services



## Wills

## Estate Planning

- Lifetime tax planning
- Life time tax planning through the use of trusts
- Making regular gifts out of income
- Utilising annual allowances
- Shared accomadation

## Client Welfare and Lasting Powers of Attorney

- Enduring / Lasting Powers of Attorney
- Court of Protection receivership
- Statutory wills

## Probate

We will take time to fully understand your particular circumstances and advise with sympathy and understanding.

Best service with your best interest in heart.

**So why not ask us for a no obligation consultation in the comfort of your own home?**

**நாம் கீழே குறிப்பிட்டுள்ள பிரச்னைகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்குகிறோம்.**

உங்கள் முதுமையின் நீண்டகால கவனிப்பிற்காக உள்ளூராட்சி உங்களது வீட்டினை அபகரித்தல்

எதிர்பாராத விதமாக மனநோய் பிரச்சனை ஏற்பட்டால் ஒரு நிலையான வருவாயை உண்டாகுதல்

உங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய வருமானத்தைத் தவிர்த்தல்

உயில் இல்லாது மரணம் சம்பவிப்பதால் உண்டாகும் மன உளைவுகளையும், பணப் பிரச்சனைகளையும் தவிர்த்தல்.

அங்கவீனமான, மனநோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பணப்பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றல்

உங்களது வாரிசுகளுக்கு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்படும் வரிகளைக் குறைத்தல்

Call Us:

**020 8952 2410**

**National Legal Services**

150 Cheyneys Avenue
Edgware, Middlesex
HA8 6SE

t: **020 8952 2410**
m: **07931 794 809**
e: info@national-wills.co.uk
w: www.national-wills.co.uk

## புலம்பெயர் தேசத்தில் நம்பிக்கை தரும் இளைய தலைமுறையினர். (UKTSU)

புலம்பெயர் தேசத்தில் வாழும் எமது இளைய சமுதாயம் பற்றி ஒரு அச்சத்துடனான பார்வையே நம்மிடமுள்ளது. அவர்கள் இந்த அன்னிய சூழலில் எமது பண்பாட்டு விழுமியங்களை மீறி சமுதாயக் கட்டமைப்பிலிருந்து விலகி தற்குறியாக தனித்துவிடுவார்களோ என்பதுதான் அந்த அச்சம். அதனை நியாயப்படுத்தும் வகையில் பல்வேறு விடயங்கள் நடந்தேறி வருகின்றன. ஆனால் அப்படியொன்றும் குடி முழுகவில்லை, எங்களைப் பாருங்கள் எனத் துணிவோடு கூறும் ஒரு இளையவரின் அமைப்புத்தான் பிரித்தானிய தமிழ் மாணவர் ஒன்றியம் (UKTSU).

'கற்கக் கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற வள்ளுவனின் வாசகத்தை வரைவிலக்கணமாகக் கொண்டு கற்கும் காலத்திலேயே கருத்தாழம் மிக்க கண்ணியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். என்ற கடமையுணர்வுடன் தாயக உறவுகளுக்கு ஊக்கமளித்து அவர்களுக்கு கல்வி மற்றும் ஒளிமயமான எதிர் காலத்தை ஏற்படுத்தி அவர்களையும் தம்மைப்போல கல்வி மற்றும் தன்னம்பிக்கை உடையவர்களாக வளர்த்தெடுப்பதையே இலட்சியமாக கொண்டு அவர்கள் செயற்பட்டுவருகிறார்கள்.

### சாதித்தவை

பிரித்தானியாவில் உள்ள தமிழ் மாணவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவந்திருக்கும் இந்த ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட கலாநிதியம் என்வகையில் மட்டுமல்லாது மக்களால் அங்கிகரிக்கப்பட்ட மாணவ சமூகம் என்றவகையிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களின் திறமைகளை மெருகூட்டும் அறிவுசார் போட்டிநிகழ்ச்சிகளையும், தமிழ்ச்சுவை ததும்பும் தரமான நிகழ்ச்சிகளையும் எமது பாரம்பரிய பண்பாட்டை குழம்பவிடாது தாங்கி நிற்கும் மேடை நிகழ்ச்சிகளையும், நடத்துவதோடுவிளையாட்டுப் பாசறைகளையும், ஒழுங்கு செய்துசமூகத்திற்குப் பெரும்பாலான பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

இந்த வகையில் சிறுவர்களின் மதிநுட்பத்திற்கு விருந்தாக அமைந்த 'பிரித்தானியாவின் பிறேனியஸ் பிள்ளை' (Britain's Brainiest Pillai) என்ற போட்டித் தொடர் நிகழ்ச்சி சென்ற வருடத்தைப் போல இந்தவருடமும் மாணவ மாணவிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்தது மட்டுமன்றி பெற்றோர்களின் பலத்த வரவேற்பையும் பெற்ற சிறப்பாக அரங்கேற்றியது.

பல பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியங்களுடன் சேர்ந்து அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க அவர்களின் மேடைநிகழ்ச்சிகளுக்கு வழிநடத்தி இதுவரை 'கலக்கல்' 'பீனிக்ஸ்' கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 'வசந்தம்' சவுத்பாங் மற்றும் மெற்றோபொலிட்டன் பல்கலைக்கழகத்தின் 'கலசம்' 'பல்கலைக்கழக சவால்' போட்டி நிகழ்ச்சி உட்பட பல நிகழ்வுகளை வெற்றிகரமாக வழிநடத்தினர். இந்த நிகழ்வுகளின் போது சேகரிக்கப்பட்ட நிதி ஈழத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தின் ஒரு கட்டமாக வழங்கப்பட்டது.

### விளையாட்டுப் பாசறை:-

கல்வி, கலைநிகழ்ச்சிகளுடன் மட்டும் மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொண்டுவந்து அவர்களை பரிபூரணமாக்கும் ஆரம்பிக்கப்பட்ட கால்ப்பந்து மற்றும் துடுப்பாட்டப் பாசறைகள் எமது ஒன்றியத்தின் வேறுபட்ட பரிணாமங்களைத் தொட்டிருக்கிறது. இப்பாசறைகளில் ஒன்றியத்தின் விளையாட்டு நிபுணர்களின் யுக்திகளாலும், பயிற்றுவிப்பாளர்களின் கடுமையான பயிற்சியாலும், தகுதியும் திறமையும் உடைய மாணவர்கள் பல்வேறு பிராந்தியப் போட்டிகளில் வெற்றிக் கேடயங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

### வெஸ்ரேன் தாளம்

இவர்களது அடுத்த முயற்சியாக பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் கலைத்திறனை ஒரே மேடையில் கண்டுகளிக்கும் வகையில் 'வெஸ்ரேன் தாளம்' என்ற மாபெரும் கலைநிகழ்ச்சியை நவம்பர் மாதம் 15ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு ஹரோ Leisure Centre அரங்கத்தில் அரங்கேற்றவுள்ளனர். இதன்போது இசை, நடனம், நாடகம், நகைச்சுவை, மேலைத்தேய, கீழைத்தேய கலை நிகழ்ச்சிகளுடன் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் மூலம் சேகரிக்கப்படும் நிதியானது இடம்பெயர்ந்த மக்களின் தேவையை நிவர்த்தி செய்ய வழங்கப்படவுள்ளன. எனவேஅவர்களது நிகழ்ச்சிகளில் பங்கேற்று அவர்களுக்கு உதவுங்கள் என வேண்டிக்கொள்கிறேன்.

*- பா. பரந்தாமன்*

## 2ம் லெப் மாலதி நினைவு நாள் சொல்லும் செய்தி

மேற்கு லண்டனில் மாலதியின் 21ம் ஆண்டு நினைவுநாள் பெண்கள் அமைப்பால் வெகு நேர்த்தியாக 26ம் திகதி மாலை ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. மண்ணுக்கு விதையாகப்போன

சுதுவினதும், மைவிழியினதும் தாயார்கள் விளக்கேற்றி வைக்க அக வணக்கத்துடன் ஆரம்பமான இன் நிகழ்வில் வடமேற்கு தமிழீழ இசைக் குழுவினர்களின் இனிய தமிழீழ பாடல்களுடன், கவிதை, நடனம், பேச்சு, நாட்டியநாடகம் என விறுவிறுப்பாக மண்டபம் நிறைந்த மக்களோடு நிறைவாக நடைபெற்றது.

விழாவின் ஏற்பாட்டாளர் ஒருவர் இனிவரும் நிகழ்வுகளில் அங்கு மாலதி படையணி, மாலதி கலைக்கூடம் என பெண்களுக்கென தனியான கட்டமைப்பு உள்ளது போல லண்டனிலும் பெண்களுக்கென தனியான இசைக்குழு ஒன்று உருவாக்க வேண்டும் எனவும், எல்லா பெண் தொண்டர்களும் இதில் ஆர்வமாக இணைந்து கொள்ளவேண்டும் என்றும் தனது கருத்தைத் தெரிவித்தார். முன்பு போல் அல்லாது இன்நிகழ்வில் பெரும்பாலான பெண்கள் பங்குபற்றியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

21 ஆண்டுகளுக்கு முன்பு அமைதிப்படை எனக்கூறிக்கொண்டு வந்த இந்திய அழிவுப் படையை எதிர்கொண்டு முதல் பெண்போராளியாக வீரமரணம் அடைந்தார் மாலதி. அன்று தொடக்கம் இன்று வரை எமது வரலாற்றில் நாம் விடுதலையை வென்றெடுக்கும் நிலையை நெருங்கும் போதெல்லாம் இந்திய தலையீட்டின் நெருக்கடியினாலும், இராஜ தந்திர நடவடிக்கைகளாலும் எமது விடுதலையை வெற்றெடுக்கும் காலம் பின்னடிக்கப்படுகின்றது.

இன்றும் ராடார் முதற் கொண்டு தொழில் நுட்பவியலாளர் வரை சிங்களத்திற்கு இந்திய அரசு தமிழர் மீதான திட்ட மிட்ட இனவழிப்புக்கு கைகொடுத்து வருவது கண்கூடு. இக்கால கட்டத்தில் நடக்கும் நிகழ்வுகளின் பண்டார வன்னியனின் கதையையும், மாலதியின் வரலாற்றையும் சொல்வதோடு மட்டும் நின்று விடாது காலத்திற்கேற்ற வகையில் அரசியல் விழிபுணர்வை எற்படுத்தும் வகையில் இளைய பெண் தலை முறையினர்களின் கலந்துரையாடல்கள் தற்போதைய தமிழீழ நிலைபாட்டில் பெண்களின் பங்களிப்பு, பெண்கள் மீதான வன்முறைகள், போன்றனவற்றையும் இணைத்துக்கொண்டால் நன்றாக இருக்கம்.

*- சுந்தரி*

உங்கள் நிகழ்வுகள் தொடர்பான விபரங்களையும் பிரசுரிப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்



KERALA AYURVEDIC CLINIC
ayurprastha

505 London Road, Thornton Heath

Surrey, CR7 6AR

Special Offers

Early Meadow

Book any treatment before 1 PM from Monday to Friday to qualify for a 20% discount. You must quote 'Early Meadow' when booking and checking out in order to receive this offer.

Introducing Soundharya

Special Ayurvedic Herbal Beauty Therapy for Men and Women where beauty and consciousness are one.

Booking and Appointments

020 8684 7574 / 08447780052

croydon@keralaayurvedam.co.uk

Terms and Conditions: Offers cannot combine with any other offer

# உயர்தர சேர்ட்டுகள் மலிவான விலையில் !

STYLISH SUITS,LINEN SHIRTS,SILK TIES



உள்ளம் உற்சாகம் பெறட்டும் உடல் அழகு பெறட்டும்
எமது சேர்ட்டுக்களை விரும்பி அணியுங்கள்

HERBIE FROGG est.1969
MENSWEAR. JERMYN STREET. LONDON.

VISIT US AT 21 JERMYN STREET NEAREST TUBE : PICCADILLY CIRCUS

CALL 020 7439 2512 OR GO ONLINE WWW.HERBIE-FROGG.CO.UK

உங்களுக்கு தேவையான சகல கட்டிட வேலைகள் மற்றும் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய நம்பகரமான இடம்.

## K N M Builders





Satha
36, Allendale Ave
Southhall, Middx UX1 2SL
**Tel : 0208 574 2510**
**Mob : 07957 403 219**

## Chandra Super Market & Off Licence

உங்களுக்குத்தேவையான சகலவிதமான மளிகைப்பொருட்கள், இலங்கையிலும் இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள் மற்றும் Off Licence வகைகள், மரக்கறிகள் என்பவற்றை சகாய விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



**209-211 Bromley Road**
**Catford, London SE6 2PG**
**தொடர்புகளுக்கு : 020 8333 8680**

## உலகத்தமிழர் தேசிய உடை

திரு பழ நெடுமாறன் ஐயாவின் தலைமையில் உருவான உலகத்தமிழர் அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய தமிழர் தேசிய உடை

உலகத்தமிழர் பண் இறுவட்டும்
உலகத்தமிழர் தேசிய உடையும்
* ஆண்களுக்கு £16.00
வேட்டி,மேலங்கி
சால்வை
* பெண்களுக்கு £15.00
சேலை
மேற்சட்டை

கீழ்காணும் முகவரியில்
நீங்கள்பெற்றுக்கொள்ளலாம்

**K.Arumugan,**
**182 Long lane, finchley Central,**
**London N32RA**

**Tel : 0208 3468728**

## K S Building Services Engineering Ltd

CORGI

Specialist in Industrial & commercial Inspection, testing and certification

**237 Edgware Road**
**Colindale**
**London NW9 6LU**

**Tel: 020 8205 3159**
**Mob: 077 9914 2759**
**Fax: 020 8200 8918**

UKAS QUALITY MANAGEMENT

We are currently looking for air-conditioning insulation engineers and electricians/technicians with the relevant qualification and experiences.

REGISTERED MEMBER ECA

APPROVED CONTRACTOR

# கூத்துப் பாக்கப் போன கூத்து



(முன்னைய இதழின் தொடர்ச்சி...)

கூத்து நிகழ்ந்து கொண்டிருக்கையிலேயே பார்வையாளர்களில் சிலபேர் தங்கள் வித்தைகளைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் குடித்து விட்டு அலப்பறை பண்ணிக் கொண்டிருந்தார்கள் வேட்டி சரியச் சரிய. இன்னும் சிலபேர் பபூனிடம் பத்து ரூபாய், இருபது ரூபாய் என்று காசு கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

காசு கொடுத்ததும் ஆடிக்கொண்டிருக்கும் பாத்திரம் அப்படியே நிற்க பபூன் அறிவிப்பார். "சுங்குவார்ச் சத்திரத்தை சேர்ந்த முருகையா இங்கே கர்ணனாக வேசம் போட்டிருக்கிறவருக்கு பத்துரூபாவும். துரியனாக வேசமிட்டிருக்கிறவருக்கு பத்து ரூபாவும் ஆக மொத்தம் இருபது ரூபாய் அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார்" என்று பபூன் அறிவித்ததும் பணம் கொடுத்த முருகையா அப்படியே (ெ)காலரைத் தூக்கி விட்டுக்கொண்டு எகத்தாளமாய் கூட்டத்தை ஒரு பார்வை பார்ப்பார்.

உடனே முருகையாவுக்கு போட்டியாக இன்னொரு கறுப்பையா வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு எழுந்து போய் அவரைவிட அதிகமாய்க் காசு கொடுத்து விட்டு அவரைவிட எகத்தாளமாய் பார்த்துக்கொண்டு போய் அமர்வார். பபூன் இதை ஊக்குவித்தபடி இருப்பார்.

நான் இதெல்லாம் கூத்தில் வருகின்ற விளம்பர இடைவேளை போல என்று நினைத்துக்கொண்டேன்.

அவர்கள் அப்படிக் காசு கொடுத்த போது எனக்கு வேறு ஒன்று நினைவுக்கு வந்தது.

இலங்கையின் செத்த வீடுகளில் நடக்கிற கூத்தொன்று இது. ஒரு முறை எங்களுக்கு பிசிக்ஸ் படிப்பிக்கிற சிறீ வாத்தியின்ர அப்பா செத்துப் போனார் வாத்தியார் வவுனியாவுக்குப் போனவர் உடனதிரும்பிவரமுடியாதநிலைமை அவர் எங்களுக்குப் படிப்பிக்கும் போது கரும்பலகையோடு சேர்ந்து நித்திரையடிக்கிறதையெல்லாம் மன்னிச்சு நாங்கள் வேறு வழியின்றி அந்தச் செத்த வீட்டு வேலைகளைப் பொறுப்பெடுத்து செய்யவேண்டியதாப் போச்சு.

வாத்தியார் வந்தவுடன் கொள்ளி வைக்கத் தயாராய் ஏற்பாடுகள் செய்யவேண்டும். வாத்தியார் வந்திட்டார் வகுப்புப் பெடியள் தான் பாண்டயைத் தூக்கிக் கொண்டு சுடலை வரைக்கும் போகவேண்டும். சுடலை வீட்டில இருந்து ஒரு இரண்டு கிலோ மீட்டர் வரும். கொஞ்சப் பெருசுகள் தண்ணியைப் போட்டிட்டு பறைமேளம் அடிக்கிறவைக்கு காசைக் காட்டி ஒவ்வொரு சந்தி சந்தியா நிண்டு அடி ம் அடி, இன்னும் வடிவா அடி எண்டு டான்ஸ் ஆடிக்கொண்டு நிக்கினம்.

பெடியள் தோள் நோகுது மச்சான் கெதியா கிளப்படா இவங்களை எண்டுறாங்கள்.

ஆனால் கிழடுகளோ விடுற பாட்டைக் காணம். பறை மேளம் அடிக்கிறவைக்கு காசு கொடுக்கிறது பிரச்சினையில்லை. பிரச்சினை வேற. சுப்பிரமணியம் ஐம்பது ரூபாய் குடுத்து அடியெண்டா கந்தசாமிக்கு அது கௌரவப் பிரச்சினையாகீரும். அவர் உடன நூறு எடுத்து விசுறுவார்.

இப்படி அவைக்குள்ள தங்கட 'கெத்தைக்' காட்டுறதக்கு ஆற்றையேனும் செத்தவீட்டைப் பயன்படுத்துறது. பறையடிக்கிறவர்களுக்கு என்னதான் காசெண்டாலும் இவங்கள் தங்கட பெருமையக் காட்டி முடிக்கக் கிடையில நாக்குத் தொங்கிப்போடும். ஆனாலும் இது தங்களுக்கு விடுக்கப் பட்ட சவால் எண்டு நினைச்சோ, அல்லது காசைக் காட்டி எங்களை இப்படி வருத்துறாங்களே என்ற கோபத்தையோ அவர்கள் தங்கள் பறையில் பிளந்து கட்டிக்கொண்டிருப்பார்கள்.

இப்பவும் கூத்துக் கலைஞர்களுக்கு மாறி மாறி இவர்கள் காசு கொடுத்தபோது எனக்கு அதுதான் நினைவுக்கு வந்தது.

கூத்து நடந்து கொண்டிருந்தது. நான் படமெடுத்துக்கொண்டிருந்தேன். கலைஞர்களைப் படமெடுத்து முடிந்ததும் குழந்தைகளைப் படமெடுக்கத் தொடங்கினேன். இரண்டு மூன்று கிளிக்குகள். ஒரு இரண்டு வயதுச் செல்லம் ஒன்றைப் படமெடுக்க எவ்வளோ முயன்றும் அது இடைவிடாமல் ஓடிக்கொண்டேயிருந்ததில் எடுக்க முடியவில்லை. அப்போதுதான் கவனித்தேன் கிராமத்து அழகிகள் எவரையுமே காணவில்லை.

ஒரு திருவிழாவில் வளையல்கள் வாங்கிக் கொண்டோ அல்லது யார் மீதாவது மஞ்சத் தண்ணி ஊத்திக்கொண்டோ இருப்பார்கள் என்று எதிர் பார்த்த எனக்கு இங்கு திருவிழா நடக்காததே பெரிய இடி. கூத்தின் சுவாரசியத்தில் அழகிகள் யாரும் இல்லாததைக் கவனிக்காத பெரும் வரலாற்றுத் தவறொன்றைச் செய்து விட்டோமே என்று மனம் வருந்தினேன்.

என்ன இது சிறுவர்கள் சிறுமிகள் பிறகு பழைய அழகிகள், என்று தான் இருந்தார்கள் குமாரிகள் யாரும் இந்தச் சுங்குவார்ச் சத்திரத்தில் இல்லையா? என்கிற ஆதங்கத்தை நண்பர் முத்துக் கந்தனிடம் கொட்டியபோது அவர் சொன்னார், கல்யாணமாகாத இளம் பெண்கள் இப்படியான கூத்துகள் பார்க்க அனுமதி கிடையாது. வயசுப் பெண்கள் பார்க்கிற ஒரே கூத்து 'அர்ச்சுனன் தபசு' என்கிற கூத்து மட்டும் தான். அந்தக் கூத்தின் முடிவில் தான் எலுமிச்சம் பழங்களை வெட்டி வீசுவார்கள் அந்த எலுமிச்சம் பழங்கள் யார் மீது விழுகிறதோ அவர்களுக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகும் என்பது ஐதீகம் அதனால் அர்ச்சுனன் தபசுக்கு மட்டும் பெண்கள் வருவார்கள் என்றார்.

நான் அர்ச்சுனன் தபசு எங்கேயாவது நடந்தால் எனக்குச் சொல்லுங்கள் என்று அவரிடம் சொன்னேன்.

ஆங்காங்கே தண்ணியைப் போட்டு விட்டு அலப்பறை பண்ணிக் கொண்டிருந்தவர்களின் குரல் இப்போது இன்னும் இன்னும் உயர்ந்தது. "டேய் அவளுகளை ஆடச் சொல்லுங்கடா" என்று குரலை உயர்த்திக் கத்திக் கலாட்டா பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

## போனதெல்லாம் கனவினைப்போல்

**சென்னையிலிருந்து த. அகிலன்**

எனக்கு எவளுகளை என்பது புதிராக இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து அது அவிழ்க்கப் பட்டபோது புரிந்தது எவளுகளை என்பது. கூத்தில் விளம்பர இடைவேளை மட்டுமல்ல குத்தாட்ட இடைவேளையும் உண்டு என்பதும் புரிந்தது. மஞ்சள் புடைவையில் இரண்டு மேனா மினுக்கிகள் அரங்கிற்குள் வந்தார்கள் யாரோ ஓரிருவர் விசில் அடித்தார்கள். இடுப்பையும் மார்பையும் குலுக்கி குலுக்கி ஏதோ பாட்டுப்பாடி ஆடினார்கள். அந்தப் பாடல் எனக்கு நினைவில்லை

அவர்கள் பெண்வேடமிட்ட ஆண்கள். இப்போது முதலில் கதாபாத்திரங்களிற்கு பபூனிடம் பணம் கொடுத்தவர்கள் இந்த மினுக்கிகளுக்கு மட்டும் தாங்களே அரங்கிற்குள் வந்து அவர்களின் முந்தானையில் காசைச் செருகினார்கள்.

அப்படி செருகும் ஒவ்வொரு தடைவையும் பார்வையாளர்கள் மத்தியில் இருந்து ஒரு கிளு கிளுப்பான சிரிப்பு. இந்தக் கிளுகிளுப்புகளிற்கும் அப்பால், இந்தப் பெண் வேடமிட்டு ஆடுகிற நடிக்கிற ஆண்கள் குறித்து நண்பர் முத்து கந்தன் சில தகவல்கள் சொன்னார்.

"அவர்களுடைய துயரங்கள் மிக மோசமானவை என்றார். அவர்கள் மனதளவில் ஆண்களாகவும் மேடையில் மட்டுமே பெண்களாகவும் நடிக்கிறார்கள். ஆனால் சமூகம் இந்தக் கலைஞர்களை ஆண்களாக ஏற்றுக் கொள்வதில்லை அவர்களைப் பெண்களாகப் பார்க்கவே விரும்புகிறது. ஆணாக அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை"

"அரவாணிகள் இந்தச் சமூகத்தில் தாங்கள் மனதளவில் பெண்களாகவே வாழ விரும்புகிறவர்கள். ஆனால் இந்தக்கலைஞர்களுடைய பிரச்சினை வேறு மாதிரியானதாக இருக்கிறது. இவர்கள் மேடையில் மட்டுமே பெண்ணாக நடிக்கிறவர்கள். மற்றபடி ஆண்களாகவே வாழும் விருப்புக் கொண்டவர்கள்."

தனக்குத் தெரிந்து சினிமாவில் நடிக்க வாய்ப்புத் தேடித்திரிந்த நண்பர் ஒருவர் கடைசியில் பிழைப்புக்காக இந்தக் கூத்துக் குழுவில் சேர்ந்து பெண் பாத்திரங்களில் நடித்திருக்கிறார். இதனாலேயே அவரது காதலி அவரை விலகிச் சென்று விட அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் முத்துக் கந்தன் சொன்னார்.

இந்த சமூகம் எவ்வளவு குரூரமான இயல்புகளைத் தனக்குள் கொண்டிருக்கிறது இல்லையா?

தனியே துயரத்தையும் புரிந்து கொள்ளாமையையும் தான் தன் சகமனிதர்களிற்கு இது கொடுக்கிறது. அரவாணிகள் தங்களை அரவாணிப் பெண்களாகக் கருதி ஒரு மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்கச் சொல்லி சமூகத்தை நோக்கி குரல் கொடுக்கிறார்கள். சமூகம் இந்தக் குரல்களை மிகக் கேவலமான மனநிலையோடு அணுகுகிறது. இதோ இந்தக் கலைஞர்களும் நாங்கள் ஆண்கள் தான் பெண்வேடமிட்ட குற்றத்திற்காக எங்களைப் பெண்களாகப் பார்க்காதீர்கள் என்கிறார்கள்.

ஆனால் வேடிக்கையானதும் குரூரமானதும் இயல்புகள் கொண்ட இந்தச் சமூகம் நீ பெண் என்று அவர்களை முண்டித் தள்ளுகிறது துயருக்குள். நாங்களும் இந்தச் சமூகத்தின் ஒரு அங்கம் என்கிற வகையில் இதற்காக வெட்கப்பட வேண்டும். கூனிக்குறுகி ஒடுங்கிப் போகவேண்டும். சகமனிதனைப் புரிந்துகொள்ளாமல் வஞ்சிக்கிற எங்கள் புரிதலின்மையை நினைத்து.

கூத்துதொடர்ந்துநிகழ்ந்துகொண்டிருந்தது. நேரம் அதிகாலை 3 மணியாகி விட்டது. என் பக்கத்தில் இருந்த கிழவி சூர்யோதயத்திற்கும் கர்ணன் மோட்சம் அடைவதற்கும் சரியாக இருக்கும் என்று சொன்னார். என்னதான் வ(ஒ)ன் டே கிரிக்கெட் ரசிக்கும் படி விறுவிறுப்பாய் இருந்தாலும் டுவன்டி டுவன்டி தேவையாய் இருக்கிறதில்லையா? அது கலைகளுக்கும் பிரயோகிக்கப் பட வேண்டியிருக்கிறதாய் தோன்றிற்று.


சென்னையில் எங்களிற்கு காலையில் நிறைய வேலைகள் இருந்தன. கிளம்பினோம் கூத்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வாகனத்தை எடுத்துக்கொண்டு போவது பற்றி அதிகநேரம் யோசிக்கவேண்டியிருந்தது. அது அவர்கள் மனதைப் புண்படுத்துமோ என்று. பிறகு அவர்களிடம் சொல்லிக்கொண்டே கிளம்பினோம் வேலைகள் இருப்பதாக.

கர்ண மோட்சம் முடிகிறபோதான நிகழ்வுகளை முத்து கந்தன் சொல்லிக்கொண்டே வந்தார் வழி முழுதும் கர்ணன் இறந்து பெண்கள் எல்லாரும் மாரடித்து அழுகிற போது யாருக்கு பதினாறாம் நாள் காரியம் நடக்கிறதோ அவரைக் கர்ணனாகப் பாவித்து அவரது பெருமைகளையெல்லாம் சொல்லி அழுவார்களாம்.

கூத்துக் கலை எல்லாவற்றையும் தனக்குள் உள்வாங்கிக்கொண்டு நிகழ்த்தப்படக் கூடிய ஒன்று என்று நினைத்தேன்.

முத்துக் கந்தன் தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார் அவர் கூத்துப் பற்றிய ஆய்வு மாணவராயிற்றே. ஆனால் என் மனசுக்குள் புரண்டு கொண்டிருந்தது பெண் வேடமிட்ட அந்த ஆண்களின் துயரும் அர்ச்சுனன் தபசுக்கு வரப்போகும் அழகிகளைப் பற்றிய நினைவுகளும் தான்.

PSYCHICS ASTROLOGER - REVNITES LOVERS



உங்கள் வாழ்க்கையில் தடைகளில் இருந்து
விடுபடவிரும்புகிறீர்களா ? உங்களைச் சுற்றி தீயசக்திகள்
ஆதிக்கம் செலுத்துவதாக நம்புகிறீர்களா ? அப்படியானால்
அதுபோன்ற சூழ்நிலைகளில் இருந்து விடுபட நான் உதவுவேன்
என்று உத்தரவாதம் அளிக்கின்றேன். உங்கள் வாழ்க்கை
நல்லவிதமாக அமைய எனது சக்தியும் வழிபாடும் நிச்சயம்
உதவும்.மற்ற உளவியலாளர்களே ஆலோசனை பெற என்னிடம்
வரும்போது நீங்கள் ஏன் தாமதிக்கிறீர்கள் ?

An expert service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem, Sickness, Promotion, Visa, Court, Lottery, Money, Removal of enemy. All types of black magic and evil things removed. He does protection thing for house, shop and personal matters will not be kept in confidence.

783, London Road, Thornton Heath CR0 7LF

Tel: 020 8684 2438 Mob: 07794 411 303

# தயவு இல்லையா?

*இக்கடிதத்தை படித்த பொழுது எனது விழியிலிருந்து என்னையும் அறியாமல் சில கண்ணீர்த் துளிகள் பூமியில் விழுந்தன. ஏதோ ஒரு செப்டம்பர் 11 அன்றைக்கு. உலகின் ஏதோ ஒரு மூலையில் நடந்த சம்பவத்தை இன்னும் மறக்காமல் நாம் விவாதித்து கொண்டிருக் கிறோம். ஆனால் நம் காலடியில் உள்ள தேசத்தில் நம் சொந்தங்களுக்கு தினம் தினம் செப்டம்பர் 11 நடந்து கொண்டிருப்பதை நாம் இன்று வரை கண்டு கொள்ளவில்லை அல்லது கண்டும் காணாதது போல் இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு சீக்கிய மாணவனின் மயிரை அறுத்ததற்காக வெகுண்டெழுந்த சீக்கிய இனம் எங்கே, உன் தொப்புள் கொடி உறவின் உயிரை அறுத்த பின்னும் வாய் மூடி வேடிக்கை பார்க்கும் நம் தமிழ் இனம் எங்கே!*

*(கண்கள் நிறையக் கனவுகளோடும், துள்ளி விளை யாடிய கால்களில் ஷெல் அடித்த காயங்களின் வலியோடும்அகதி முகாமில் வாடும் புலம்பெயர்ந்த ஈழக் குழந்தையின் கிழிந்து போனசட்டைப் பைகளில் இருந்த உடைந்தபென்சிலின் ஒட்டுத் துண்டில் இந்தக் கடிதம் எழுதப்படுகிறது)*

நலமுடன் இருக்கிறீர்களா? உலகத் தமிழர்களே?

குண்டு விழாத வீடுகளில், அமெரிக்காவுடனான அணு குண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது பற்றி கதைத்துக் கொண்டிருப்பீர்கள், இடைஞ்சலான நேரத்தில் கடிதம் எழுதுகிறேனா?

எனக்குத் தெரியும், என் வீட்டுக் கூரையில் விழுந்த சிங்கள விமானத்தின் குண்டுகள் என்னைப் போல பல்லாயிரக் கணக்கான தமிழ்க் குழந்தைகளை அநாதை ஆக்கிய போது, நீங்கள் எதாவது நெடுந்தொடரின் நாயகிக்காகக் கண்ணீர் விட்டுக் கரைந்திருப்பீர்கள்......

எண் அம்மாவும் அப்பாவும் அரைகுறையாய் வெந்து வீழ்ந்த போது, உங்கள் வீட்டு வரவேற்பறைகளில் அரைகுறை ஆடைகளுடன் அக்காமாரெல்லாம் ஆடும் 'மஸ்தானா, மஸ்தானாவின்' அரையிறுதிச் சுற்று முடிவுக்கு வந்திருக்கும்.

அண்ணனும்,தம்பியும் நன்றாகப் படிக்கிறார்களா? அம்மா, அப்பாவின் மறைவுக்குப் பின்னால், எனக்குத் தலை வாரிவிட்டு, பட்டம்மா வீட்டில் அவித்த இடியப்பம் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பிய அண்ணனும் இப்போது இல்லை, நீண்டதேடலுக்குப் பின்னர் கிடைத்த அவன் கால்களை மட்டும் மாமாவும், சித்தப்பாவும் வன்னிக் காடுகளில் நல்லடக்கம் செய்தார்கள்......

அப்போதே எழுத வேண்டும் என்று ஆசைதான் எனக்கு, நீங்கள் இலங்கை கிரிக்கெட் அணியின் இந்தியச் சுற்றுப் பயணத்தை,இரவுபகல் ஆட்டமாய்ப்பார்த்திருந்தீர்கள்.... அதனால் தான் எழுதவில்லை.........

ஒலிம்பிக் தீபத்தின் சுடர்களை உலகம் முழுவதும், என்னைப் போல ஒரு மலை நாட்டு திபெத் சிறுவனும், அவன் இனத்துப் பெரியவரும் ஒழுங்கைகளெல்லாம் மறித்துத் தடுத்தபோது, எனக்கு உங்கள் நினைவு வந் தது.... அதுமட்டுமல்ல, இந்திய அரசுகளின் உதவியோடு, இலங்கை ராணுவத்திற்கு நன்றி சொல்லும் திரைப்படச் சுருளின் பிரதிகளும் நெஞ்சில் நிழலாடியது.

ஒரு பக்கம், இரங்கற்பா எழுதிக் கொண்டு, மறுபக்கம், நவீன ஆயுதங்களை அனுப்பி வைக்கும் உங்கள் கூட்டணித் தலைவர்கள் எல்லாம் நலமா தமிழர்களே?

இன்னொரு முறை ஆயுதங்கள் அனுப்பும் போது மறக் காமல் ஒரு இரங்கற்பா அனுப்புங்கள், சாவின் மடியில் எங்களுக்கு ஒரு தமிழ்க் கவிதையாவது கிடைக்கும் அல்லவா?

இன்னொரு தமிழகத்தின் மறைவான இடத்தில் நீங்கள் இலங்கை ராணுவத்திற்கு பயிற்சி அளிக்கும் போது, குழந்தைகளையும்,- கர்ப்பிணிப் பெண்களையும் வலி யின்றிக் கொல்வது பற்றி ஒரு வகுப்பெடுத்து விடுங்கள். கொஞ்சம் பாவமாவது குறையட்டும்.....

செஞ்சோலையில் ஒரு மாலை நேரத்தின் மங்கலான வெளிச்சத்தில், தம்பியின் பிஞ்சு உடல் நான்கைந்தாய் சிதறடிக்கப்பட்ட அந்த கோர நாளில் நாங்கள் எல்லாம் கூட்டமாய் அழுது கொண்டிருந்தோம்,

குழந்தைகள் இருக்கும் பள்ளிக்கூடங்களை தேடிக் கண்டு பிடித்து கொலை வெறியோடு உங்கள் 'நேச நாட்டு' விமானங்கள் குண்டு மாரி பொழிந்த போது நீங்கள் இந்திய விடுதலையின் பொன் விழாக் கொண்டாட்டங்களுக்கான குறுஞ்செய்தி வாழ்த்துக்களில் களித்திருந்தீர்கள், உலகத் தொலைக் காட்சிகளின் நீங்கள் பார்த்து மகிழும் முதன் முறைத் திரைப்படங்கள் தடைபடுமே என்று தான் அப்போது எழுதவில்லை,

எங்கள் இனப் போராளிகளை கொன்று குவித்து, நிர்வாண மாக்கி, இறந்த உடலுக்குக் கொடுக்கின்ற இறுதி மரியாதை இல்லாமல், எம் இறப்பை எள்ளி நகையாடிய உங்கள் 'சார்க்' கூட்டாளியின் கொடிய முகம் கண்ட போதே எழுதி இருக்க வேண்டும்.

அப்போது நீங்கள் கட்சி மாநாடுகளில் கவனமாய் இருந்தீர்கள், பெண்களின் இடுப்பில் பம்பரம் விட்ட களைப்பில் கட்சி துவக்கிய கப்ரன்களின் பின்னால் அணிவகுத்து நின்றீர்கள், நீங்கள் போட்ட வாழ்க கோஷங் களின் இரைச்சலில் எங்கள் நிஜக் கப்ரன்களின் வீரமரணம் கேள்விக் குறியாய்க் கலைந்து போனது, தமிழர்களே... அப்பாவின் வயிற்றை அணைத்துக் கொண்டு, முறிப்புக் குளத்தில் முழுகி எழுந்த நினைவு களை மனதில் சுமந்து கொண்டு, வாரம் இரண்டு முறை அடிகுழாயில் அடித்து, அடித்து கொஞ்சமாய் ஒழுகும் தண்ணீர் நின்று போவதற்குள் ஓடி வந்து குளித்து விடுகிறேன் அகதி முகாமில்.

முகாமின், தகரவேலிகளின் இடைவெளியில் தெரியும் பள்ளிக்கூடமும், அதிலிருந்து வரும் மதிய உணவின் வாசமும், அம்மாவின் மடியில் இருந்து, எப்போதும் கிடைக்கும் அன்பையும் என் பழைய வாழ்வையும் நினைவுபடுத்தும். ஆயினும் பாழும் வயிறு, பசி கலந்த வலி கொடுத்து பாய்ந்து ஓடி வரிசையில் நிறுத்தி விடும், அளந்து கொடுக்கப்படும் அவமானச் சோற்றுக்காய்......

அப்போதெல்லாம் எழுதத் தோன்றும் எனக்கு, ஆனால் நீங்கள் பிற்ஸா கடைகளின், வட்ட மேசைகளில் அமர்ந்து ஆங்கிலம் பேசிக் கொண்டிருந்தீர்கள், எழுதத் தோன்றவில்லை..... எனக்கு....

அமைதியாய் விடியும் பொழுதும்,

அழகாய்க் கூவும் குயிலும், தோகை விரிக்கும்மயிலும்,

காதல் பேசும்கண்களும், தாத்தா பிடித்த மீன்களில்
அம்மா வைத்த குழம்பும்,

தாமரை மலரின் தாள்கள் பறிக்க நாங்கள் குதித்த
குளங்களும்,

பக்கத்து வீட்டுப் பாண்டி அண்ணன் வீடு கட்டக்
குவித்து வைத்த மணலும்,

அதில் சங்கு பொறுக்கி விளையாடிய என் தம்பியின்
கால் தடங்களும்,

பற்றைக் காடுகளில் பொன் வண்டு பிடித்த என்
பழைய நினைவுகளும்,

இனிமேல் எனக்குக் கிடைக்கவே கிடைக்காதா உலகத் தமிழர்களே?

அண்ணா, என் கேள்விகளில் எதாவது ஒன்றுக்கு, உங்கள் வீட்டில் கிழித்து எறியப்படும் நாட்காட்டித் தாள்களின் பின்புறமாவது பதில் எழுதுங்கள், உலகத் தமிழர்களே........

ஏனெனில் நீங்கள் எழுதப் போகும் பதிலில் தான் ஒரு இருண்டு போன இனத்தின் விடுதலையும், துவண்டு போன அகதிகளின் வாழ்க்கையின் மறுபிறப்பும் இருக்கிறது.

வலி கலந்த நம்பிக்கைகளுடன் ...

*- ஈழத்தமிழ் மகன்*

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

## வன்னியும் மலேரியாவும்

நுளம்புகள் நிறைந்த வன்னியில், மரங்களின் கீழ் வாழும் எம் மக்கள் எதிர்வரும் மாதங்களில், சந்திக்கவிருக்கும் இன்னல்களை முழுமையாக உணர்வதற்கு மலேரியா பற்றிய இச் சிறுதகவல் சிறிது உதவும்.

மலேரியா நோய் நேரடியாக ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தொற்றாது. எம் குருதியுடன் கலக்கும் நுண்ணுயிர்களால் தான் மலேரியாக் காய்ச்சலை உருவாக்க முடியும். ஆகையால் இந்நோயைத் தோற்றுவிக்கும் நுண்ணுயிர்கள் எம் உடலுட் செலுத்தப்பட வேண்டும். இந்தக் கொடிய செயலைச் செய்வதுதான் நுளம்பு. பெண் நுளம்புகள் அவற்றின் முட்டை வளர்ச்சிக்கு தேவையான சத்தை எம் குருதியிலிருந்துதான் பெறுகின்றன. தேவையான சத்தைப் பெற மோப்பம் பிடித்து எம் தோலைத் துளைத்து அதன் மறுபுறத்திலுள்ள இரத்தக் குழாயைத் துளைத்து இரத்தத்தை உறிஞ்சுகின்றன. தாம் உறிஞ்சும் இரத்தம் உறைவதைத் தடுப்பதற்காக ஒருவகை திரவத்தை தம் எச்சிலுடன் கலந்து உள் அனுப்புகின்றன. அத் திரவத்தில் ஏற்கனவே வேறு யாரோ உடலில் இருந்து புகுந்த மலேரியா நுண்ணுயிர்கள் இருக்குமாயின் புதியவர் குருதியுடன் அவை கலந்து விடுகின்றன. அதன்மூலம் புதிய களம் ஒன்று நுண்ணுயிர்கள் செயற்பாட்டிற்கு கிடைத்துவிடுகிறது.


அனோபிலிஸ் என்னும் மரபுப் பெயர் கொண்ட ஒருவகை நுளம்பு இனம் மட்டும்தான் மலேரிய நுண்ணுயிர்களின் காவிகள். நாநூறு அனொபிலிஸ் வகைகள் உண்டு. அதில் 30க்கு சற்று மேற்பட்ட வகைகளே மனித மலேரியாக் காவிகளாக செயற்படுகின்றன. இந்த 30 வகையும் பரவாது தடுத்தால் மலேரியாவும் பரவாது. டீடீரி என்னும் இரசாயனம் சிறந்த மலிவான நுளம்புக் கொல்லி. அது மலிவாகக் கிடைப்பதால் வேறு தேவைகளுக்கும் விவசாயிகள் அதை அதிகளவில் பயன் படுத்தி வேறு கோளாறுகளுக்கு வழி வகுக்கிறார்கள். இதனால் டீடீரி உபயோகத்தை கட்டுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. போதாக் குறைக்கு நீண்ட கால உபயோகத்தின் விளைவாக சில அனொபிலிஸ் வகைகள் டீடீரிக்கு தாக்குப் பிடிக்கும் தன்மையையும் பெற்றுவிட்டன. இப்படியான சூழலிலேயே ஆபிரிக்காவின் சில நாடுகளில் இந்நோய் முழு மூச்சுடன் செயல்பட்டு பல குழந்தைகளை அவர்கள் ஐந்தாவது பிறந்த நாள் வரை கூட வாழ விடுவதில்லை.

இரத்தத்தில் நுளம்பாற் புகுத்தப்படும் மலேரிய நுண்ணுயிாகள் குறுகிய நேரத்துள் ஈரலை அடையும். அங்கு ஒன்று உயிரணுவுள் புகுந்தாலே போதும். அது பலவாக மாறி அந்த (புகுந்த) உயிரணுவைப் பிளந்து வெளியே வந்து குருதியுடன் கலந்து மலேரியாவைத் தோற்றுவிக்கின்றன. பிளாஸ்மோடியா என்னும் நுண்ணுயிர் இனத்தின் நான்கு வகைகள் மட்டுமே மலேரியா நோயை உருவாக்க வல்லவை. அந்த நான்கு வகைகளிலும் பிளாஸ்மோடியா பல்சிபறம் என்னும் வகையே மூளைவரை சென்று தாக்கும் செறபெரல் (பெருமூளை) மலேரியா என்னும் உயிர்க் கொல்லி நோயைத் தோற்றுவிப்பவை. மலேரியாவால் ஏற்படும் தொண்ணூறு வீதமான இறப்புக்கள் பிளாஸ்மோடியா பல்சிபறம் ஏற்படுத்தும் செறபெரல் மலேரியாவாலேயே ஏற்படுகின்றது.

மலேரியா ஒழிப்பு மிகவும் சிரமமான பணி. டீடீரி போன்ற பூச்சி கொல்லிகள் அடிப்பதன்மூலமும் தண்ணீர் தேங்காது தவிர்ப்பதன் மூலமும் அனொ பிலிஸ் வகைகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தூங்கும்போது நுளம்பு குற்றுவதைத் தடுக்க நுளம்பு வலைகள் பயன் படுத்தப்பட வேண்டும். நோயின் அறிகுறி தென்பட்ட உடனேயே வைத்தியம் ஆரம்பிக்க வேண்டும்.

குயினாயின் நல்ல மருந்து ஆனாலும் அதன் பக்க விளைவுகள் காரணமாக அதன் உபயோகம் குறைந்துள்ளது. இன்று குளொரோக்குயின் நல்ல பயன் கொடுக்கிறது. இதைவிட காலம் காலமாக சீனாவில் உபயோகத்தில் இருந்த மூலிகையான ஜிங் ஹாஓ (ஆட்டிமிசியா) வைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆட்டிமிசினின் என்னும் மாத்திரையே செயல் திறன் கூடியது.

பிளாஸ்மோடியா நுண்ணுயிர்கள் செயற்பாட்டை ஆரம்பத்தில் தற்காலிகமாகக் கட்டுப் படுத்தும் மாத்திரைகள் உள்ளன. வன்னியிலுள்ள எம் உறவுகளுக்கு, அம்மாத்திரைகள் போதிய அளவு கிடைக்க வழி வகுத்தாலே அது பாரிய விளைவைத் தரும்.

ஆஞ்சனேய ஜோதிடம்

பண்டித் வெங்கடேஸ் சாஸ்திரிகள்

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார். கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் , பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேள் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளை காட்டுவோம் மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருகிறோம்.



SPOKEN LANGUAGES: TAMIL,HINDI, & ENGLISH.

Your Secret matters will be maintai confidently

KALAIVANEE VIDEO
307, Mitcham Road, Tooting, London,
SW17 9JQ (Near Tooting Police Station)
Opening Hours: 9.00 a.m – 8.00p.m all 7 days

Mob : 07506 735 589 / 07507 760 448

# தமிழகத்தில் பௌத்தம்

அங்கம் 13

காஞ்சியில் மட்டும் நூற்றுக்கும் மேலான பௌத்தப் பள்ளிகள் இருப்பதையும் அவற்றில் பல அசோக மன்னர்காலத்திலிருந்தே இருந்து வருவதையும், அப்பள்ளிகளில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த பௌத்த தேரர்கள் மதக்கல்வி கற்று வருவதையும், அவர்களிடையே 300ற்கும் மேற்பட்ட இலங்கைப் பௌத்த தேரர்கள் இருப்பதையும் ஹூவான் திஸாங்கின் பதிவேடுகளிலிருந்து அறிய முடிகிறது.

இந்திர விகாரை, உபவனம், சக்கரவாளக் கோட்டம், கணதாச விகாரை, பூதமங்கல விகாரை, போதிமங்கல விகாரை, (சாக்கியர் தம் போதிமங்கை : பெரியபுராணம்) என்பன தமிழகத்தில் புகழ் பெற்ற பௌத்த தலங்களாகும்.

தமிழ் நாட்டிலிருந்த அரசர், வணிகர், செல்வந்தர் ஆகியோரிடமிருந்து பெற்ற பொருளுதவிகளைக் கொண்டே விகாரைகளையும், மடாலயங்களையும், சேதியங்களையும் இப் பௌத்த குருமார்கள் ஆங்காங்கே நிறுவினர். மடங்களில் வாழ்ந்த பௌத்த துறவிகள் மருத்துவம் பயின்று, தம்மிடம் வரும் நோயாளர்களுக்கு இலவசமாக மருந்து கொடுத்துத் தொண்டுபுரிந்தார்கள்.

மடாலயங்களில் பாடசாலைகள் அமைத்து இக்குருமார்கள் சிறிவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார்கள். பண்டைய தமிழகத்தில் பாடசாலைகள் அமைத்து சாதாரண மக்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக்கொடுத்த முன்னோடிகள் பௌத்தர்களாவார். பௌத்த மடாலயங்கள் கல்விக் கூடங்களுமாக இருந்த படியினாற்றான் இவை பௌத்தப் பள்ளிகள் என்னும் பெயரைப் பெற்றன.

பௌத்த மதத்தினருக்குரிய புனித நாட்களில் நாட்டு மக்களைத் தமது பள்ளிகளுக்கு அழைத்து மணல் பரப்பிய முற்றங்களில் அவர்களை அமரச்செய்து திரிபிடகம், பௌத்த ஜாதகக் கதைகள், புத்தரின் சரித்திரம் முதலான நூல்களை வாசித்துப் பொருள் சொல்லியும், மக்களுக்கு மத போதனைகளையும் இக்குருமார்கள் செய்துவந்தனர்.

மேலும் நாட்டின் பல பாகங்களிலும் அறச்சாலைகளை நிறுவி குருடர், செவிடர் முடவர் முதலானவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் இலவசமாக இப்பௌத்தர்கள் உணவு வழங்கி வந்த செய்திகளை மணிமேகலை எடுத்துரைக்கிறது. அக்காலகட்டத்தில் வடஇந்தியாவிலிருந்து தமிழகத்தில் புகுந்த வைதீகப் பிராமணிய மதம் போதித்த சாதிப் பிரிவினையையும், பிராமணர்களின் பிறப் புயர்வையும் ஏற்றுக்கொள்ளாத தமிழக மக்கள் பிறப்பினால் மேல் சாதி, கீழ் சாதி என்று எதுவுமில்லை எனப் போதித்த பௌத்த மதத்தை ஏற்றுக்கொண்டதில் வியப்பிருக்க முடியாது.

தமிழ் நாட்டில் பௌத்தமதம் பெற்றிருந்த செல்வாக்கை மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், பெரியபுராணம், நீலகேசி ஆகிய தமிழ் இலக்கியங்கள் வழியாகவும் - விந்ய வினிச்சய, அபிதம்மாவதார அபிமார்த்த சங்கிரக, நெத்தி விபரணட்ட, ஜினலங்கார, போதிவம்ச ஆகிய பாளி நூல்கள் வாயிலாகவும் இன்று நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

## 'பௌத்த சகாப்தம்' கி.மு.300 - கி.பி.600

கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு காலம் வரை 1200 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தின் முக்கிய இரு மதங்களாக விளங்கியவை பௌத்தமும், சமணமும்தான் இவற்றில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை முன்னணியில் இருந்தமதம் பௌத்த மதமாகும்.

மணிமேகலை, குண்டலகேசி, உதயணன் காதை, சித்தாநடததட தொகை, திருப்பதிகம், வீரசோழியம் போன்ற காப்பியங்களைப் படைத்து தமிழ்ப் பௌத்த ஞானிகள் தமிழன்னையை அலங்கரித்து அழகூட்டிய காலம் அது. தமிழகத்தின் பௌத்த அறிஞர்கள் பாளிமொழி பயின்று விசுத்தி மார்க்கம், மதுரத்த விலாசினி, விநய வினிச்சயம், உத்தர வினிச்சயம், ருபாருப விபாகம், ஜினலங்காரம், தந்ததாது, போதிவம்சம், அபிதம்மாவதாரம், அபிமார்த்த சங்கிரகம் ஆகிய இறவாத பௌத்த இலக்கியங்களை உருவாக்கிய காலம் அது.

திரிபிடகத்துக்கு உரை கண்ட ஆச்சாரிய புத்ததத்தர், ஆச்சாரிய புத்தகோசவர், ஆச்சாரிய தர்மபாலர் ஆகிய முப்பெரும் பௌத்த குரவர்களைத் தந்து தமிழகம் பெருமை பெற்ற காலமும் அதுதான். இக்காலத்தில் பௌத்த மதத்தை இந்தியாவிலிருந்து சீனாவுக்கும், யப்பானுக்கும் எடுத்துச் சென்று பரப்பியவர் வஜ்ர போதி என்னும் பாண்டிய நாட்டுப் பௌத்த குருவே.

இக்காலப்பகுதியில் பௌத்தம் தமிழகத்தின் முன்னணி மதமாக விளங்கியமைக்குரிய முக்கிய காரணம் தமிழ் நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களும், அவர்களைத் தொடர்ந்து வந்த களப்பிரர்களும் அந்த மதத்தை ஆதரித்ததேயாகும்.

கி.பி.மூன்றாம் நூற்றாண்டில் கொற்கையிலிருந்து ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள் பௌத்த மதத்தைத் தழுவியிருந்தார்கள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டுக்கு முதல் கொற்கைப் பாண்டியர்கள் வெளியிட்ட முச்சக்கர நாணயங்கள் 'பௌத்தச்சக்கர நாணயங்கள்' என அழைக்கப்படுகின்றன. கொற்கைப் பாண்டியர்கள் தமது புராதன அரச சின்னமான போர்க் கோடரியைக் கைவிட்டு யானையாக மாற்றியமைக்கு அவர்கள் பௌத்த மதத்தைத் தழுவியதே காரணம் என்கிறார் நாணயவியல் வல்லுனரான வணபிதா லோவந்தால் (Loventhal, Rev.E, : Coins of Tinnevelly, Madras 1888,Repr..1938)

கி.பி.25ஆம் ஆண்டில் மதுரையைக் கைப்பற்றி அங்கே இரண்டாவது பாண்டிய அரசை ஸ்தாபித்த அரசன் 'ஒள்ளியூர் தந்த புத்தப் பாண்டியன்' இவன் மதுரைப் பாண்டியர்களின் சின்னமாக மீனைத் தேர்ந்தெடுத்தமைக்கும் இவன் பௌத்தனாக இருந்ததே காரணம் என்பார் லோவந்தால். இதைத் தொடர்ந்து கொற்கையிலும், மதுரையிலும் ஒரே சமயத்தில் இருவேறு பாண்டியர்கள் அரசோச்சினர்.

**தமிழரும் அவர்கள் மதங்களும்**

எழுதுபவர்: கலாநிதி சிவ தியாகராஜா

மதுரையை ஆட்சிசெய்த 'ஒள்ளியூர் தந்த புத்தப் பாண்டியனின்' பெயர் சமீபத்தைய அகநானூறு, புறநானூறு நூல்களில் 'ஒல்லியூர் தந்த பூதப் பாண்டியன்' என மாற்றப்பட்டிருக்கிறது. வரலாற்றுத் திரிபு என்பதற்கு நல்லதோர் உதாரணம் இது.

கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை பாண்டிய, சோழ நாடுகளை ஆட்சிபுரிந்த களப்பிர அரசர்கள் தீவிர பௌத்த ஆதரவாளர்களாக இருந்தனர். சோழநாட்டை ஆட்சி செய்த களப்பிர மன்னன் அச்சுத விகந்தன் ஆட்சியில் தமிழ் மொழிக்கும், பௌத்த மத மொழியான பாளிக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. களப்பிரர் ஆட்சிக் காலம் தமிழகத்தில் இருண்ட காலம் என்பதெல்லாம் பௌத்தம் பெற்றிருந்த செல்வாக்கை மறைக்க முயலும் மதவாதிகளின் கூற்றேயாகும்.

## தொல்லியல் சான்றுகள்.

தமிழகத்தில் பலவேறு இடங்களில் காலத்திற்குக் காலம் வீடுகள் கட்டுவதற்காக நிலங்கள் தோண்டும் போதும், வயல்களை உழும் போதும் பல புத்தர் சிலைகள் வெளிப்பட்டிருக்கின்றன. கூவம் கிராமத்து வயற்களத்தில், தஞ்சாவூர் மாவட்டம் திருவலஞ்சுழியில் வடஆற்காடு பள்ளூரில், திருச்சி சயங்கொண்ட சோழபுரத்தில், சேலம் தியாகனூரில் இப்படியான புத்த சிற்பங்கள், சிற்பங்கள் சிலைகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

சமீபகாலங்களில் காவிரிப்பூம்பட்டினம், நாகபட்டினம் ஆகிய துறைமுக நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் பௌத்த விகாரங்களின் அடித்தளங்களும், பௌத்தமத கருவூலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. காவிரிப் பூம்பட்டினத்தில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிற்குரிய புத்தரின் பாதபீடங்களும், கி.மு முதலாம் நூற்றாண்டுக்குரிய செப்புத் திருவுருவும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. (இராசவேலு, க. : 1995)

மதுரையில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்குரிய பிராமி எழுத்துக்கள் வரையப்பட்ட பௌத்த மதக்குகைகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் தமிழகத்தில் பௌத்தம் பரவ ஆரம்பித்த காலகட்டத்தை எடுத்துக் காட்டுகின்றன.

## 'இடைக் காலப் பௌத்தம்' கி.பி.700 - 1000

கி.பி ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் பெருகிப்பரவிய சைவ, வைஷ்ணவ மதங்களின் பக்தி இலக்கியம் தமிழக பௌத்தத்திற்குப் பெரும்பின்னடைவை ஏற்படுத்தியது. பௌத்த சமண மதங்கள் மீது சைவ சமயம் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியால் தீவிர போட்டியும் பொறாமையும் மிகுந்து இவர்கள் வாதங்களில் விரட்டப்பட்டனர். அல்லது கழுவேற்றிக் கொலை செய்யப்பட்டனர்.

கி.பி. 700க்கும் கி.பி. 900க்கும் இடைப்பட்ட காலத்தில் இலட்சக்கணக்கான தமிழ்ச் சமணர்களும், பௌத்தர்களும், சைவ - பிராமணிய சமயத்தவரால் கொன்று குவிக்கப்பட்டார்கள். இலட்சக்கணக்கான பௌத்தர்கள் தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்வதற்காக தமிழ்நாட்டை விட்டு இலங்கைக்கு ஓடிச் சென்றனர். சைவர்கள் மேற் கொண்ட பௌத்த - சமண மத அழிப்புப் பற்றிய கொள்கைகளை தேவாரம், பெரிய புராணம் ஆகிய சைவமத இலக்கியங்கள் வெளிப்படையாகவே ஒப்புக் கொள்கின்றன. ஒரே சமயத்தில் 8,000 சமணர்கள் கழுவிலேற்றிக் கொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சி பெரிய புராணத்தில் கூறப்படுகிறது.

'சாஸ்தா' என்ற வடமொழிப் பெயர் சாஸ்திரங்களைக் கற்ற அறிஞர் என்னும் பொருளைத் தரும் வடமொழி நூல்களான 'அமரகோசம்', 'நாமலிங்கானு சாசனம்' ஆகியவை புத்தபிரானை 'சாஸ்தா' என அழைக்கின்றன. இதைத் தமிழ்ப்படுத்தியே சங்ககாலப் பௌத்தர்கள் பலர் சாத்தான், சாத்தனார், ஆகிய பெயர்களைக் கொண்டிருந்தனர்.

'சாஸ்தா' என்னும் வடமொழிச் சொல்லுக்கு நேரான தமிழ்ப்பதம் ஐயன், ஐயனார், என்பதாகும். புத்தபிரான் தமிழர்களால் ஐயன், ஐயனார் ஆகிய பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்தார். பல பௌத்த ஆலயங்கள் பின் நாட்களில் ஐயனார் கோயில்களாக மாற்றப்பட்டன.

பௌத்த மதக் கொள்கைகளை இந்துமதம் தன்னகத்தே அடக்கிக் கொண்டபோது வைஷ்ணவர்கள் புத்தரைத் திருமாலின் ஓர் அவதாரமாகக் கொண்டனர். சைவசமயத்தோர் புத்தராகிய சாத்தனாரை திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்த பிள்ளையாகக் கற்பித்து சாத்தானைத் தமது தெய்வங்களில் ஒன்றாகக் கொண்டனர். ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர் பாடிய தேவாரத்தில்

'பார்த்தனுக் கருளும் வைத்தார், பாம்பரை
யாட வைத்தார்
சாத்தனை மகனாய் வைத்தார் ...'

என சாத்தனைச் சிவனின் மகனாக அழைக்கிறார். புத்தபிரானை சிவனின் மகன் என ஏற்றுக்கொள்ள மறுத்த மலையாளப் பிராமணர்கள் கி.பி.11ஆம் நூற்றாண்டில் சிவனுக்கும் திருமாலுக்கும் பிறந்தவராக 'ஐயப்பன்' என்றொரு புதிய தெய்வத்தை உருவாக்கிப் புதிய புராணங்களைப் படைத்தனர். 'சாஸ்தா' என்ற புத்தரின் பெயர் ஐயப்பனுக்குக் கொடுக்கப்பட்டது.

*(தொடரும்)*

இதனைக் குறித்துக் கொள்ளுங்கள்

பிரித்தானியா வாழ் தமிழர்களின் வியாபார தகவல்களை அறிந்து கொள்ள
தமிழர்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களை தெரிந்து கொள்ள
இந்த இணையத்தளத்திற்கு வாருங்கள்


தமிழ் ஓலைகள், முரசம் ஆகியன உங்கள் வீடுகளில் இல்லாத பட்சத்தில்...

www.orudirectory.com

உங்கள் நிறுவனங்களையும் இதில் சேர்க்க அழையுங்கள்

020 7043 4316

oru directory BETA



# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 30 வயது 5' 8" உயரமும் கொண்ட நல்ல தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1336

2. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 31 வயது 5'5" உயரமும் கொண்ட நல்ல தொழில் புரியும் மணமகனுக்கு நல்ல குணமான மணமகளைப் பெற்றோர்கள் தேடுகின்றனர்.Ref. 1337

3. பிரித்தானியப் பிரஜையும் 28 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். Ref. 1338

4. கனடாவின் பிரஜையும் 30 வயது 5' 8" உயரமும் கொண்ட கடந்த 10 ஆண்டுகளாகக் கனடாவில் வசிக்கும் நல்ல, நிரந்தர வேலையில் உள்ள மணமகனுக்கு தோதான மணமகளைத் தேடுகிறார்கள். Ref. 1339

5. British citizen, in the UK since 5 years of age, MSc qualified and well employed, 28 years and 5' 10" tall, seeks a matching bride. Ref: 1335

6. லண்டனில் மாணவ விசாவில் படிக்கும் 27 வயது 5" 7" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிரந்தரவ வதிவிட உரிமை உள்ள தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். சுநக: 1334

7. பிரித்தானியாவில் நிரந்தர வதிவட உரிமையுள்ள 38 வயது 5" 7" உயரமுள்ள கணக்கியல் பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். விவாக ரத்து செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். சுநக: 1333

8. ஐக்கிய இராச்சியத்தில் 7 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 34 வயது 5' 5" உயரமுள்ள A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1332

9. ஐக்கிய இராச்சியத்தில் 18 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 37 வயது 5' 11" உயரமுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். விவாக ரத்துச் செய்தவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். Ref: 1331

10. ஐக்கிய இராச்சியத்தில் 2007ல் இருந்து மாணவ விசாவில் இருக்கும 22 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1330

11. கொழும்பில் தொழில்புரியும் A /L படித்த 32 வயது 5' 5"உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் வதிவிட உரிமை உள்ள தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1329

12. London இல் 16 வருடங்களாய் வசிக்கும், படித்து நல்ல தொழிலில் இருக்கும் 38 வயது, 5'3" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பார்க்கின்றனர். Ref: 1328

13. மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்யும் A/L படித்த 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு, வெளிநாடுகளில் வதிவுடமை உள்ள மணப் பெண்ணை பார்க்கின்றனர். Ref: 1327

14. In the UK, since 2000 on holiday working visa, 28 years, 5' 9" tall, a graduate from the East London Uni., and well-employed, seeking a bride in Europe with permanent residence status. Ref: 1326

15. In Norway since 1996 on 'Leave to remain status', 42 years, 5' 7" tall, A/L educated, seeks a bride in EU or Canada with permanent residence status. Ref: 1325

16. வவுனியாவில் அரச பணியாற்றும் 30 வயதுடைய 5' 7" உயரமுள்ள மணமகன், கனடாவில் அல்லது பிரித்தானியாவில் தகுந்த மணமகளைத் தேடுகிறார். Ref:1324

17. பிரித்தானியக் குடியுரிமை உள்ள 31 வயதும் 5'7" உயரமும் உடைய A/L படித்த மணமகனுக்கு கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. Ref:1323

18. பிரித்தானிய குடியுரிமையுடைய பட்டதாரி, 47 வயது 5'8" உயரம் உள்ள தாரமிழந்த மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref:1322

19. UK qualified professional, on 5 year-work-visa, 30 years, 6' tall, looking for a suitable bride. Ref: 1321

20. British born professional, 32 years, 5' 4" tall, seeking a matching bride. Ref: 1320

21. லண்டனில் 14 ஆண்டுகளாக வசிக்கும் 41 வயது 5'10" உயரமுள்ள படித்த மணமகனுக்கு UK யில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை எதிர பார்க்கின்றார். Ref: 1319

22. Living in the U.K on Permanent Resident status, diploma holder and in permanent employment, 34 years old, 5' 7" tall, seeking an educated bride living in India. Ref: 1318

23. லண்டனில் 10 ஆண்டுகளாக வசிக்கும் 5'7" உயரமுடையவரும் 29 வயதுடையவரும் தன் முயற்சியில் நன் நிலையில் வளர்ச்சிகண்ட படித்த மணமகனுக்குதகுந்த மணமகள் தேவை. *Ref: 1317*

24. Canadian Citizen, over there since 1993, 32 years, 5' 8" tall, Software engineer seeking a matching Bride. *Ref: 1316*

25. In the UK since 2000 on student-visa, Graduate in Accountancy, 34 years , 5' 10" well employed, seeking a suitable bride with permanent resident status. *Ref: 1315*

26. Software Engineer, working in India, 30 years, 5' 7" inches tall seeking a suitable bride in Canada or EU countries with permananant residence status. Ref: 1312

27. Eelam Tamil, now a citizen of Singapore, computer engineer, 31 years, 5' 10" tall seeks a suitable educated bride. Ref: 1311

28. லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும் இந்திய பட்டதாரி 32 வயது 5' 10" உயரமுள்ள மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1309

29. Student in Australia, already a Colombo Uni. LLB Graduate, 34 years, 5' 10", a divorcee seeking a uni-educated, matching bride in Canada. Ref: 1308

30. Senior Manager, with Master's degree, a citizen of USA, 36 years, 5' 9" tall, seeking a matching professional bride in USA, or one willing to migrate to USA. Ref: 1307

31. In the UK since 1998, a graduate from London Uni., 35 years, 5' 6" tall, seeking a suitable bride with permanent residence state. Ref: 1306

32. Canadian citizen, in Canada since 1989, 34 years, 5' 7" tall, self-employed, looking for a suitable bride. Ref: 1305

33. UK citizen, in the UK since 1991, a graduate, 34 years, 5' 6" tall, a divorcee, seeking a suitable bride. REF: 1304

34. British citizen, 39 years, 5' 7" tall, working as an IT consultant, seeking a suitable bride. Ref: 1303

35. UK citizen, since 15 years of age in England, 36 years, 5' 9", BSc. Hons, working as a executive in an international firm in London. looking for an educated bride. Ref: 1301

36. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

37. British citizen, 35 years, 5' 7", Financial Accountant, well employed, seeking a matching bride. Ref: 1196

38. French citizen, graduate in Accountancy from UK-Uni, presently working in England, 30 years,5' 7", seeking a matching bride. Ref: 1195

## மணமகன் தேவை

39. கனடாவின் பிரஜையும் 35 வயது 5' 7" உயரமும் கொண்ட நன்கு படித்த பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். Ref. 1681

40. கொழும்பில் தொழில் புரியும் 24 வயது 5'2" உயரமுள்ள பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள Ref. 1682

41. நெதர்லாந்துப் பிரஜையும் 22வயது 5' 2" உயரமுள்ள Administration படித்துமுடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள் 1683

42. பிரித்தானியப் பிரஜையும் 25 வயது 5' 5" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1684

43. பிரன்சுப் பிரஜையும் 32 வயது 5' 2" உயரமுள்ள Accountancy Diploma முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1685

44. 11 ஆண்டுகளாக கனடாவில் வசிக்கும் பட்டதாரி 30 வயது 5" 3" உயரமுள்ள மணமகளுக்குத் தகுந்த வரனை கனடா, அமெரிக்கா அல்லது லண்டனில் தேடுகின்றனர். Ref: 1680

45. யாழ் பல்கலைக் கழகப் பட்டதாரி, 25 வயது 5" 1" உயரமுள்ள மணப் பெண்ணுக்கு கனடா அல்லது லண்டனில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள கத்தோலிக்க மணமகனை தேடுகின்றனர் Ref: 1679

46. கொழும்பில் வசிக்கும் 31 வயது 5அடி உயரமுள்ள படித்த மணமகளுக்கு லண்டனில் அல்லது அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவீட உரிமை யுள்ள மணமகனை தேடுகின்றனர் Ref: 1678

47. லண்டனில் தொழில் விசாவில் வசிக்கும் கணக்கியற் பட்டதாரி 34 வயது 5" 2" உயர மணமகளுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர். Ref: 1677

48. கொழும்பில் வசிக்கும் 28 வயது 5" 6" உயரமுள்ள ஓ எல் படித்த மணமகளுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1676

49. Graduate in Accountancy, 26 years old 5' 5" tall, born and brought up in the U K looking for a matching groom, a professional. Ref: 1675

50. Chartered Financial Analyst, well employed, UK born, 33 years, 5' 2" tall, seeks UK educated professional groom. Ref: 1674

51. கொழும்பில் தொழில் புரியும் 23 வயது 5' 1" உயரமுள்ள CIMA பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1673

52. Top professional, in the UK since childhood, 35 years, 4' 9" tall, seeks a matching groom. Ref: 1672

53. In the UK since 1999, British Citizen, a Graduate and well employed, 26 years, 5' 4" tall, seeks a matching groom. Ref: 1671

54. யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் A/L படித்த 28 வயது, 5'3" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு, வெளிநாடுகளில் sponsorபண்ணக்கூடிய வரனை தேடுகின்றனர். Ref: 1670

55. இந்திய வம்ச, படித்து இந்தியாவில் வேலை செய்யும் 23 வயது 5'4" உயரமுள்ள தமிழ் மணப்பெண்ணுக்கு படித்த வரனை வெளிநாடுகளில் பார்க்கின்றனர். Ref: 1669

56. Canadian citizen, a graduate from Uni. of Toronto, well employed, 26 years old, 5' 3" tall, seeking a matching bride. Ref: 1668

பிரித்தானிய குடியுரிமையுடைய, யாழ் பல்கலைக் கழகத்தின் கணிதப் பட்டதாரியான 44 வயது, 5' 4" உயரமுள்ள சைவ போஜன விதவைப் பெண்ணுக்கு சைவபோஜன மணமகனைத் தேடுகிறார்கள்.. Ref:1667

57. கொழும்பில் வேலை செய்யும் 29 வயதுடைய 5' 6" உயரமுள்ள படித்த மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த மணமகனை தேடுகிறாகள் Ref:1666

58. In Canada since 1990, a canadian citizen, A Graduate, well employed, 28 years, 5' 1" tall seeking a suitable groom. Ref: 1665

59. A graduate, 28 years, 5' 4" tall, born in the U.K, seeking a matching groom. Ref: 1664

60. Sri Jayewardenepura Accountancy Graduate, 27 years, 5' 4" tall, well employed in Colombo, seeks a matching groom, abroad. Ref: 1663

61. இலங்கையில் வசிக்கும் A/L படித்த 23 வயது 5' 3 " உயரமுள்ள மணப்பெண்ணுக்கு நிரந்தர வதிவுடமை உள்ள தகுந்த வரனைத் EU நாடுகளில் தேடுகின்றனர் Ref: 1662

62. Professional, in USA on 5 year student visa, 32 years, 5' 3" tall, seeking a matching professional groom in Canada or USA Ref: 1660

63. British citizen, MSc (Hon) from one of the top universities, 34 years, 5' 3" tall, seeks a professional groom from the UK. Ref: 1659

64. கொழும்பில் தொழில் புரியும் CIMA கணக்கியல் படித்த 29 வயது, 5' 3" உயரமுடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. சாதி கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. Ref: 1658

65. Professional qualified bride working in Colombo, 27 years, 5' 3" tall, seeking a matching educated groom, a UK / USA citizen. *Ref: 1657*

66. In Canada since her 12 years, a Science Graduate and a teacher in a public school, 33 years, 5' 1" tall, seeks a matching groom. *Ref: 1656*

67. Educated and well employed in Colombo, and also a carnatic-music teacher, 32 years, 5' 1" tall, seeks a suitable vegetarian groom, preferably in Canada or Australia. *Ref: 1655*

68. 8 வருடங்களாக இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி 27 வயது 5'7", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிடவுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1654

69. Canadian citizen, in Canada since 1991, 30 years, 5' 6" tall, Maths Graduate, well employed seeking a matching groom. *Ref: 1653*

70. கனடா பிரஜையும் 37 வயது 5'6" தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1652*

71. கனடா பிரஜையும் 32 வயது 5'7" விவாகரத்து செய்த படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். *Ref: 1651*

72. Canadian citizen, over there since 1996, Engineering Graduate, 29 years, 5' 6" tall, seeking a matching groom in Canada. Ref: 1650

73. Working in Colombo, ICMA Final, 24 years, 5' 1", looking for a well educated, matching groom in Sri Lanka or abroad. Ref: 1647

74. கனடாவிற்குப் 10 வயதில் வந்த 24 வயது 5' 3" உயரமுள்ள பொறியியலாளராகப் பணிபுரியும் மணப்பெண்ணுக்கு கனடா அமெரிக்காவில் படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் Ref: 1645

75. In USA on HI Work visa since 2000, 31 years, 5' 2" tall, a Master's degree holder seeking a matching groom in USA. Ref: 1642

76. கொழும்பில் வசிக்கும் யாழ் பல்கலைக்கழக பட்டதாரி 32 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் வெளிநாட்டில் தகுந்த வரனைத் தேடுகின்றனர. Ref: 1640

77. UK இல் சிறுவயதில் இருந்து வசிக்கும UK பட்டதாரி 23 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகின்றார் Ref: 1639

78. Jaffna Uni graduate, on student visa in the UK doing Masters, 33 years 5' 2" tall, seeks an educated groom with permanent residency. Ref: 1638

79. இந்தியாவில் 11 வருடங்களாக வசிக்கும் பட்டதாரி 27 வயது 5' 6" உயரமுள்ள மணமகளுக்கு UK இல் வதிவிட உரிமையுள்ள தகுந்த வரனைத் தேடுகின்றனர் Ref: 1637

80. In Sweden on student-visa, doing PHD, 34 years, 5' 5" tall, is seeking a matching professional groom. Ref: 1636

81. MBBS, Sri Lanka, working in Kandy hospital, 29 years, 5' 7", looking for a matching groom abroad. Ref: 1635


82. Netherlands citizen (there since 1991), Physiotherapist, 26 years, 5' 2", looking for suitable groom in Europe. Ref: 1632

83. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராக வேலை செய்யும் 31 வயது 5'3", மணப் பெண்ணுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர்.. Ref: 1629

84. UK born, accountancy degree holder, 25 years, 5' 4" tall, well employed, seeking a matching groom, those with no permanency, will also be considered. Ref: 1626

# தமிழில் எழுதலாம் வாருங்கள்... வலையில் பரப்பலாம் வாருங்கள்...

## ஹாய் நலமா?




இந்த வாரம் வலைப்பதிவுகளில் நாம் வலைப் பதிவரான டாக்டர் எம் . கே.முருகானந்தன் அவர்கள் உருவாக்கியுள்ள வலைப்பதிவுகள் பற்றி பார்ப்போம்.

டாக்டர் திரு எம் . கே முருகானந்தன் அவர்கள் குடும்ப வைத்தியத்துறையில் டிப்பிளோமா பட்டம் பெற்றவர். அவர்களை ஒரு வைத்தியராக யாழ்ப்பாணம் வடமராட்சி வாழ் மக்களுக்கு நன்கு அறிவர்.ஒரு மருத்துவர் என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த இலக்கிய கலாரசிகர் படைப்பாளி என்ற வகையில் எழுத்துத்துறையிலும் தடம் பதித்துள்ளார். "தாயாகப்போகும் உங்களுக்கு " என்ற கர்பிணிகளுக்கான மருத்துவ ஆலோசனை நூல் பெரும் வரவேற்ப்பைப் பெற்றதுடன் சாகித்திய விருதினையும் பெற்றது.

அதுமட்டுமல்லாது எயிட்ஸ் நோய் பற்றிய அறிமுகநூலையும், நீரிழிவு இதயநோய் போன்றவற்றைப்பற்றிய நூல்களையும் ஓர் எழுத்தாளராகப்படைத்துள்ளார்.மல்லிகைப்பந்தல் வெளியீடாக வந்த "ஒரு டொக்டரின் டயரியிலிருந்து" என்ற ஆக்கம் பலராலும் விரும்பி வாசிக்கப்பட்ட பத்தி எழுத்து நூலாகும். காலவோட்டத்தின் பிடியுள் சிக்குண்டு கொழும்பை தற்காலிக வதிவிடமாய் கொண்டு தனது வைத்தியத் தொழிலை மேற்கொள்ளும் இவர் இப்போது அகிலமெங்கும் பரந்து வாழும் தமிழ் நெஞ்சங்களின் வீடுகளுக்கும் இணையம் வாயிலாகச்சென்று இலவசமாக நோய் குணமடைய வழி சொல்கிறார். ஆமாம் உண்மை என்னவெனில் இவர் ஓர் வபைப்பதிவு வைத்தியரும் கூட !

வலைப்பதிவுகளின் மூலமாக உலகெங்கும் உலா வரத்தொடங்கியிருக்கும் டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்கள் ஹாய் நலமா? என்ற பெயரில் தனது வலைப்பதிவை வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறார். அவரின் வலைப்பதிவில் தன்னைப் பற்றி இவ்வாறு "அறிமுகம் செய்கிறார். நான் ஒரு குடும்ப வைத்தியன். ஒரு எழுத்தாளனும் கூட. நலவியல் துறை எழுத்துக்களே முதற் தேர்வான போதும் இலக்கிய விமர்சனம், சிறுகதை, சினிமா போன்றவற்றிலும் ஈடுபாடுண்டு " என தன்னை அறிமுகம் செய்யும் இவர் எளிதில் புரிந்து வாசிக்கக்கூடிய சொல் பிரயோகங்கள்,வசன அமைப்புக்கள் என்பவற்றை தனது வலைப்பதிவுகளில் கையாள்வதால் வாசகர்கள் இலகுவாக அவரது பதிவினையும் பொருளடக்கத்தையும் பெற்றுவிடுகின்றனர்.தாயகத்திலிருந்து வலைப்பதிவுலகில் குடும்ப வைத்தியம் மற்றும் நலவியல் துறை சம்பந்தமாக எழுதி வருபவரென்றால் அது திரு எம்.கே.முருகானந்தன் அவர்களையே சாரும். கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எழுதிவரும் இவர் மருத்துவம் சார்ந்த பதிவுகளுடன் நின்றுவிடாது பல காத்திரமான இலக்கியப் படைப்புக்களையும் தனது இன்னோர் வலைப்பூவில் எழுதிவருகிறார்.

### வலைப்பதிவுகள் - அறிமுகம்

எழுதுவது: யாழ்பாடி

இவரது இன்னொரு வலைப்பதிவான "மறந்து போகாத சில" என்ற வலைப்பதிவில் இலக்கியம், புத்தக அறிமுகங்கள் எழுத்தாளர்கள் அறிமுகம், தாயக எழுத்தாளர்களது நூல்கள் அறிமுகம், கலந்துரையாடல்கள், அனுபவங்கள், திரைப்படவிமர்சனங்கள் என பல பதிவுகளை எழுதி வருகிறார்.

இவரது வலைப்பதிவுகளை நீங்கள் தரிசிக்க விரும்பின் அவரது ஹாய் நலமா? வலைப்பூவின் முகவரி:- http://hainallama.blogspot.com/

மறந்து போகாத சில வலைப்பூவின் முகவரி:-
http://suvaithacinema.blogspot.com/
முகவரிகளுக்குச் செல்லுங்கள்

வாசகர்களே உங்கள் வலைப்பதிவுகளையோ அல்லது நீங்கள் வாசித்துச்சுவைத்த வலைப் பதிவுகளை அறிமுகப்படுத்த விரும்பின் blogs@orupaper.com என்ற இணைய முகவரிக்கு மின்னஞ்சலைத் தட்டி விடுங்கள்.அவை இங்கே அறிமுகப்படுத்தப்படும்

## அழுவோமா? எழுவோம்.

உன் தமிழர் எம் தலைவிதி
இது வென்று
அழும் கதை மாற்றுவோம்.
தமிழர் நாம் யாரென்று
இத் தரணிக்கு
காட்டுவோம்.

அடிமையின் தளையது
அறுபடும் நாளின்று நம்
வசம். எழு எழு
எழு என்று எண் திசை
எழுப்புவோம்.

எல்லோரும் ஒன்றாகி
எம் தாய்மடி தாங்குவோம்.
உடையுது உடையுது
அடிமையின் விலங்கென்று
உரத்தே ஒலிப்போம்.

அது பொடி படும்
படி வர உரமாகி
உழைப்போம்.
விடுதலை பெறும்வரை
விழிகளில் நெருப்பேந்தி
விழித்தே இருப்போம.

தமிழீழக் கொடியேற
தெரு தனில் இறங்கியும்
அறப்போர் தொடுப்போம்.
எங்கள் வீரர்கள்
ஆடிடும் போர் முகம்
வென்றிட
தோளோடு தோள்
கொடுப்போம்.

அவர் உயிர்விடும்
வேளையில் நினைந்திட்ட
தமிழீழம் இந்நாளில்
சமைப்போம்.

தமிழகம் எழும் நிலை
கண்டு புது நம்பிக்கை
கொள்ளுவோம்.

அவர் நெஞ்சினில் எரியும்
எங்களின் உணர்வுக்கு
எப்போதும்
எண்ணையாய் இருப்போம்.
கைகளில் எடுத்திட்ட
கடமையை கண்டு அவர்
கரங்களைப் பற்றுவோம்.

எமக்காய் உயரும்
அக் கரங்களைத்
தொட்டு நம் கண்களில்
ஒற்றுவோம்.
நாம் இன்னும் கற்பனை
வீட்டினில் நித்திரை
செய்திடும் கனவினை
கலைப்போம்.

நித்தமும் ஒருவரில்
குற்றமே கண்டிடும்
பழக்கத்தை மாற்றுவோம்
வெறுஞ் சொல்லினை
நிறுத்தி செயலினை
தொடருவோம்.

குப்பையாய் போன
வைத்து நாம் காத்திடும்
கொள்கைகள் துறப்போம்.
எங்கள் கொற்றவை
பற்றிடும் கொள்கையை
நாங்களும் கற்றிடத்
துணிவோம்.

தினம் களத்திடை
வீழ்ந்திடும் தாயவள்
புதல்வரை யாவரும்
நினைப்போம். தாயகம்
காத்திட சாவினை
அணைத்தவர் சாதனை
பாடுவோம்.
எம் சந்ததி வாழ்ந்திட
தம்மையே தந்தவர்
தெய்வங்கள்
போற்றுவோம்.

அந்தக் கல்லறை
தெய்வங்கள் கால்த் தடம்
பற்றி நாம் நேர் நடப்போம்.
காவிய நாயகன் காட்டிடும்
திசையெலாம்
கால்களைப் பதிப்போம்.

எமைத் தாங்கிய தாயவள்
கை தொழும்
அடியவர் ஆகுவோம்.
அவள் ஆனந்த சுதந்திரம்
அடைந்திடும் நாளினை
நாமெலாம் அமைப்போம்.

கொடியவர் முகத்திரை
முழுமையாய் கிழித்திடும்
உறுதியை எடுப்போம்.
தடைகளை தக(ள)ர்த்திட
தலைமுறை காத்திட
தினசரி உழைப்போம்.

கொடுமையின் முடிவுரை
எழுதிடும் வல்லமை
கை வர பணம் வாரி
வழங்குவோம்.

காட்டிடை மழையிடை
வாட்டிடும் பசியினால்
உயிர் மாய்த்திடும்
உறவினைத் தோள்களில்
தாங்குவோம். புதுச்
சரித்திரம் படைத்திடும்
புலிகளின் கரங்களை
புலப் பலத்துடன்
பற்றுவோம்.

எமைச் சுமந்தவள்
வலி பெறும் நாளிகை
நகர்ந்திட நாளை
சுகப் பிரசவம்
காணுவோம்.

எங்கள் சுதந்திர
தேவியின்
விலங்குகள் பொடிபட
கலங்கரையாகுவோம்.

**- நந்தினி**

## மனதில்.....

பார்வையில் பல
கதைகள் நான்
கிறுக்கிடவே உன்
வேதனையில் என் மனம்
நொருங்கிடவே...
நினைத்தேனா? இவை
நடக்கும் என ???

நெருங்கும் போது
சோகம் தெரியவில்லை....
நொருங்கும் போதே
சோகத்தின் வலி
உணர்ந்தேன்!!! நீ
இருக்கும் போது
உன்னை புரியவில்லை......
பெண்ணே நீ சென்றாய்..
அன்றே நான் என்னை
இழந்தேன்.........

மீட்டிப் பார்க்கிறேன்
என்னுடைய
நாளேடுகளை அங்கே
உன் பெயர் தவிர வேறு
ஏதும் என் கண்ணுக்கு
அகப்படவில்லையடி....
காதலிக்கும் முன்ஒரு
கனம் யோசித்து
இருந்தால்.. கதலித்த பின்
ஏன் இந்த கலக்கம்.....?

கண்ணை விரும்பினேன்...
உன்னை எனக்கு காட்டி
கொடுத்தால்....
என் உயிரை
விரும்பினேன்....
உன்னோடு வாழப்
போகிறதே என்பதனால்.....

என்னையே
விரும்பினேன்.....நீ
வந்த பின் என்னில்
ஏற்பட்ட மாற்றத்தால்......
இவை அனைத்தும்
பொய்யானால்
என்னையே நான் இழக்க
நேரிடலாம்....பெண்ணே!!
வந்து விடு பெண்ணே
என்னிடமே வந்து விடு..!!!

**- தயா**



# Nallur Kumaran Imports

வீணை, மிருதங்கம், தபேலா, சுருதி box போன்ற கர்நாடக இசைக்கருவிகள் இந்தியா, தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து தருவிக்கப்படும்

கோவில் பொருட்கள் Fancy Jewelrey & Gift Items ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கெள்ளலாம்

சாறிBlouses & Dance Costumes தைத்துப் பெற்றுக்கொள்ளலாம்

**Head Office**
1025, London Road
THRONTON HEATH
SURREY CR7 6JF
Tel : 020 8684 1026

**Branch**
21 RUE EDGARD QUINET
93300 AUBERVILLIERS
FRANCE
Tel : 0044 79607 61606



# அறுவைப் பக்கம்

## விளையாட்டோ விளையாட்டு!



எனக்கும் இந்த விளையாட்டுக்கும் என்னிக்குமே ஏழாம் பொருத்தம் தாங்க. ஆனா மனசு நெறையா வெளையாடனும் கோப்பைய வாங்கனும் வாங்குறப்போ அமுதா டீச்சர் பொண்ணு என்னைய ஆச்சரியமா பார்க்கனும்ன்னு பல கனவுகளை சுமந்துகிட்டு அலைஞ்சேன்.

சரி எந்த வெளையாட்டு நமக்கு பொருத்தமா இருக்கும்னு ஆராய்ச்சி பண்ணுறப்போ அல்லாதுக்கு பிட்னெஸ் தான் மாப்ளே தேவை! மொதல ஓட்டப்பந்தயத்திலே நம்ம கணக்கை ஆரம்பிப்போன்னு நம்ம தோஸ்த் ஜார்ஜ் சொன்னதை நம்பி ஓடரதுக்கு வாத்தியார்கிடே பேரைக் கொடுத்திட்டேன்.

அன்னிக்கு பிடிச்சது சனி. ஓடரதுக்கு பயிற்சின்னு சொல்லி வர சொன்னாரு வெளையாட்டு வாத்தியார்னு சந்தோசமா போனோம். ஆரம்பத்திலே Ground டை சுத்தி ஓடி வரணும். எங்க ஸ்கூல் Ground சும்மா ஏக்கரா கணக்கா கெடக்கு.

மொதோ ரெண்டு ரவுண்டு என்னமோ சந்தோசமாதேன் ஓடுனேன். சரி நிறுத்த சொல்லி கொஞ்ச நேரம் கழிச்சு ஓட சொல்லுவாங்கன்னு பார்த்தா ரெண்டு வாத்திக ஆளுக்கொரு மூலையிலே குச்சியோட நின்னுகிட்டு ஓடுங்கடா ஓடுங்கடான்னு வெரட்டிகிட்டு இருக்கனுவ.

எவனாவது கொஞ்சம் ஸ்லோவா ஓடுர மாதிரி இருந்தா பின்னாடி ரெண்டு இழுப்பு வேற. எனக்கு நாக்கு தள்ளுது, நம்ம பய ஜார்ஜ் என்னடான்னா சும்மா பெட்ரோலைக் குடிச்சுபுட்டு பின்னாடி பத்த வச்ச மாதிரி 'பேய்' கணக்கா ஓடிகிட்டு இருக்கான்.

அடப்பாவி மக்கா இப்படி கொண்டாந்து மாட்டி விட்டுட்டியேடா நாயேன்னு நெனச்சுகிட்டு விதியேன்னு நானும் கொஞ்சம் சமாளிச்சு ஓடி ஓடி அப்படியே Ground டை விட்டு ஓடி வந்தவன்தான். இனி Ground பக்கம் தல வெக்கிறதில்லைன்னு கொள்கை பிடிப்போட சுத்திகிட்டு இருந்தேன்.

இருந்தாலும் இந்த வெளையாட்டு தாகம் அடிமனசிலே warmingup பண்ணிகிட்டே இருந்துச்சு.

சரி நாம தான் வெளையாடரது இல்லை அட்லீஸ்ட் எப்படி வெளையாடறாங்கன்னு பார்க்கவாச்சும் செய்யலாம்னு அப்படியாக்கா டிவி ய திருப்புனா ஆஹா வாலிபாலு பேஸ்கட் பால். டென்னிஸ் , சட்டில் கார்க்குன்னு போட்டு தாக்கியெடுக்குராக. அதுலயும் இந்த அம்மணிகள் ஆடுர ஆட்டம் இருக்கே அதையப் பார்க்குறதுக்கு கொள்ளேன்னு திருவிழாக்கூட்டம் தான் போங்க.

இந்த பொண்ணுங்க ஆடுற டென்னிஸ் இருக்கே அதுக்கு umpireரா இருக்குரதுக்கு ரொம்ப அபார திறமையும் நெசமாலுமே சாமியார்த்தனமும் நெறையா வேணுங்க.

என்னா கஷ்டம்! என்னா கஷ்டம் ! இவங்க வெளையாடி எதிராளி சர்வீஸை ப்ரேக் பண்றாங்களோ இல்லையோ பாக்குற நம்ம மனசை போட்டுருக்குற ட்ரெஸ்ஸால கண்டிப்பா ப்ரேக் பண்ணிடுவாங்க. கொஞ்ச காலத்துக்கு முந்தி இந்த டென்னிஸ் வெளையாடுற அம்மணிக எல்லாம் மொழங்காலுக்கு ஒரு ரெண்டு இஞ்ச் மேலே வரை ஸ்கர்ட்டு போட்டுகிட்டு வெளையாடிட்டு இருந்தாங்க. அப்படியே அது இஞ்ச் பை இஞ்சா உசந்து போயி இப்போ இடுப்புக்கு ரெண்டு இஞ்சுக்கு கீழே வரை ட்ரெஸ் போட்டா போதும்னு ஆகிபோச்சு. இப்படியெல்லாம் பண்ணுனா அப்புறம் எப்படீங்க ஆட்டத்தை கவனிக்கிறது ?

என்னாடா இது பாண்டிக்கு வந்த சோதனைன்னு அப்படியேக்கா கவனைத்தை டென்னிஸ்ல இருந்து வாலிபால் பக்கம் திருப்புனா ஆஹா பீச் வாலிபால்னு போட்டு தாக்கி யெடுக்குராங்க. Ball ஐ இல்லீங்கோ நம்ம மனசைதான். நீச்சல் உடையிலே நீச்சல் தான் அடிக்கனும்னு ஏதாச்சும் ரூல்ஸ் இருக்கா என்ன? இவுக அப்படியே பீச்சோரம் காத்தோட்டமா வெளையாடி கிட்டும் இருக்காக. ஆம்பிளைங்க எல்லாம் ஒரு பத்து இருவது வருசமா இன்னும் அதே மாதிரி தானே ப்ரெஸ் போட்டுகிட்டு ஆடிகிட்டு இருக்காங்க, இந்த பொண்ணுகளுக்கு மட்டும் எப்படீங்க சும்மா நாளொரு மேனியும் பொழுதொரு 'மினி ' யுமா ஆகிகிட்டு இருக்கு அவுக டெரெஸ்ஸு?


வெளையாடி வெளையாடி இவுக உடம்பு இளைக்குதோ இல்லையோ இவுங்களை பார்த்து பார்த்து பலபேரு உடம்பு இளைக்காம இருந்த சரிதான்

ம்ம்ம் ஆனாலும் வெளையாட்டை விட ரசிக்கிரதுக்கு பலது இருக்குங்க வெளையாட்டுலே

இப்போல்லாம் எங்கம்மா இவனுக்கு வெளையாட்டுன்னா உசுரு! டென்னிஸ் மேட்சுன்னா டிவி வுட்டு நகர மாட்டீங்கரான்ன்னு பெருமை பொங்க பக்கத்து வூட்டுகாரங்க கிட்டே சொல்லிகிட்டு இருக்கரதை கேட்கறப்போ எனக்கு ஆனந்தக் கண்ணீரா வருதுங்க

*- ஜொள்ளுப்பாண்டி*

## படத்துக்கு ஒரு கவிதை!



கவலைகள் உன்னை
நோகடிக்கும் பொழுது
உன்விழி ஓரம் ஒரு துளி நீர்
சிந்தும் பொழுது
என்னிடம் சொல்...
நான் உனக்காக அங்கு
வருவேன்!
காரணம் நான் டிஸ்யூ
விற்கிறேன்
ஒன்று வாங்கினால் ஒன்று
இலவசம்!



ஒரு மாலை வேளை...
ரெயில்வே ஸ்டேசன்...
நான் ரெயிலின் உள்ளே...!
நீ வெளியே...!!
நம் இருவர் கண்களும் ஒரே
நேரத்தில் சந்தித்தபோது...
உன் முகத்தில் எத்தனை
உற்சாகம். அப்போதுதான்...
நீ சொன்னாய்...
அம்மா தாயே தர்மம்
போடுங்கம்மா...



மாட்டுக்கும் மனிசனுக்கும்
வித்தியாசம் சின்னதுதான்
மாடு கழுத்திலை
பெல்லு
மனிசன் கழுத்திலை
செல்லு
பெல்லு கலகல என
சிணுங்கும்
செல்லு கரகர என
சினக்கும்

## காரியாலயத்தில் கணக்கு விட...



வேலைத்தளங்களில் மேலதிகாரிக்கு டிமிக்கி விடுவதற்கும் நீங்கள் தான் அலுவலகத்துக்காக ஊணுறக்கமின்றி உழைக்கின்றீர்கள் என்றும் காட்டுவதற்குச் சில ஆலோசனைகள்

கையில் எப்போதுமே எதாவது டாக்குமெண்டையோ இல்லது கம்பெனி பைலையோ தூக்கிக் கொண்டு அலைவது அப்படியே நீங்கள் கம்பெனிக்கு மாஞ்சு மாஞ்சு வேலைப்பார்ப்பது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கும்.

வெறும் கையோடு உங்கள் மேலதிகாரியின் டேபிளிற்கு முன் நடந்து சென்றால் அவர் நீங்கள் தம் அடிக்கவோ அல்லது கேண்டீனுக்கோ போகிறீர்கள். என்று நினைத்துக் கொள்வார். தவறி அன்றைய நியூஸ் பேப்பரைக் கொண்டு அலையாதீர்கள். அப்படி அலைந்தால் நீங்கள் டாய்லெட்டை நோக்கி செல்வதாக உங்கள் பாஸ் நினைத்துக் கொள்வார்.ஆகவே டாக்குமெண்ட் அல்லது கம்பெனி லோகோ போட்ட பைல் நல்ல அபிப்ராயத்துக்கு 100% உத்தரவாதம் தரும்.

முகத்தை எப்போதுமே சீரியஸாக வைத்துக் கொண்டு கணனி முன் உட்கார்ந்து வலைப்பதிவோ அல்லது ஒரு பேப்பர் ரையோ ரசித்து வாசிக்கலாம். ஆனால் முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டே வாசியுங்கள். சாத்திரியின் பகிடியாயிருந்தால்கூட மறந்தும் சிரித்து விடாதீர்கள். பிறகு அரோகரா தான். களவு பிடிப்டும். அல்லது உங்களுடைய உடல் நலம் குறித்த சந்தேகம் எழும்

உங்கள் அலுவலக மேஜையை எப்போதும் குப்பையாக வைத்திருப்பதால் நீங்கள் நிறைய வேலை பார்க்கிறீர்கள் என்ற தோரணையை ஏற்படுத்தும். பிரிண்ட் அவுட்டை எக்கசக்கமாக எடுத்து தள்ளி மேஜை நிறைய நிரப்பி வைத்துக் கொள்ளுங்கள்

Boss உங்களைப் பார்க்கும் போது எல்லாம் நீங்கள் பொறுமையற்றவராக, ஏதோ பிரச்சனையில் சிக்கி தவிப்பது போல் பாவலா காட்டுங்கள். தலையை சொறியுங்கள். உஸ் உஸ் என்று சத்தம் போடுங்கள். மெதுவான குரலில் ஏதாவது முணுமுணுங்கள். Boss காதுக்கு உங்கள் குரல் எட்டுமானால் மெதுவாக 'shit என்று அடிக்கடி கூறுங்கள்.

எந்த காலத்திலும் Boss வீட்டுக்கு கிளம்புவதற்கு முன் நீங்கள் கிளம்பி விடாதீர்கள். இருக்கவே இருக்கு MSN. தாராளமாகக் கடலை போடுங்கள். ஒரு வேளை நீங்கள் கட்டாயம் Boss இருக்கும் போதே வெளியேற வேண்டுமென்றால் உங்கள் Office Bagஐ உங்கள் மேசையிலேயே Boss கண்ணில் படும்படு விட்டுவிட்டு செல்லுங்கள். அது நீங்கள் இன்னும் Office ல் இருக்கிறீர்கள் என்ற தோற்றத்தை உருவாக்கும். மறுநாள் Boss ஆ Office ற்கு வரும் முன் நீங்கள் வந்து விடுங்கள். இல்லையேல் குட்டு வெளிப்பட்டுவிடும்.

நல்ல பெரிய பெரிய கம்பியூட்டர் புத்தகங்களை உங்கள் மேஜை குப்பைகளுக்கு இடையில் திறந்து வைத்து அவ்வப்போது அதில் ஏதோ தேடுவது போல பாவ்லா காட்டுங்கள். புத்தகத்தை எப்போதும் மூட வேண்டாம். உங்களைச் சந்திக்க வெளியாட்கள் வந்தால் கூடப் பெரிய பெரிய புத்தகம் எல்லாம் படிக்கிறார். பெரிய அறிவாளியாயிருப்பார் போலும் என எண்ணி உங்கள் மீது மதிப்புக் கூடும்.

ஆனால் அவரும் இந்தக் கட்டுரையைப் பாத்திருந்தால் அடடா இவனும் ஒரு பேப்பர் பார்ப்பான் போலிருக்கே என்று நினைத்துக் கொள்வார்

*- சுப்பன்*

**எனக்கு ஒரு சந்தேகம்... கணக்கியல் தெரிந்தவர்கள் தீர்ப்பீர்களா?**

டெபிட் கார்டிலை செலவழிச்சால் எங்கடை எக்கவுண்டிலை டெபிட் பண்ணுகிறாம்.

அப்ப கிறடிட் காட்டிலை செலவழிச்சால் கிறடிட் எல்லோ பண்ண வேணும்,

என் அப்படிச் செய்யினமில்லை?

நடிகர் மோகன் பேக்கரி கடைக்குப் போய் 'கேக்' எப்படி கேட்பார்...

மலையோரம் வீசும் காத்து,
மனதோடு பாடும் பாட்டு, கேக்கு தா, கேக்கு தா.....

வேகமான
தொலைத்தொடர்புக்கு
1.டெலி போன்
2.டெலி விஷன்
3.Tell to Woman

*- கடிக்கப் பிறந்தோர் சங்கம்*

## சீமான், பாரதிராஜா அமீர் சேரன் வடிவேலு......

# என்ன கைமாறு செய்யப் போகின்றோம்?...

1983 தமிழர் மீதான இனப்படுகொலை அவலமும், துயரும், கண்ணீரும், இழப்பும், நெருப்பும் என ஈழத் தமிழர் ஆற்றொணாக் கொடுமைப்பட்ட காலம். போக்கிடம் எதுவென்று தெரியாமல் புழுங்கிக் கிடந்தோம். அப்போதுதான் இதோ நாம் இருக்கிறோம். என்று தமிழ்நாடு எம்மை அணைத்தது.

எம் துயரைத் தம்பங்கில் போட்டது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களும் போட்டி போட்டு ஈழத்தமிழரை நெஞ்சார அணைத்தனர். மேலும் பலம் சேர்க்க இந்திய மத்திய அரசும் அதன் தலைவர் இந்திரா காந்தி அம்மையாரும் ஈழத்தமிழர் மீது பரிவுடன் பங்கும் செய்தனர். அதேகாலம் திரும்ப அல்லது திரும்பி வந்துவிட்டது பற்பலமாறுதல்களுடன் ஒன்று மாத்திரம் உரமாய் ஓர்மமாய் அப்படியே திரும்பியிருக்கிறது. அது தமிழ்நாட்டு மக்களின் உணர்வு. அவர்கள் பேரெழுச்சியுடன் நிற்கிறார்கள். அவர்களை அண்டிய அரசியலாளர்களும், தமிழ்த்திரைக்கலைஞர்களும், ஏனைய படைப்பாளிகளும், தமிழ் நாட்டு மக்களின் எழுச்சியுடன் சங்கமமாகிறார்கள்.

மற்றும்படி இந்திய மத்திய அரசை எடுத்துக் கொண்டால் ஈழத்தமிழரை எதிர்த்தபடி அது நிற்கிறது. ஈழத்தமிழரைக் கொல்ல ஆயதங்களையும், ஏனைய உதவிகளையும் செய்துவருகின்றது. எம்.ஜி.ஆர் காலத்தைய தமிழ்நாட்டை இப்போது ஏக்கத்துடன் பார்க்க வேண்டியிருக்கிறது. இப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி அரசியல் தந்திரம் புரிகிறார். தமிழ் நாட்டு மக்களின் எழுச்சியை வழி தவறிய வாய்க்காலில் விடுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அம்மையார் பற்றி என்ன சொல்ல? பார்ப்பணிய பாம்புப் புத்தியைக் காட்டகிறார்.

அது பரவாயில்லை அது பாம்பென்று தெரிகிறது. ஆனால் அது கயிறா பாம்பா எனத் தெரியாதிருப்பது கலைஞர் இடம் தான். தமிழர்களின் தலைவர் என்ற பெயர் வரக்கூடிய இறுதிச் சந்தர்ப்பத்தையும் கலைஞர் கைவிட்டுவிட்டார். கல்லக்குடிப் போராட்டம் அது இது என்ற கலைஞரின் எழுச்சிப் போராட்டம்யாவும், வரலாற்றில் மறைந்துவிடும். கலைஞர் பற்றி வரலாறு இப்படித்தான் குறிக்கும். 'தனது குடும்பத்திற்காக தமிழை, தமிழரைக் காட்டிக் கொடுத்த கயவாளி கலைஞர்'.

இவற்றிடையே வேறொரு வேதனை இதுதான் ஈழத்தமிழர்களுக்காக உரத்துப் பேசுகிற, உரத்துச் சிந்திக்கிற தமிழின உணர்வாளர் வை.கோ அவர்கள் இப்போது ஓர் அரசியல் அநாதைபோல் தவிக்கிறார். ஈழத்தமிழர் பக்கம் அவர் நிற்கிறார் சரி. தமிழ்நாட்டு அரசியலில் எந்தப் பக்கம் ஜெயலலிதா, கருணாநிதி இருவரினதும் பழிவாங்கும் அரசியலில் அதிகம் பாதிக் கப்படுபவர் வை.கோ தான். வேறொன்று குறித்து இப்போது நாம் சிந்திக்க வேண்டும். புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் நாம் என்ன செய்யப் போகின்றோம்? நாங்கள் நிறுவன மயப் படுத்தப்பட்ட ஒரு சக்தியாக எங்களை உருவாக்கவில்லை. எப்போது நாம் நிறுவன மயப்படுத்தப் படுகின்றோமோ அப்போதுதான் நம் சக்தி என்னவென்று உலகிற்குத் தெரியும்.

இப்போது பாருங்கள். அஜித் என்கிற தமிழரல்லாத மலையாளப் பார்ப்பணிய தமிழ்த்திரை நடிகர் போகிற பேக்கில் ஈழத்தமிழர் போராட்டத்தை கொச்சைப் படுத்தி விட்டுப் போகிறார். இப்போது மறுப்புவிட்டாலும், அதை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. அது வியாபாரத் தந்திரம் ஏனென்றால் சமீபத்தில் அஜித் என்கிற நடிகரின் பேட்டி ஒன்றை வாசித்தேன். அப்பேட்டியில் 'ஈழத்தமிழரின் பிரச்சனை பற்றிய உங்கள் கருத்து என்ன? என்ற கேள்விக்கு அவர் விளக்கமாகத் தெளிவாகப் பதில் சொல்கிறார். 'அது அவர்களின் பிரச்சனை எங்களுக்கு அதில் சம்பந்தமில்லை. என்றாலும் ஒருவிதத்தில் சம்பந்தம் உண்டு. அவர்கள் எங்கள் நாட்டுத் தலைவரை (ராஜீவ் காந்தி) கொன்றிருக்கிறார்கள். அந்தவகையில் அவர்கள் பயங்கரவாதிகள்'.

இது அஜித்தின் கூற்று. இந்த அஜித்தை வைத்துத் தான் ஈழத் தமிழராகிய இலண்டன் கருணா சுமார் 17 கோடி இந்திய ரூபாயில் 'ஏகன்' என்ற திரைப்படத்தைத் தயாரித்திருக்கிறார். அதைப் புலம்பெயர் தமிழரிடம் காண்பித்து காசு ஈட்ட முனைகிறார். அதாவது அஜித்துக்கு ஈழத்தமிழர் பயங்கர வாதிகள் ஆனால் அந்தப் பயங்கர வாதிகளின் பணம் தேவைப்படுகிறது. ஈழத்தமிழர் நாம் உண்மையில் இழிச்சவாயர். எவனெவனோ வந்து ஏறி மிதித்து விட்டுப் போக, காறித் துப்பி விட்டுப் போக, உழக்கி நசித்து விட்டுப் போக நாம் அவர்கள் கால்களைப் பற்றியபடி இருப்போம். நாங்கள் திரண்டெழ வேண்டாமா? வீறு கொண்டெழுந்து இவர்களை மிதிக்க வேண்டாமா? எனக்கு சண்முகம் சிவலிங்கம் எழுதிய கவிதையின் சிலவரிகள் தான் ஞாபகம் வருகிறது.

'எங்கள் ஆணுடம்பு ஏன் எழுவதில்லை.
எங்கள் யோனிகளில் ஏன் அரிப்பு குதிர்வதில்லை'


எங்களுக்கு மானம், ரோசம் என்ற ஏன் ஒன்றும் வரவில்லை. செக்கு மாடுகளைப் போல, செத்த பிணங்களைப் போல, உணர்வொன்ற ஏதும் இல்லாமல் வீணே உழல்கின்றோம். நாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இவர்கள் தரவளிகளை என்ன செய்யப் போகின்றோம். கமலஹாசன், ரஜனிகாந் போன்றோருக்கும் இது பொருந்தும். ஈழத் தமிழர்போராட்டம் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன? இதைத்தெளிவாக முன் வைத்துவிட்டு உங்கள்திரைப் படங்களை புலம்பெயர் தேசத்தில் வியாபாரத்திற்கு விடுங்கள். மீதியை நாங்கள் பார்க்கின்றோம். எங்களுடைய உழைப்பில் ஒரு பங்கு உங்களுக்கு வேண்டும். ஆனால் எங்களுடைய துயரில் நீங்களும் பங்கு கொள்ள மாட்டீர்கள். அப்படித்தானே இது எந்த வகையில் நியாயம்?.

மறுபுறத்தில் சீமான், பாரதிராஜா, அமீர், சேரன், வடிவேல், செல்வமணி, ராஜேந்தர், சத்தியராஜ், ஜீவா, பாலா திரைக் கலைஞர்களுக்கு நாம் என்ன கைமாறு செய்யப் போகின்றோம்? ஈழத் தமிழர்களுக்காக இவர்கள் குரல் கொடுத்தார்களே, கதறி அழுதார்களே, கையெடுத்தும் கும்பிட்டார்களே. சீமான், அமீர் போன்றோர் சிறை கூடச் சென்றிருக்கிறார்களே !புலம்பெயர் தேசத்தில் தமது திரைப்படங்கள் நன்றாக ஓடவேண்டும் என்றா இவர்கள் அப்படிச் செய்தார்கள். இவர்கள் திரைப்படங்கள் பெரிதாக இங்கு வருவதுமில்லை. திரையரங்குகளில் ஓடவதுமில்லை. அப்படியிருக்கையில் இவர்கள் ஏன் இவ்வளவு உணர்வாக இருக்கிறார்கள். ஈழத்தமிழர்களுக்காக நடிகர் வடிவேல் தன் நாட்டு மக்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறாரே! எதற்காக? 'நாம் தமிழர்' என்கின்ற உணர்வுகளைத் தவிர வேறு என்ன அவர்களிடம் இருக்க முடியும்.

இந்த உணர்வுக் கொழுந்துகளுக்கு நாம் என்ன கைமாறு செய்யப் போகின்றோம்?. இப்போது ஈழத்தழர் இது குறித்தும் சிந்திக்க வேண்டும்.ஈழத்தமிழர்களாகிய எம்க்கு திரையில் இன்னொரு பரினாமத்தில் தெரிவார்கள் இல்லையா?

*- அய்யன்*

## விமர்சனம்: சேவல்




நடிப்பு: பரத், சிம்ரன், வடிவேலு, பூனம்
இயக்கம்: ஹரி
இசை: ஜி.வி.பிரகாஷ்
ஒளிப்பதிவு: ப்ரியன்

ஹரிக்கு என்ன ஒரு இதுவோ தெரியல.. அவருடய எல்லா படங்கள்லேயும் ஹீரோயின் அக்ரஹாரத்து பொண்ணாதான் வர்றா..ஆனா ஒரு அரத பழசான ஒரு கதையை வச்சிக்கிட்டு அவர் பாவம் என்னதான் பண்ணுவாரு.. சேவலா சுத்திகிட்டுருந்த பரத், பூனத்தை காதலிக்க ஆரம்பித்ததுமே திருந்த ஆரம்பிக்க, பூனம் பரத்தை காதலிக்கணும்னா அவருடய தாத்தா நிலத்தை எடுத்து வித்து குடிச்ச நிலத்தை திரும்பவும் மீட்டு என்னைக்கு அவருடய அப்பா கையில கொடுக்கிறாறோ அன்னைக்குதான் ஒரு நல்ல பதில தருவேன்னு சொல்லிட்டு போக..

சிம்ரனுக்கு ரத்த புற்றுநோய் வந்து குழந்தைக்கு பால் கூட கொடுக்க முடியாமல் போக, அங்கே அக்காவை பார்த்து கொள்ள போன பூனம் அக்கா குழந்தையை தன் குழந்தையாய் பார்த்து கொள்ள, சிம்ரனின் உடல்நிலை காரணமாய் அவரின் கணவனுக்கு இன்னொரு கல்யாணம் செய்ய முடிவு செய்ய, சிம்ரன் தனக்கு பதிலாய் தன் குழந்தையை பார்த்து கொள்வதற்கு தன் தங்கையையே தன் கணவனுக்கு கட்டி வைக்கிறார். திருமணத்திற்கு அப்புறம் தான் பரத்தை காதலிப்பது தெரிகிறது சிம்ரனுக்கு, அது தெரிந்தவுடன் ராத்திரியோடு ராத்திரியாய் பூனத்தின் காலில் விழுந்த போஸோடு இறக்கிறார்.இங்கே தமிழ் பண்பாடுபடி பூனத்துக்கும்,சிம்ரனின் கணவருக்கும் எந்தவித கில்மா நடப்பதாய் காட்டபடவில்லை. தமிழ் சினிமா விதியின்படி ஹிரோயின் கன்னி கழியாத பெண்ணாகவே இருக்க, வில்லன் செய்யும் சூழ்ச்சியால் பூனத்தின் கணவரும் இறந்து போய்விட, அவருக்கு வில்லன் சொல்லி மொட்டை அடித்து அழகு பார்த்து இருக்கிறார்கள்..

அக்ரஹாரம் என்ற ஓன்றே தற்பொது இருக்கிறதா? என்கிற கேள்வி எழும்புகிற நேரத்தில், விதவைக்கு தலை மழித்தல், போன்ற சடங்குகளை அவர்களே மறந்தும், அழித்துவிட்ட நிலையில், மற்றவர்கள் அதை ஞாபகமாய் வைத்து கொண்டு அக்ரஹாரத்து ஐயர் குடும்பத்தில் சொல்வது.. ரொம்பவும் காமெடி..இதற்கு லீடாக வில்லன் அழகான பெண் தனக்கு கிடைக்கவில்லை என்றால் அவளுக்கு அவர்க்ளின் குடும்பத்தின் மூலமாகவே மொட்டை அடிக்க வைத்துவிடுவாராம்..என்ன கொடுமையடா சாமி,

பூனம் மொட்டை அடித்தபின் "ஏலியன் நேஷன்" நாயகி போல் வருகிறார். அநேகமாய் கம்ப்யூட்டர் கிராபிக்ஸில் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நல்ல ஓர்க்..மொட்டை அடித்தால் அழகை கெடுப்பதாய் நினைத்து மொட்டை அடிக்கிறார்கள் ஆனால்,மொட்டையிலும் பூனம் அழகாய் இருக்கிறார்.

பிரகாஷ்குமாரின் இசை ஒன்றும் சொல்லும்படியாய் இல்லை, வழக்கம் போல் ப்ரியனின் கேமரா ஹரிக்கு ஒத்துழைத்து இருக்கிறது. வடிவேலுவின் ஒன்றிரண்டு காட்சிகளை தவிர சிரிக்கும்படியாய் ஒன்றுமில்லை.. வழக்கம் போல் டப்பு, டிப்பு என்று எகிறும் பரபர எடிட்டிங் என்று எல்லாமே வழக்கம் போல்..

படம் முழுவதும் எதிலுமே ஓட்டாத விஷயமாய் துண்டு, துண்டாய், ஹைதர் காலத்து விதவை பெண்ணுக்கு திருமணம், தலை மழித்தல், போன்ற விஷயங்களை வைத்து காலத்தோடு ஓட்டாடத விஷயங்களை பெரிய செண்டிமெண்டுகளாய் நம்பி படமெடுத்திருப்பதால் சேவல்.. மியாவ்..

*- கேபிள் சங்கர்*



## சினிமா

# புதுமை இயக்குனர் சிறீதரின் நினைவுகள்....!



சிறீதர் தமிழ் சினமா உலகில் மறக்கமுடியாத ஒரு பெயர்!.இந்த கவர்ச்சிகரமான பெயர் அந்தக் கால எத்தனை இளைஞர்களுக்கும்,இளைஞிகளுக்கும் வெறித் தனமான வேகத்தைத் தந்தது!.சொல்லப் போனால் மிகுந்த மோகத்தையும் தந்தது!.

1933-ல் பிறந்த இவர் 1954 முதல் 1991 வரை உள்ள 35 ஆண்டுக் காலம் திரையுலகில் இருந்தார்.இவர் கோலச்சிய காலம் சுமார் 35 ஆண்டுகள்.இப்படி 35 ஆண்டு காலம் கோலோச்சிய இயக்குனர்கள் தமிழ் திரையுலகில் வெகு குறைவு.தன் திரையுல வாழ்க்கையில் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைக் கண்டாலும்,தமிழ்த் திரையுலகை பல பரிமாணங்களுக்கு இட்டுச் சென்றவர்!. இளங்கோவன் என்றால் யாருக்கும் தெரியாது, இரத்தக் கண்ணீர் வசனகர்த்தா என்றால் எல்லாருக்கும் பளீச் சென்று தெரியும்.சிறீதருடைய சொந்த ஊரைச் சேர்ந்தவர்.இவருடைய தாக்கத்தாலேயே சிறீதர் திரையுலகில் நுழைந்தார். ஆனால் ஒரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால்,இளங்கோவனுடைய வசனங்கள் தீவிர தமிழ் வீச்சு உடையவை,அது போன்ற வசனங்களை சிறீதர் என்றுமே தன் பாணியாகக் கொண்டதில்லை.

இளங்கோவனின் வசனங்களின் பாணியைப் பின் பற்றி அண்ணாவும், அவரது சீடரான கருணாநிதியும் பெரு வளர்ச்சி கண்டிருந்த நேரத்தில், அதற்கு நேர் மாறாக இயல்பான வசனங்களை எழுதி அதனால் தன்னை தமிழகமே திரும்பிப் பார்க்கும் படி செய்தவர் சிறீதர்!.

இரத்தபாசம் என்ற திரைப் படத்தின் மூலமாக 1954-ல் ஸ்ரீதர் தமிழ்த் திரையுலகில் நுழைந்த போது அவருக்கு வயது வெறும் இருபத்தி ஒன்றுதான்!.அந்த நேரத்தில் எம்ஜிஆரின் மலைக்கள்ளனும்,சிவாஜியின் மனோகரா வும் வெளி வந்தன.இந்த இரண்டு படங்களுக்கு இடையேயும் T.K.சண்முகம் நடித்த இரத்த பாசம் பெரு வெற்றி பெற்றது.பிறகு அடுத்து வந்த வருடங்களில் எதிர் பாராதது, அமரதீபம், மகேஸ்வரி,எங்க வீட்டு மகாலட்சுமி, மஞ்சள் மகிமை,உத்தமபுத்திரன் போன்ற படங்களுக்கு வசனம் எழுதினார். இதில் எல்லாப் படங்களும் பெரு வெற்றி பெற்றன.சிறீதர் புகழ் பெற்ற வசனகர்த்தாக்களின் வரிசைப் பட்டியலில் இடம் பிடித்தார்.இதற்கடுத்து கல்யாணப் பரிசு படத்தை இயக்கியதும், அதை இயக்கும் போது முதலில் ஏற்பட்ட பிரச்சனைகளும் அனைவரும் அறிந்ததே,அதனால் அதைப் பற்றி விஸ்தாரமாகப் பேச ஒன்றும் இல்லை!.

சிறீதருடைய சினிமா கிராஃப்பல முறை மேலேறி கீழறங்கும் வித்தை கொண்டது. இவர் கல்யாணப் பரிசு போன்ற படங்களை கொடுத்த காலத்தில் சிவாஜியின் சொந்தப் படமான விடிவெள்ளி ஊற்றிக் கொண்டது.தேன்நிலவு போன்ற படங்கள் அப்போது தேல்வியைத் தழுவினாலும் இன்றும் பார்க்கும் போது ஆர்ச்சரியப் படவைக்கும் தன்மை கொண்டது.அடுத்து சிலிர்த்தெழுந்த சிறீதர் சுமைதாங்கி போன்ற படங்களில் எழுந்தார்.பிறகு கொடிமலர் போன்ற படங்கள் அவரது சுமையை ஏற்றின.ஆனால் நெஞ்சில் ஓர் ஆலயம் போன்ற படங்கள், அவரது திறமைக்குச் சான்றாக அமைந்தன. வெற்றியும் கண்டன.நெஞ்சம் மறப்பதில்லை ஒரு சராசரிப்படமாக இருந்தாலும் இன்றும் மக்களின் மனதில் நின்றபடம்!.

அடுத்த ஆட்டத்தை கலரில் ஆரம்பித்தார் காதலிக்க நேரமில்லை!.இதுவரைத் தமிழ்த் திரையுலகம் கண்டிராத காணமுடியாத அரும் பெரும் நகைச்சுவைப் படத்தை மக்களுக்கு அளித்தார்.அதுவரையில் பம்பாய் சென்றே கலர்ப்படங்களை பிரதியெடுத்தார்கள்.ஜெமினி நிறுவனம் தன்னுடைய கலர் லேப்பை ஆரம்பித்தவுடன் அதில் பிரதி எடுக்கப் பட்ட முதல் படம் இதுதான்!.

பின் ஊட்டி வரை உறவு. போன்ற படங்களையும் அவர் தந்தார். வெண்ணிற ஆடையில் அவருக்கு அடி விழுந்தாலும் அதில் நடித்த கலைஞர்கள் மிகவும் புகழ் பெற்றனர். அடுத்த கட்டமும் அவருக்கு மிகவும் சோர்வைத்தந்தது, நெஞ்சிருக்கும் வரை, போன்ற படங்கள் வரிசையாக அடி வாங்கின!. அவளுக்கென்று ஒரு மனம், சிவந்த மண் போன்ற படங்கள் வண்ணத்தில் எடுக்கப் பட்டாலும் பெரு வெற்றியைப் பெற்றுத் தரவில்லை. இன்னமும் அவளுக்கென்று ஒரு மனம் படப்பாடல்கள் அழியாப் புகழ் பெற்றவையாகவே இருக்கின்றன.

70 களில் சிவாஜியை வைத்து வைரநெஞ்சம் என்ற படத்தை உருவாக்கினார்.இது இவரது வாழ்க்கையிலேயேசிரமான கட்டம்தான் என்று சொல்ல வேண்டும்.இந்தப் படம் மகாத் தோல்வியைத் தழுவியது.மிகவும் சிரமத்திற்குள்ளான சிறீதர் அன்றைய சூப்பர்ஸ்டார் திரு.எம்.ஜி ஆரிடம் உதவியை நாடினார்.இவர் படம் எடுக்க ஆரம்பித்த காலத்தில் இருந்து ஒருமுறைகூட எம்ஜிஆரை வைத்து எடுத்ததில்லை. (ஒரு முறை அன்று சிந்திய ரத்தம் என்றப் படத்தை எம்ஜிஆரை வைத்து எடுக்க முயற்ச்சி செய்தார்..கைகூடி வரவில்லை) அதற்குக் காரணம் பல இருந்தன.சிறீதரைப் பொறுத்தவரை குறைந்த சம்பளம் உள்ள நடிகர்கள்,நல்ல தொழில் நுட்பக் கலைஞர்கள் ,நல்ல படம் ,நல்ல லாபம் என்ற அடிப்படைக் கொள்கையிலேயே இயங்கி வந்தார்.

இதனால் இவரது படங்கள் இயக்குனர் படம் என்றும் புகழ் பெற்றன.தம் தகுதியை அவர் அப்போது விட்டுக் கொடுக்காமலேயே இயங்கினார்.சிவாஜியை வைத்து இயக்கினாலும் அவர் இயக்குனர்களின் நடிகர் என்பதை மறக்கக் கூடாது.

தம்முடைய தொடர் தோல்வியினால் மனம் நொந்த நிலையில் எம்ஜிஆரை அணுகியதும் எம்.ஜி.ஆர் தன்னுடைய பெருந்தன்மையை நிரூபித்தார்.அடுத்தது ஆரம்பமானது சிறீதருடைய அடுத்த பரிமாணம். எம்.ஜி.ஆரை வைத்து எடுத்த உரிமைக்குரல் முழுக்க முழுக்க எம்.ஜி.ஆர் படமாக வெளிவந்தாலும் "விழியே கதையெழுது" என்ற பாடல் சிறீதருடைய டச்சிலேயே இருந்தது

*- தந்தி*

## சினித்துளி

### ஹீரோவாகிறார் வடிவேலு!



வடிவேலுவின் ஹீரோ ஆசை அத்தனை எளிதில் அவரை விட்டுப் போகும் என்று தெரியவில்லை. அதற்கு சாமரம் வீசுவதுபோல் அவரை தேடி வந்திருக்கிறார் சிம்பு தேவன்.

'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' படத்தின் தோல்விக்குப் பிறகு ஹீரோவாக நடிப்பதில்லை என்ற முடிவில் இருந்தார் வடிவேலு. சிம்பு தேவனிடமும் முதலில் இல்லையென்றுதான் கூறியிருக்கிறார். பிறகு கதையை கேட்ட பின் தனது பிடிவாதத்தை தளர்த்தி கொண்டிருக்கிறார்.விரைவில் வடிவேலு ஹீரோவாக நடிக்கும் படத்தின் அறிவிப்பை எதிர்பார்க்கலாம். இனி விஜயகாந்த் வடிவேலுவை காமெடி நடிகர் என்று குறிப்பிடமுடியாது.

### மாதவனின் தந்தையாக சத்யராஜ்!



நடிகர் மாதவனின் தந்தை வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் முன்னணி ஹீரோ சத்யராஜ்! ஏகப்பட்ட பாராட்டுக்களையும், விருதுகளையும் வென்ற ஒன்பது ரூபாய் நோட்டு திரைப்படத்துக்குப் பின் தங்கர் பச்சான் இயக்கும் படம் புதிய படத்தில்தான் இந்த இரு நாயகர்களும் கலக்க வருகிறார்கள். தங்கர் பச்சான் தன்னிடம் சொன்ன கதையைக் கேட்டதும், மாதவனின் தந்தையாக நடிக்க ஒப்புக் கொண்ட சத்யராஜ், எந்த தேதியில் வேண்டுமென்றாலும் வந்து நடித்துக் கொடுப்பதாகக் கூறிவிட்டாராம். ஐங்கரன் இண்டர்நேஷனல் தயாரிக்கும் இந்தப் பெயரிடப்படாத படத்தில் நடிப்பதன் மூலம் தனக்கு கூடுதல் அங்கீகாரம் கிடைக்கும் என்று நம்புகிறார் மாதவன்.இம்மாத இறுதியில் படம் குறித்த அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக வெளியிடவிருப்பதாக இயக்குநர் தங்கர் பச்சான் தெரிவித்தார்.

### நதியாவின் மலையாளப் பிரவேசம்!



முன்னாள் ஹீரோயின், இன்றைய நம்பர் ஒன் ஆன்ட்டி நதியா மொய்தீன் மீண்டும் தன் தாய் வீடான மலையாள திரையுலகில் பிரவேசிக்கிறார்.

பாசில் இயக்கிய பூவே பூச்சூடவா படம் மூலம் தமிழ் ரசிகர்களின நெஞ்சங்களில் அழுத்தமாக இடம் பிடித்தவர் நதியா.திருமணமாகி குழந்தை, குடும்பம் என மும்பையில் செட்டிலான வரை, மீண்டும் சுட்டி வந்தனர் எம் குமரன் குழுவினர்.இப்போது கைவசம் 3 தமிழ்ப் படங்களில் கதாநாயகியை விட வெயிட்டான ரோல்களில் நடித்துக் கொண்டிருக்கிறாராம் நதியா.அத்தோடு நில்லாமல், தனது தாய்மொழி மலையாளத்திலும் தன் திறமையைக் காட்டப் போய்விட்டார். கதபறயும்போல் சீனிவாசன், அவரது மகன் வினீத் சீனிவாசன் நடிக்கும் புதிய படத்தில் கதாநாயகிக்கு சமமான வேடத்தில் நடிக்கிறார் நதியா.

### மணிரத்னம் படத்தில் கார்த்திக், பிரபு



மணிரத்னம் இயக்கும் புதிய திரைப்படத்தில் அக்னி நட்சத்திரத்தில் இணைந்து நடித்த கார்த்திக், பிரபு இந்தப் படத்தில் மீண்டும் இணைந்து நடிப்பதாக செய்திகள் கூறுகின்றன. படத்தின் இந்தி பதிப்பில் அனுமானை நினைவுகூறும் கதாபாத்திரத்தில் கோவிந்தா நடிக்கிறார். தமிழில் அந்த வேடத்தை கார்த்திக் செய்யவிருப்பதாக கூறப்படுகிறது.விக்ரம், ஐஸ்வர்யாராய் ஆகியோருடன் ப்ருத்விராஜ், ப்ரியாமணி ஆகியோரும் நடிக்கிறார்கள்

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45 Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

## Authentic Sri Lankan & South Indian cuisine prepared by famous Experienced Chefs from India

BIRIYANI & CURRYS



Rice flavoured with saffron cooked with a mix of vegetables in a delicate blend of herbs and spices.

VEG KORMA



Mixed vegetables cooked with coconut.

DOSAI



Crepes made from a fermented batter of rice and urid(lentil)dhal served with Sambar (a thick stew of lentils with vegetables and seas ned with exotic spices) and two chutneys

FISH FRY



Fish Fried with Spices and Masala



பிரியமான உணவிற்க்கு உங்கள் பிரியா

RESTAURANT



Authentic Sri Lankan & South Indian cuisine prepared by famous Experienced Chefs from India

BANQUET HALL



Banquet Hall for small functions and Conferences

BAR



Offering you Choice of Sprits, Beers and Wine

PATIO



Enjoy our Outdoor Patio Dining..

★ Outdoor Catering ★ Party Orders ★ Function Hall ★

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

100 இடியப்பம் £12

# 020 8520 5552

# priya Restaurant

500 இடியப்பம் £50

**FULLY LICENSED & AIR CONDITIONED**

256, Hoe Street, Walthamstow, London - E17 3AX
(Close to Underground Station)


# HYPERTECH SHOPFITTERS

## ELECTRIC WIRING
## PLUMBING & CENTRAL HEATING

DOMESTIC AND COMMERCIAL



## REFRIGERATION




INSTALLATION
MAINTENANCE
REPAIRS
& PARTS



## CCTV

ACCESS CONTROL & NETWORKING
(DOMESTIC/COMMERCIAL)





FINANCE
OPTIONS AVAILABLE

CONTACT
DETAILS:

T: 0845 006 1166
M: 078 3366 7905
F: 020 8711 3145

TECH.CITITECH@GMAIL.COM

60 TORRINGTON WAY,
MORDEN, SURREY SM4 5QA